
லில்லியன் ஸ்டான்லி

# குட்டி இதயங்கள் குட்டிக் கதைகள்

100



தொகுப்பு 1

# குட்டி இதயங்கள்
# குட்டிக் கதைகள்

(தொகுப்பு 1)

**Dr. லில்லியன் ஸ்டான்லி,** MBBS, DCH.,
*மருத்துவ மிஷனரி*

*வெளியிடுவோர் :*
**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
சர்ச் காலனி, வேலூர் 632 006
தொலைபேசி : 00 91 416 2242943, 2248943
<hq@bym-india.org>
www.bym-india.org

**LITTLE STORIES FOR LITTLE HEARTS (**Tamil**)**
(Volume 1)
Copyright 2012 LILIAN STANLEY

First Edition : November 2012

Available in English also.

Printed by
New Shenbagam Offset,
Sivakasi

# கதை பிறந்த கதை!

*என் அம்மா எனக்குச் சொல்லிய கதைகள் என்னை மயக்கின. என் மகள் இவாஞ்சலினுக்கு, ஒருவேளை இரண்டு வயதிலிருந்தே, வேதக் கதைகளைச் சொல்லத் துவங்கினேன். நான் ஆதாம்-ஏவாள், காயீன்-ஆபேல், பவுல்-பேதுருவையும் மற்றும் ஆதியாகமத்திலிருந்து வெளிப் படுத்தல்வரை உயிரோடு எழுப்பி அவள்முன் நிறுத்தும்போது வாய்க்குள் ஈ போவது தெரியாமல் கவனிப்பாள். குளிப்பாட்டும்போதும் உணவூட்டும் போதும் தூங்கவைக்கும்போதும் கதைகள் சொன்னேன். சுமார் ஐந்து வயதானபோது, "அதெல்லாம் எனக்குத் தெரியும். வேதத்திலில்லாத கதைகள் சொல்லுங்கள்" என்று சொல்லத் துவங்கினாள்! ஞாயிறு வகுப்பு ஆசிரியைகள், "அவளை அனுப்பாதீர்கள், பெரிய தொல்லையாயிருக்கிறது. நாங்கள் கதையை ஆரம்பித்தால் அவள் முடித்துவிடுகிறாள்" என்றனர்.*

*ஆகவே அவளது கவனத்தைச் சிறைபிடிக்க வேறு கதைகள் சொல்லி அதன்பின் வேதத்திற்குச் செல்லலானேன். மற்றப் பிள்ளைகள் அவளைச் சேர்ந்துகொள்ள அது 110 பிள்ளைகள் கொண்ட ஓய்வுநாள் பள்ளியானது. டாக்டர் மெகாடனுடைய மருமகள் அதில் 10 வயது நாகேஸ்வரியாகப் பங்கேற்றாள். இன்று அவர்கள் ஸ்காட்லாந்தில் டாக்டர் லேயாவாக இருக்கிறார்கள்.*

*அதன் பிறகு என் மகளுக்கு மகள் பிறந்தாள். முழு வட்டம் சுற்றி, துவங்கின இடத்திற்கே வந்து சேர்ந்தேன். என் பேத்தியைக் குளிப்பாட்டும் போதும் உணவூட்டும் போதும் தூங்கவைக்கும் போதும் ஆதியாகமத் திலிருந்து வெளிப்படுத்தல்வரை கதை சொன்னேன். அதே குறைகூறல் துவங்கியதால் என் தாய் எனக்குச் சொல்லிய கதைகளையும் நான் என் மகளுக்குச் சொல்லியவைகளையும் நினைவுபடுத்திக் கொள்ளலானேன். அவளது சிநேகிதர் சேர்ந்துகொண்டதால் எண்ணிக்கை எட்டு ஆனது. சமீபத்தில் அதில் ஆறு பேர் தங்களை ஆண்டவருக்கு அர்ப்பணித்தனர்.*

*இவை என் சொந்தக் கதைகளல்ல—ஒருசில தவிர. இவை நான் கேட்டவையும் வாசித்தவையும். சில ஈசோப்பின் கதைகள், சில ஃபேரி டேல்ஸ் மற்றும் சில கிராமத்துக் கதைகள். சில எனக்கு அரைகுறையாக*



*மட்டுமே நினைவிருந்ததால் மூக்கு காதுகள் சேர்த்து முழுமையாக்க வேண்டியதாயிற்று. பெயர்கள் மாறி இருக்கலாம். கடவுளை உள்ளே நுழைப்பதற்காக என் சொந்தப் பாணியிலும் மாற்றியிருக்கிறேன்.*

*ஒரு கட்டத்தில் வேலை மிகுதியால் பிள்ளைகளுக்குப் போதிப்பதை நிறுத்திவிட்டேன். பின்பு நமது லக்னோ மிஷனரி சுகந்தினி சரவணனி டமிருந்து தொலைபேசி வந்தது. அவளது மகள் நிட்டா ஒரு ரோஜாமொட்டு. ( Rosebuds என்றுதான் அவர்களை அழைத்தேன்). "தயவுசெய்து பிள்ளைகளுக்குப் போதிப்பதை நிறுத்திவிடாதீர்கள். நிட்டா அதில் அதிகமாக வனையப்பட்டாள். அவ்வவ்பொழுது நின்று "WWJD ?" என்று கேட்டுக்கொள்வாள். தினமும் முடியாவிட்டாலும் அவ்வப்போதாவது கற்பியுங்கள்" என்றாள் சுகந்தினி. ஆகவே ரோஜா மொட்டுகள் மறுபடி துவங்கப்பட்டு தொடர்கிறது (சுமார் ஐந்து வருடங்களாக).*

*2011இல் யாரோ வீட்டுக் கதவைத் தட்டினார்கள். வாலிபனொருவன் உள்ளே நுழைந்து தான் வேலூர் CMC மருத்துவமனையிலிருந்து வருவ தாகவும், டாக்டர் பிரதீப் என்றும் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டான். அவனை ஏழு வயது பையனாகப் பார்த்திருந்தேன். அவனது அம்மா, அவனது முதல் சம்பளத்தை என் கையில் கொடுத்து ஜெபித்துச் செல்லும்படியாகச் சொல்லி அனுப்பியிருந்தார்கள். அதைச் சந்தோஷமாய் செய்தேன். நாங்கள் குவைத் போகும்போதெல்லாம் அவர்கள் வீட்டில்தான் தங்குவோம். அவனைக் குறித்து எனக்கு ஞாபகம் இருந்ததெல்லாம்—அவனது பெற்றோர் அவனைப் பள்ளிக்கு ஆயத்தமாக குளியலறைக்குள் விரட்டிவிடுவார்கள். அதிக நேரம் வெளியே வரமாட்டான். நான் சந்தேகப்பட்டு எட்டிப் பார்ப்பேன். அவன் குளியல் தொட்டிக்குள் (tub) ஆழ்ந்த நித்திரையாயிருப்பான்! சமீபத்தில் அவனது தாய் எனக்குப் ஃபோன் செய்து நான்தான் அவனை இரட்சிப்பில் நடத்தியதாகவும் அவனுக்கு முதலாவது சிறுவர் வேதாகமத்தைக் கொடுத்ததாகவும் கூறினார்கள். வியந்தேன். பிரதீப்பிற்குத் திருமணம், நீங்கள் இருவரும் வரவேண்டும் என்றார்கள்.*

*இன்று (8 ஆகஸ்டு 2012) பிரதீப் எங்களைச் சந்தித்து தனது திருமண அழைப்பிதழைக் கொடுத்தான். "நீ சிறுவனாயிருந்தபோது என்னோடு செலவழித்த நாட்கள் நினைவிலிருக்கிறதா ?" என்று கேட்டேன். அவன் சொன்னது இதுதான்: "ஆன்டி, நீங்கள் கிட்டார் போட்டு எனக்குக் கதை சொல்லுவீர்கள். ஒருமுறை கடற்கரைக்கு என்னுடைய நாயைக் கூட்டிக்கொண்டு சென்றோம். அப்போது என்னுடைய நாயைப் பார்க்க சுமார் இருபது அரபி பிள்ளைகள் நம்மைச் சூழ்ந்துகொண்டனர். நீங்கள் ஏதோ மொழியில் இயேசுவைக் குறித்து அவர்களுக்குச் சொல்லி பாதிக்குப் பாதியாவது அவர்களைப் புரிந்துகொள்ளச் செய்தீர்கள். பின்பு என்னிடம் சொன்னீர்கள்: பார் பிரதீப், நற்செய்தி அறிவிக்க ஒரு நாய் போதும்; வேறொன்றும் தேவையில்லை." இவ்வாண்டு பிரதீப்பிற்குத் திருமணமானது.*

*இப்போது M.D. செய்கிறான். கடவுளைச் சேவிக்கத் தனது வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கிறான். அவனது வாழ்க்கையில் பலரும் முக்கியப் பங்கு வகித்திருப்பதால் அவன் "என்" கனி என்று நான் சொல்ல விரும்பவில்லை.*

*என்னைப் பெருமைப்படுத்திக் கொள்வதற்காக இதையெல்லாம் சொல்லவில்லை. குட்டி இதயங்களில் கடவுளுடைய வார்த்தையாகிய விதைகளை எங்கெங்கே அவர்களைப் பார்க்கிறீர்களோ, எவ்வெப்போது தருணம் கிட்டுகிறதோ, அப்போதெல்லாம் விதைத்துவிடுங்கள் என்று உங்களை உற்சாகப்படுத்துவதற்காகத்தான் சொல்கிறேன்.*

*இன்று தம் சிறு பிள்ளைகளின் கவனத்தை எப்படி ஈர்ப்பது என்று பல தாய்மாருக்குத் தெரியவில்லை என்று காண்கிறேன். பிள்ளைகள் ஓய்வுநாள் பள்ளி போர் அடிக்கிறது என்று சிணுங்குகிறார்கள். இந்தக் கதைகளை எழுதினால் அம்மாமாருக்கும் ஆசிரியருக்கும் கைகொடுக்குமே என்று எண்ணினேன். 2முதல்12 வயதினரை மனதிற்கொண்டு எழுதியுள்ளேன். எளிய நடையில் எழுதப்பட்டுள்ளதால் சிறுவரும் வாசிக்கலாம், வர்ணம் தீட்டலாம். இறையரசின் சொந்தக்காரரான சிறுபிள்ளைகள் வழியில் தொலைந்து போகாமல் இறையரசின் குடிகளாக வளர்ந்துவிட வேண்டுமென்பதே என் வாஞ்சை.*

*இந்தப் புத்தகத்தைத் தாய்மாருக்கும் பாட்டிமாருக்கும் ஓய்வுநாள் பள்ளி ஆசிரியருக்கும் பிள்ளைகளுக்கும் பிரசங்கிகளுக்கும் பிறந்தநாள் அன்பளிப்பாகவும் கொடுக்கலாம்.*

*கை கால் ஆட்டி, மேலும் கீழும் நடந்து, நடனமாடி, நடித்து, பாடல் பாடி, முகத்தில் பாவனைகளைக் காட்டி பிள்ளைகளின் கவனம் சிதறாதபடி தொண்டையிலிருந்து சப்தங்கள் எழுப்பி இக்கதைகளைச் சொல்ல வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு கதை மட்டுமே வாசியுங்கள்.*

*அசல் கதையை அறிந்தவர்கள் என்னுடைய படைப்பில் பல தவறுகளைக் கண்டுபிடிப்பீர்கள் என்றும் என் தவறுகளைச் சுட்டிக்காட்டிப் பல கடிதங்கள் வரும் என்றும் நிச்சயமாயிருக்கிறேன். வரவேற்கிறேன்! அவை அடுத்தப் பதிப்பிற்குப் பயனுள்ளதாகும். கடவுள் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.*

*Lilian Stanley*
*<lilianstanley@gmail.com>*
*www.lilianstanley.com*



# நன்றி, நன்றி!

ஒருவராய் எழுதப்படுவதல்ல ஒரு புத்தகம். அது ஒரு குழு முயற்சி. இந்த முதுகுவலி கொடுக்கும் வேலையில் எனக்குக் கைகொடுத்த ஒவ்வொரு வரையும் நன்றியோடு நினைவுகூருகிறேன்—
ஆங்கிலத்தைத் தட்டெழுத்து செய்த தலித்தா, அச்சுப்பிழை திருத்தம் செய்த திரு. செல்வின், படங்கள் தெரிந்தெடுத்த திரு. பெனடிக்ட், தமிழ் தட்டெழுத்து செய்த திரு. தீன் மற்றும் இறுதி நிலைக்குக் கொண்டுவந்த எனதருமைக் கணவர். அசல் கதைகளின் ஆக்கியோருக்கும் நன்றியுள்ள வளாயிருக்கிறேன். அவர்களது கதையை எடுத்து ஏதோ ஓர் உருவத்தில் பயன்படுத்தியிருக்கிறேன். அவர்களுக்கும் இப்புத்தகத்தின் ஆசியில் பங்குண்டு. மேற்குறிப்பிடப்பட்ட அனைவரையும் கடவுள் ஆசீர்வதிப்பாராக!

***லில்லியன் ஸ்டான்லி***

## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | கடவுள் இருக்கிறாரா? | ... | 11 |
| 2. | அன்பின் மொழி! | ... | 12 |
| 3. | குற்றமுள்ள நெஞ்சு | ... | 13 |
| 4. | ரோஜாவின் மடமை | ... | 14 |
| 5. | சிறைக்கு நடத்திய ஊசி! | ... | 15 |
| 6. | சிறந்த கிறிஸ்துமஸ் பரிசு! | ... | 17 |
| 7. | அதிசயப் பரிசு! | ... | 19 |
| 8. | தூக்கி எறியப்பட்ட மன்னிப்பு! | ... | 20 |
| 9. | இயேசு வந்தார்! | ... | 22 |
| 10. | இரத்த தானம்! | ... | 24 |
| 11. | தகப்பனா நீதிபதியா? | ... | 25 |
| 12. | பார்வையற்ற குழந்தை | ... | 27 |
| 13. | உன் இயேசு எவ்வளவு வல்லவர்? | ... | 27 |
| 14. | மறைக்கப்பட்ட பாவம்! | ... | 28 |
| 15. | சகோதரனின் தியாகம்! | ... | 30 |
| 16. | டமாக்ளியஸ் | ... | 31 |
| 17. | கிழட்டுக் கழுதை | ... | 32 |
| 18. | காணாமற்போன குன்று | ... | 34 |
| 19. | கூனன் ரிக்கி! | ... | 35 |
| 20. | மீனவனும் மனைவியும் | ... | 36 |
| 21. | தாயின் அழகிய கரங்கள்! | ... | 39 |
| 22. | அசிங்கமான வாத்துக்குஞ்சி! | ... | 41 |
| 23. | ஷேர்லியின் நம்பிக்கை | ... | 43 |
| 24. | கிறிஸ்துவா யூதாசா? | ... | 44 |





| | | | |
|---|---|---|---|
| 25. | தங்க அரிசி! | ... | 46 |
| 26. | நீல நரி | ... | 47 |
| 27. | குரங்கும் முதலையும் | ... | 48 |
| 28. | ஐந்து காளைகள் | ... | 51 |
| 29. | புலி, புலி…! | ... | 52 |
| 30. | சிகப்புக் குட்டி | ... | 53 |
| 31. | சிலுவை | ... | 55 |
| 32. | ஹான்சலும் கிரீடாவும் | ... | 57 |
| 33. | பண்டோராவின் பெட்டி | ... | 59 |
| 34. | புதையல் வேட்டை | ... | 61 |
| 35. | விலையேறப்பெற்ற முத்து1 | ... | 62 |
| 36. | வளர்ப்புப் புலி | ... | 63 |
| 37. | உதவும் கரங்கள் | ... | 64 |
| 38. | சிங்கமும் முயலும் | ... | 65 |
| 39. | முயலும் புத்திசாலி ஆமையும் | ... | 67 |
| 40. | கெட்ட கொக்கு | ... | 68 |
| 41. | புதையல் | ... | 69 |
| 42. | சிங்கமும் எலியும் | ... | 71 |
| 43. | குதூகலமான குருவிகள் | ... | 72 |
| 44. | எறும்பும் புறாவும் | ... | 73 |
| 45. | எச்சரிக்கை: காட்டுத் தீ! | ... | 74 |
| 46. | உழைப்பின் அற்புதம்! | ... | 75 |
| 47. | ஒரே ஒரு புத்தி! | ... | 77 |
| 48. | வெறுங்கால்! | ... | 78 |
| 49. | மூலையில் ஒரு மெழுகுவர்த்தி! | ... | 79 |

| | | | |
|---|---|---|---|
| 50. | பன்றிகளும் பீன்சும்! | ... | 81 |
| 51. | புத்தியுள்ள சிறுமி | ... | 82 |
| 52. | திருடன் | ... | 83 |
| 53. | இரட்டைக் கிளி | ... | 84 |
| 54. | மிதந்த கோடரி | ... | 85 |
| 55. | சிருஷ்டிகர் | ... | 86 |
| 56. | எங்கே போகிறோம்? | ... | 88 |
| 57. | ஆடுகள் கற்பித்த பாடம் | ... | 89 |
| 58. | தாய்க் கோழி | ... | 90 |
| 59. | கெட்ட இருதயம் | ... | 91 |
| 60. | மூன்று திருடர் | ... | 92 |
| 61. | ஜெபிக்கும் கரங்கள் | ... | 93 |
| 62. | முட்டாள் யார்? | ... | 94 |
| 63. | அழகிய கறை | ... | 95 |
| 64. | யாரைப் பின்பற்றுகிறீர்கள்? | ... | 96 |
| 65. | கீரியும் பிள்ளையும் | ... | 97 |
| 66. | உறுதியான அன்பு | ... | 98 |
| 67. | ஒரு மூட்டை தங்கத்தின் விலை | ... | 101 |
| 68. | ஏமாற்றாதே | ... | 102 |
| 69. | கம்பளத்திற்கு அடியில் | ... | 103 |
| 70. | காக்கும் கிருபை! | ... | 104 |
| 71. | கலைஞனின் தொடுதல்! | ... | 105 |
| 72. | குற்றமுள்ள மனச்சாட்சி | ... | 106 |
| 73. | தாயின் அன்பு | ... | 108 |
| 74. | எல்லாரிலும் அழகிய தாய்! | ... | 109 |





| | | | |
|---|---|---|---|
| 75. | மிடாஸ் அரசன் | ... | 110 |
| 76. | அச்சரிபச்சா கொழுக்கட்டை! | ... | 111 |
| 77. | புதிய சட்டங்கள் | ... | 112 |
| 78. | பால்காரி | ... | 113 |
| 79. | நூறு ரூபாயின் மதிப்பு | ... | 114 |
| 80. | தாயின் கரங்கள்! | ... | 115 |
| 81. | மேலே நோக்குங்கள்! | ... | 117 |
| 82. | அருமையான ஈவு! | ... | 118 |
| 83. | ஷீ | ... | 119 |
| 84. | காகமும் முத்துச் சரமும் | ... | 121 |
| 85. | குருடன் யார்? | ... | 122 |
| 86. | திருட்டுக் காக்கா | ... | 123 |
| 87. | பொன் முட்டையிடும் வாத்து | ... | 124 |
| 88. | ஒருவருக்கொருவர் பராமரிப்பு! | ... | 124 |
| 89. | சிலுவைகள் | ... | 125 |
| 90. | கபடற்ற சிறுவன் | ... | 126 |
| 91. | தேவை ஆறடி மட்டுமே! | ... | 127 |
| 92. | மிங்க் | ... | 128 |
| 93. | சத்தியத்தைப் பறைசாற்றுங்கள்! | ... | 129 |
| 94. | பாவத்தினாலல்ல! | ... | 130 |
| 95. | வேதத்திற்குள்ளே ... | ... | 131 |
| 96. | கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! | ... | 133 |
| 97. | காக்காவா சாக்லேட்டா? | ... | 134 |
| 98. | பயிற்சி | ... | 135 |
| 99. | நரி நண்பர்கள் | ... | 136 |
| 100. | WWJD? | ... | 138 |

# 1

# கடவுள் இருக்கிறாரா?

இரண்டு விஞ்ஞானிகள் இருந்தனர். ஒருவர் உண்மையான கடவுளை நம்புபவர்; அடுத்தவர் கடவுளே கிடையாது என்று நம்பும் நாத்திகர். விசுவாசியாகிய டாக்டர் ரான் எப்படியாவது டாக்டர் ரோனால்டை கடவுள் நம்பிக்கையுடையவராக்க வேண்டுமென்று முயற்சிக்கும்போதெல்லாம் ரோனால்டு சிரித்து நழுவிவிடுவார்.

கடவுள் இருக்கிறார் என்று தன் நண்பனுக்கு நிரூபிக்க ரான் ஒரு யுக்தியை யோசித்தார். தனது வீட்டில் ஒரு இருட்டறையை ஆயத்தப்படுத்தினார். அவ்வறையில் சூரியன் போல ஒரு பெரிய மஞ்சள் விளக்கைப் பொருத்தினார். மற்றொரு விளக்கு நிலாவைப்போல சூரியனைச் சுற்றிவரச் செய்தார். வட்ட வடிவான கம்பிகளில் பூமி மற்றும் பிற கோளங்களும் நட்சத்திரங்களும் சுற்றிவரும்படிச் செய்தார். ஒரு பொத்தானை அழுத்தினவுடனே சூரியன் ஜொலிக்கும்; சந்திரன், பூமி, நட்சத்திரங்கள் மற்றும் கோளங்கள் அதைச் சுற்றிச் சுற்றி வரும்.



எல்லாவற்றையும் பொருத்திவிட்டு டாக்டர் ரோனால்டை விருந்துக்கு ஒருநாள் அழைத்தார். இரவு விருந்து முடிந்ததும் ரோனால்டை இருட்டறைக்கு அழைத்துச் சென்றார். பொத்தானை அழுத்தினதும் டாக்டர் ரானுடைய படைப்பு செயல்படத் துவங்கியது. டாக்டர் ரோனால்டு அதனுடைய அழகையும் மின் நுணுக்கத்தையும் பார்த்து அசந்தவராய், "பிரமாதம், பிரமாதம்! யார் இதையெல்லாம் செய்தது? இந்தப் படைப்பிற்குப் பின்னே செயல்பட்ட அதிசய மூளை யாருடையது?" என்று மெய்சிலிர்ப்பை அடக்க முடியாதவராய்க் கூவினார். ரான் அலட்டிக் கொள்ளாமல், "ஆ, யாரும் இதைச் செய்யவில்லை; அது அப்படியேதான் இருக்கிறது" என்றார். விவாதம் சூடுபிடித்தது. இறுதியில் ரான் சொன்னார், "மின் சக்தியினால் செய்யப்பட்ட இந்தச் சிறிய அமைப்பை யாரும் செய்யவில்லை என்று சொன்னால் நம்ப மறுக்கிறாய். ஆனால் இந்த அண்டசராசரங்களும் யாரும் உருவாக்காமல் அவையாகவே இருக்கின்றன என்பதை நம்பி ஏற்றுக்கொள்ளுகிறாயே!"



ரோனால்டு வெட்கித் தலைகுனிந்தார். அந்த நாளிலிருந்து கடவுளுடைய படைப்புகள், சிறிய புல்லிலிருந்து பெரிய யானைவரை அவருடைய இதயத்தில் கடவுளைக் குறித்துப் பேசத் துவங்கின.

# 2

# அன்பின் மொழி!

ஊரில் சர்க்கஸ் நடந்து கொண்டிருந்தது. கூட்டம் டிக்கெட் வாங்க முண்டியடித்துக் கொண்டிருந்தது. ஒரு நாள் விநோதமான ஒரு காரியம் நடந்தது. சர்க்கஸ் யானை ஒன்றிற்கு மதம் பிடித்துவிட்டது. அந்த யானையின் பெயர் போசோ. தனது பாகனைக் கொல்ல முயற்சித்தது. அவன் அதைச் சாட்டையால் அடித்து, அதட்டி, அடக்க முயன்றான். அதனுடைய இரும்புக் கூட்டுக்குள் போசோ பிளிறிக்கொண்டு சுற்றிச் சுற்றி வந்தது. இறுதியில் அதைக் கட்டுப்படுத்தமுடியாமல் இனி அதைச் சுட்டுவிடுவதுதான் ஒரே வழியென தீர்மானிக்கப்பட்டது. துப்பாக்கி தூக்கப்பட்டது. அந்த நேரத்தில் ஒரு சிறுத்த மனிதர் கூட்டத்திலிருந்து முன்வந்தார். அவர் போசோவின் கூட்டிற்குள் சென்று அதை அமைதிப்படுத்த உத்தரவு கேட்டார். அதிகாரி சற்று கவலை கொண்டாலும் யானையைச் சுட மனமற்றவராய் கூட்டின்



கதவைத் திறந்து அந்த மனிதரை உள்ளே விட்டார்.

போசோ கோபமாகத் திரும்பி அவரைச் சிவந்த கண்களுடன் முறைத்துப் பார்த்தது. அம்மனிதர் மெல்லிய குரலில் மென்மையாகப் பேசத்துவங்கினார். போசோ அங்கு மிங்கும் நடப்பதை நிறுத்தி கவனித்தது. "செல்லமே" என்றார். "நீ நிஜமாகவே கண்ணு, ராஜாத்தி, தங்கம், உன்னை எவ்வளவு நேசிக்கிறோம்" என்று கொஞ்சி தொடர்ந்து அப்படியே பேசிக்கொண்டிருந்தார். போசோ தளர்ந்து சிறு குழந்தை போல ஒரு சப்தமிட்டு அடங்கியது. ஆச்சரியத்தில் ஆழ்ந்த கூட்டம் கரவொலி எழுப்பியது.

அம்மனிதன் உலகமறிந்த ருட்யாட் கிப்ளிங் என்ற ஞானி. சாட்டையும் பயமுறுத்தல்களும் செய்யக்கூடாததை அன்பு சாதித்தது. நாம் அன்பின் மொழியைப் பேசக் கற்றுக்கொள்ள வேண்டும். கடுமையான, புண்படுத்தும் வார்த்தைகளைப் பேசுவதை விட்டு அன்பின் மொழியை மட்டுமே பேசுவோம். அது யாரையும் அமைதிப் படுத்தி எவருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டுவிடும்.

## 3

## குற்றமுள்ள நெஞ்சு

திருடனொருவன் வங்கியொன்றில் பணத்தைத் திருடிவிட்டு தோளில் பணப்பையைப் போட்டுக்கொண்டு இரவில் சென்று கொண்டிருந்தான். மழை பெய்ய ஆரம்பித்தது. அப்பொழுது ஒரு போலீஸ் வேன் வந்தது. அதில் கனிந்த இதயமுள்ள ஒரு போலீஸ் அதிகாரி அமர்ந்திருந்தார். அவர் திருடனைப் பார்த்தவுடன், பாவம்,



யாரோ ஒருவர் மூட்டையுடன் மழையில் நனைந்துகொண்டு செல்கிறாரே என்று நினைத்தார். உடனே ஓட்டுனரை அவனருகில் வேனை நிறுத்தி ஏற்றிக்கொள்ளச் சொன்னார்.

போலீஸ் வேனைப் பார்த்தவுடன் கள்ளன், தன்னைப் போலீஸ் தொடருகிறது என்று நினைத்து ஓடத் துவங்கினான். ஓட்டுனர் வண்டியை வேகமாய் ஓட்டவும் கள்ளன் இன்னும் வேகமாக ஓடினான்.



இறுதியில் அவனைத் தொடர்ந்து பிடித்த தும்தான் அவன் திருடிவிட்டு ஓடுகிறான் என்று தெரியவந்தது.

குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்குமல்லவா? அதுவே நம்மைக் காட்டிக்கொடுத்துவிடும். குற்றவுணர்வை உண்டாக்கக் கூடிய எதுவொன்றையும் நாம் செய்யக் கூடாது. குற்றவுணர்வு இருக்குமானால் மனிதரோடும் கடவுளோடும் காரியத்தைச் சரிசெய்ய வேண்டும்.

## 4

## ரோஜாவின் மடமை

ரோஜா நல்ல பிள்ளைதான், ஆனால் படிப்பில் கெட்டியல்ல. கஷ்டப்பட்டுப் படிக்க அவளது தாயார் ஊக்கப்படுத்தினாலும் புத்தகத்தை எடுக்க ரோஜா சோம்பல்படுவாள். பரீட்சையில் தனது சிநேகிதியின் பதில்களைக் காப்பியடிப்பதையே சுலபமாக எண்ணினாள். அவளுடைய தாயார் ரோஜாவின் கவலையீனத்திற்காக கவலைப்பட்டு ஜெபித்து வந்தார்கள்.

இரண்டாம் வகுப்பு பரீட்சை நெருங்கிக்கொண்டிருந்தது. ரோஜாவின் தாய் அவளைப் படிக்கக் கூப்பிடும்போதெல்லாம் அவள்,



"மம்மி, கவலைப்படாதீர்கள். நான் நல்ல மதிப்பெண்கள் வாங்குவேன்" என்பாள்.

பரீட்சை முடிந்தது. தலைமை ஆசிரியையைச் சந்திக்கச் சொல்லி ரோஜாவின் தாயாருக்குக் கடிதம் வந்தது. என்ன நடந்தது தெரியுமா? ரோஜா தன் சிநேகிதியின் பதில்களைக் காப்பியடித்திருந்தாள். "உன்னுடைய தகப்பனாரின் பெயரென்ன? உன் தாயாரின் பெயர் என்ன? உன் பிறந்தநாள் எது?" போன்ற கேள்விகள் கேட்கப்பட்டிருந்தன. ரோஜா தன் சிநேகிதியின் நோட்டில் இருந்தபடியே பார்த்து எழுதியிருந்தாள். குழம்பிய ஆசிரியை இருவரையும் அழைத்து: "நீங்கள் இரட்டையரா?" என்று வினவினார்கள். குட்டு வெளியே வந்தது, ரோஜா கடுமையாக தண்டிக்கப்பட்டாள். ரோஜாவும் அவளது பெற்றோரும் அவமானம் அடைந்தனர். ரோஜா துக்கப்பட்டு பெற்றோரிடம் மன்னிப்புக் கோரி இனி திருந்துவதாக வாக்களித்தாள்.

ஏமாற்றுதல் உங்களைப் பின்னடையச் செய்யும்; கடின உழைப்பு முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

## 5

## சிறைக்கு நடத்திய ஊசி!

பள்ளியிலிருந்து வீடு திரும்பும் வழியில் மோகன் ஒரு தையல்காரர் தைத்துக்கொண்டிருந்ததை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். தையல்காரர் எழுந்து உள்ளே போனபோது மோகன் அந்த ஊசியைத் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டான். அதை அவன் தன் தாயாரிடம் கொடுத்தபோது அவர்கள் நன்றி சொல்லி வாங்கிக்கொண்டு தன் தையல் வேலைக்குப் பயன்படுத்தினார்கள்.





பையன் வளர்ந்து ஐந்தாம் வகுப்பில் தன் சகமாணவனின் பேனாவைத் திருடி வீட்டிற்குக் கொண்டுவந்து தன் தாயாரிடம் கொடுத்தான். அவர்கள் எழுதிப் பார்த்தபோது அது மிக நன்றாக எழுதியது. அவர்கள் அதைக் கடிதங்கள் எழுதப் பயன்படுத்தத் துவங்கினார்கள்.

மோகன் பெரியவனாகி 10 ஆம் வகுப்பு படிக்கலானான். ஒருமுறை தன் நண்பரோடு சேர்ந்து ஒரு வங்கிக் கொள்ளையில் பங்கெடுத்தான். ஆனால் அக்குழு போலீசாரால் பிடிக்கப்பட்டு சிறைச்சாலைக்கு மோகன் அனுப்பப்பட்டான்.

மோகனின் தாயார் அவனைப் பார்க்க வந்தார்கள். தன் மகன் கம்பி எண்ணிக் கொண்டிருப்பதைக் கண்டு கண்ணீர் வடித்தார்கள். "அம்மா, கிட்டே வாருங்கள்" என்றான் மோகன். அவர்கள் கிட்டே வந்தார்கள். "இன்னும் அருகில் அம்மா" என்றான். அம்மா நெருங்கி வந்தார்கள். "இன்னும்" என்றான். அவர்கள் அவனண்டையில் வந்தார்கள். இன்னும் நெருங்கி, நெருங்கி அவர்களது மூக்கு கம்பிகளுக்கிடையே வரும்வரை நெருங்கினார்கள். திடீரென்று மோகன் அவர்கள் மூக்கைக் கடித்துக் கீழே துப்பினான். தாயார் வேதனையில் அலறினார்கள். மோகன் சொன்னான், "நான் ஊசியை உங்களிடத்தில் கொண்டுவந்தபோது என்னைத் திட்டி, அடித்திருந்தீர்களானால் இன்று நான் கம்பி எண்ணிக்கொண்டிருக்கமாட்டேனே."

சின்னத் தவறுகளை உடனே திருத்திக் கொள்ளாவிடில் நாளடைவில் பெரும் வீழ்ச்சிக்கு அவை நடத்தும்.

# 6

# சிறந்த கிறிஸ்துமஸ் பரிசு!



குன்று ஒன்றின் அருகில் ஓர் ஏழை விதவை வசித்து வந்தாள். அவளுக்கு இரு பிள்ளைகள். ராஜுக்கு வயது 8, ராணிக்கு 5. குன்றின் உச்சியில் ஓர் ஆலயம் இருந்தது. ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்மஸ் அவ்வாலயத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடப்படும். சுற்றுமுற்றுமுள்ள மக்கள் ஒரு விசேஷித்த காரணத்திற்காகக் கிறிஸ்மஸ் தினத்தன்று அங்கு கூடுவர். கிறிஸ்துவுக்காகக் கொடுக்கப்படும் காணிக்கைகளில் மிகச் சிறந்ததை அறிவிக்க தேவதூதர் வருகை தருவதே அக்காரணம். எல்லாரும் தங்கள் தங்கள் உசிதக் காணிக்கைகளைக் கொண்டுவந்து படைப்பர். அவற்றில் மிகவும் உன்னதமான காணிக்கை வைக்கப்படும் போது தேவதூதர் ஆலயத்தின் மணிகளை ஒலித்து அமுத கானத் தினால் சபையாரை மெய்சிலிர்க்கச் செய்வர்.

கிறிஸ்மஸ் நெருங்கிக் கொண்டிருந்தது. சிறப்பு ஆராதனையில் பங்கேற்று ஆலய மணியின் ஓசையைக் கேட்க ராஜும் ராணியும் ஆவலுடன் காத்திருந்தனர். துக்ககரமாக தாய் சுகவீனமானாள். ஒரு வாரமாக அவளுக்கு வேலைக்கும் போகமுடியவில்லை, கிறிஸ்மஸிற்கு நல்லுணவு சமைக்கவும் முடியவில்லை. அவளுக்குக் கிறிஸ்மஸ் ஆராதனைக்குச் செல்லவும் முடியவில்லை. இருந்தாலும் பிள்ளை களை ஆயத்தப்படுத்தி இருவருக்கும் இரண்டிரண்டு பன்களும் ஆளுக்கு ஒரு ரூபாய் காணிக்கையும் கொடுத்து அனுப்பினாள். குளிர்காலமாதலால் இருவரும் கம்பளிச் சட்டையைப் போட்டுக் கொண்டு குன்றைநோக்கி நடக்கத் துவங்கினர்.

குன்றின் அடிவாரத்தில் தாத்தா ஒருவர் குளிரில் சுருண்டு கிடப்பதைக் கண்டனர். பிள்ளைகளைப் பார்த்தவுடன் கெஞ்சி கரம் நீட்டினார். பிள்ளைகள் ஆளுக்கொன்றாக கொடுத்த பன்களை



பசியோடு அவசரமவசரமாக சவைத்து விழுங்கினார். அவரது அகோரப் பசியைக் கண்ட பிள்ளைகள் மற்ற பன்களையும் கொடுத்துவிட்டனர். ஒரு கம்பளிச் சட்டை கொடுக்கும்படிக் கேட்டார். ராஜ் கொடுத்த சட்டையைப் போட்ட பின்பும் நடுங்கிக்கொண்டே இருந்தார். "ஐயோ பாவம், இன்னும் நடுங்குகிறார் தாத்தா" என்று சொன்ன ராணி தன்னுடைய கம்பளிச் சட்டையையும் கொடுத்தாள். தாத்தாவின் நடுக்கம் நின்றது. அவர் புன்முறுவலுடன் கரங்களை நீட்டி பிள்ளைகளை ஆசீர்வதித்து, "போய் வாருங்கள்" என்றார். நேரமாகிவிட்டதால் பிள்ளைகள் ஓட்டம் ஓட்டமாக ஓடி குன்றில் ஏறி மூச்சுவாங்க ஆலயத்தை அடைந்தனர்.

காணிக்கை அளிக்கும் நேரம். எல்லோரும் வரிசையில் நின்றனர். இவ்வருடம் "யார் பெரியவர்" என்றறியும் துடிப்பு எல்லா உள்ளங்களிலும் அடித்துக் கொண்டிருந்தது. சூட் போட்ட ஒரு பெரிய மனிதர் முன்வந்து காணிக்கைத் தட்டில் தன் கார் சாவியை வைத்தார். எல்லாக் கண்களும் மணியை நோக்கின. ஆனால் அங்கே அசைவோ சப்தமோ இல்லை. ஒரு பெண் தனது வைர நெக்லசைக் கழற்றி தட்டில் வைத்துவிட்டு சுற்றிலும் பார்த்தாள். இம்முறையும் மணி ஒலிக்காததால் மக்கள் ஏமாற்றமடைந்தனர்.

மீதமனைவரும் சாதா மக்களானதால் உற்சாகம் தணியத் துவங்கியது. இப்போது இரண்டு சிறுவரின் தருணம் வந்தது. இருவரும் தம் ஒரு ரூபாய் நாணயங்களைத் தட்டில் வைத்தனர். திடீரென்று பரலோக கீதம் ஆலயத்தை நிரப்பி ஊருக்கு காற்றில் மிதந்து சென்றது. மணிகள் அருமையாய், தெய்வீகமாய் ஒலித்தன. ஆராதனை முடிந்தவுடன் பிள்ளைகளை ஆயர் அணைத்துக் கொண்டு விவரங்களைக் கேட்டார். பிள்ளைகள் யாவற்றையும் விவரமாய்க் கூறினர். மக்கள் ராஜையும் ராணியையும் சூழ்ந்து கொண்டு நடந்ததை அறிந்தனர். மற்றவர்களைப் பராமரிப்பது கடவுளுக்குக் காணிக்கைக் கொடுப்பதற்கு நிகர் என்பதை உணர்ந்து கொண்டனர்.

ஆயரும் மூப்பர்களும் பிள்ளைகளின் வீட்டைச் சந்தித்து அவர்கள் நிலமையை அறிந்து கொண்டனர். அவர்களது தாயைச் சிகிச்சைக்கு அழைத்துச் சென்றனர். சபையார் உணவு வகை களையும் தின்பண்டங்களையும் துணிமணிகளையும் விளையாட்டு சாமான்களையும் பிள்ளைகளுக்குக் கொடுத்தனர். அவர்கள் கொண்டாடின கிறிஸ்மஸிலேயே சிறந்த கிறிஸ்மஸ் அதுதான்!

# 7

# அதிசயப் பரிசு!

ரேவதிக்கு வயது பத்து. அவளுக்கு ஓய்வுநாள் பாடசாலை என்றால் மிகவும் பிரியமாதலால் தவறாமல் செல்வாள். அவள் எளிய குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளது ஒழுங் கையும் பணிவையும் யாவரும் பாராட்டுவர்.



அன்று ஓய்வுநாள் பாடசாலையின் ஆண்டு விழா. எல்லாப் பிள்ளைகளும் நடனங்களுக்காகவும் நாடகங்களுக்காகவும் அலங்கரித்துக் கொண்டிருந்தனர். ஆனாலும் எல்லார் நோக்கமும் கடைசி நிகழ்ச்சியிலேயே இருந்தது. அதுதான் எல்லாருக்கும் பன் ரொட்டி பரிமாற்றம்.

காத்திருந்த வேளை வந்தது. பிள்ளைகள் ஒருவரையொருவர் இடித்து முட்டிக்கொண்டு நெருக்கினர். ஆசிரியர்கள் தட்டுகளில் பன்ரொட்டிகளை அடுக்கி எடுத்துக்கொண்டு நெரிசலைச் சமாளிக்கத் தடுமாறினர். பிள்ளைகள் முன்னே வந்து கண்களை தட்டின்மேல் அலசவிட்டு இருப்பதிலேயே பெரிய பன்ரொட்டியை எடுத்துக்கொண்டு ஓடினர். தட்டுகள் வேகமாக காலியாயின. ரேவதி பொறுமையாக தன்னுடைய தருணத்திற்குக் காத்திருந்தாள்.

இறுதியில் ஒருசில பிள்ளைகளும் ஒரு சில பன்ரொட்டிகளுமே எஞ்சியிருந்தன. ரேவதியைத் தவிர மற்ற எல்லோரும் பன்ரொட்டிகளை எடுக்க அவசரப்பட்டனர், ஏனெனில் தட்டின் நடுவிலிருந்த குட்டி பன் ரொட்டி தங்கள் தலையில் விடிந்துவிடுமோ என்ற பயம். கடைசியில் ரேவதி முன்வந்து சிறிய பன்ரொட்டியை எடுத்துக்கொண்டு, போவதற்காகத் திரும்பினாள். "சாரி ரேவதி, உன் பன்ரொட்டி சிறுத்துவிட்டதே" என்றார் ஓர் ஆசிரியை. "அதனாலென்ன டீச்சர்" என்று சொல்லிவிட்டு ரேவதி சிட்டாய்ப் பறந்தாள்.

கட்டிடத்திற்கு வெளியே வந்ததும் எல்லாப் பிள்ளைகளின் பற்களும் தேங்காப்பூ பன்ரொட்டியை ருசி பார்த்துக்கொண்டிருந்தன. ரேவதியும் ஆவலோடு தன் பற்களைப் பன்ரொட்டியில் பதித்தாள். கடக்! பற்களில் கல்லைப்போல ஏதோவொன்று கடிபட்டது. பன்ரொட்டியில் கல் என்று நினைத்து துப்பினாள். ஆம், கல்தான்; அழகிய மோதிரத்தில் பதிக்கப்பட்டிருந்த வைரக்கல்!

ரேவதி ஆசிரியரிடம் திருப்பிக்கொடுக்க ஓடினாள். அவர்கள் அவளைத் தோளில் தட்டிக்கொடுத்துச் சொன்னார்கள், "சிறந்த மாணவருக்குப் பரிசு கொடுக்க விரும்பி மோதிரத்தை சிறிய பன்ரொட்டிக்குள் ஒளித்துவைத்தோம். நீ கண்ணியமாய் நடந்து கொண்டு பொறுமையாய் இருந்தாய். நீதான் அதற்குத் தகுதியுள்ளவள். வைத்துக்கொள்." ரேவதி ஆச்சரியமும் சந்தோஷமும் தாங்கமுடியாமல் தேவனைத் துதித்தாள்.

# 8

# தூக்கி எறியப்பட்ட மன்னிப்பு!

தன் நாட்டை நீதியாய் ஆண்டுவந்த ஒரு ரொம்ப நல்ல அரசன் இருந்தார். அவரது குடிமக்களுக்குள்ளிருந்த ஒரு கெட்ட மனிதன் தன் எதிரியை வெட்டி கொலைசெய்து போட்டான். நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்ட அவனுக்கு நீதிபதிகள் மரணதண்டனை விதித்தனர். தூக்கிலிட நாளும் குறிக்கப்பட்டது.

அரசன் இந்த வாலிபனுக்காக மிகவும் துக்கித்து அவனுக்கு வாழ்வளிக்க விரும்பினார். ஒருவேளை அவனுக்கு ஆலோசனை யளித்து மன்னிப்பு அருளினால் அவன் திருந்திவிடலாம் என்று எண்ணினார். ஆகவே அரசன் அவனுக்கு மன்னிப்புக் கடிதமெழுதி ஒரு போதகரைப்போல வேடமணிந்துகொண்டு அவனைச் சந்திக்க சிறைச்சாலைக்குச் சென்றார். அந்த வாலிபன் அடைக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்று அவனுக்கு ஆலோசனை அளிக்கத் துவங்கினார்.

அந்த வாலிபன் சீறினான். போதகர் உடையிலிருந்த அரசனைப் பார்த்து கெட்டவார்த்தைகள் சொல்லி திட்டிக் கத்தினான். "போதகர்களெல்லாம் ஏமாற்றுக்காரர்கள். போய்விடு இங்கிருந்து" என்று விரட்டினான். அரசன் அவனை அமைதிப்படுத்தி பேச முயன்றான். அவனோ கேட்க ஆயத்தமாயில்லை. அரசன் துக்கத்தில் மூழ்கினார். மெல்லவே திரும்பிச் சென்றுவிட்டார். அரசன் வெளியே சென்றதும் காவல்காரன் உள்ளே ஓடிவந்து, "அரசர் என்ன சொன்னார் ?" என்று வாலிபனிடம் கேட்டான்.

"அரசரா ? எந்த அரசர் ?" வாலிபன் குழம்பிப்போய்க் கேட்டான். "போதகரைப்போல வேடமணிந்துகொண்டு உனக்கு மன்னிப்புக் கடிதத்தை எடுத்துக்கொண்டு வந்தாரே, அவர்தான்," என்றான் காவல்காரன். அதிர்ச்சியடைந்துபோய் தலையில் கைகளை வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டான் வாலிபன். கிடைத்த தருணத்தை நழுவவிட்டுவிட்டானே. அதற்காக அவன் சாக வேண்டும்.



அவன் செத்துப்போனான்—கொலை செய்ததினாலல்ல, அரசனின் ஆலோசனையையும் மன்னிப்பையும் ஏற்றுக்கொள்ளாததினால். கடவுள் நம்மைப் பலவிதங்களில் சந்திக்கிறார்—ஒரு புத்தகம், பாடல், நபர் அல்லது ஒரு பிரசங்கத்தின் மூலமாக. நாம் நமது தலைகளை வணங்கி ஆண்டவருடைய மன்னிப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படியானால் நாம் சாகத் தேவையில்லை, என்றென்றுமாய் வாழலாம்!



# 9

# இயேசு வந்தார்!

ஓர் ஆலயத்தின் அறிவிப்புப் பலகையில் கிறிஸ்மஸ் தினத்தன்று இயேசு அவ்வூருக்கு வருகை தரப்போகிறார் என்ற அறிவிப்பு இருந்தது. எல்லாரும் ஆயத்தமாயிருங்கள். யார் வீட்டிற்காவது வருவார் என்றார் ஆயர். ஒவ்வொரு வீட்டிலும் தடபுடலாக ஆயத்தங்கள் நடைபெற்றன. யாவரும் முள்ளின்மேல் உட்கார்ந்ததுபோல காத்திருந்தனர். வீடுகள் சுத்தமாயின, அடுப்படியில் கோழி, மீன், மட்டன் வாசனை மூக்கைத் துளைத்தது.

கிறிஸ்மஸ் தினம் குளிர் ஆட்டியது. ஏழை விதவையொருத்தி சுகவீனமானதொரு குழந்தையுடன் குளிர்காற்றில் நடுங்கிக்கொண்டே பசியோடும் பலவீனத்தோடும் நடந்து வந்தாள். ஒரு வீட்டுக் கதவைத் தட்டினாள். "இயேசுவாகத்தான் இருக்கவேண்டும்" என உள்ளிருந்து உற்சாகமான குரலெழும்ப கதவு திறக்கப்பட்டது. இல்லத்தரசியின் முகத்தில் ஏமாற்றம். கதவு சட்டென்று மூடப்பட்டது. பரிதாபமாய்க் கையை நீட்டியிருந்த விதவை கையை முடக்கிக்கொண்டாள்.

மெலிந்த அந்த உருவம் வீட்டிற்கு வீடு சென்று அதே வரவேற்பைப் பெற்றது. இறுதியாக ஒரு வீட்டுக் கதவு திறந்து ஒருவர் வெளியே தலை நீட்டினார். "யாரம்மா நீ?" என்று கேட்டார். "ஐயா, நாள் முழுவதும் ஒன்றும் சாப்பிடவில்லை, குழந்தையும் நோய்வாய்ப்பட்டிருக்கிறது. ஐயா, தயவு செய்து..." தடுமாறினாள். "உள்ளே வாருங்கள்," என்று சொல்லிய அவர் கதவை அகலமாய்த் திறந்தார். பயத்துடனே எட்டெடுத்துவைத்து உள்ளே வந்து தயக்கத்தோடு நின்றாள். "என்ன இப்படி நடுங்குகிறீர்கள் ? அடுப்பு பக்கத்தில் உட்காருங்கள்" என்று சொல்லி அடுப்பு பக்கமாய் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டார். "டெய்சி, இயேசுவுக்காக சூப் செய்திருந்தாயே. இந்த அம்மாவுக்குக் கொஞ்சம் சூடாக கொண்டு வருகிறாயா ? அந்தக் கம்பளிக் கோட்டை கொடு. ஒரு தட்டில் சாப்பாடு போட்டுக் கொண்டுவா" என்று சப்தம் கொடுத்தார். ஜுரத்தில் முணங்கிக்கொண்டிருந்த குழந்தையைத் தொட்டுப் பார்க்கலானார். "மகனே, அந்த ஜுர மருந்து பாட்டிலையும்



ஒரு டீஸ்பூனும் கொண்டுவா," என்று மகனை அவசரப்படுத்தினார்.

அந்தத் தாய் சூப்பைக் குடித்துவிட்டு பிரியாணியை அள்ளிச் சாப்பிடத் துவங்கினபோது டெய்சி குழந்தைக்குப் பாலைச் சூடு செய்து கொடுத்தாள். அந்த அம்மா இன்னும் கொஞ்சம் பிரியாணி கேட்டார்கள்; பின்பு இன்னும் கொஞ்சம் கேட்டார்கள். கடைசியில் திருப்தியாகவும் பலமடைந்தவராகவும் எழும்பினார்கள். தூங்கிக்கொண்டிருந்த குழந்தையை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள். "இப்போது வெளியே போகவேண்டாம். சற்று இளைப்பாறிச் செல்லலாம்" என்றார் அவர். "நன்றி. இப்போது தெம்பாயிருக்கிறேன். நான் போகவேண்டும்" என்று சொல்லிப் புறப்பட்டாள்.

அவள் சென்ற பிறகு அந்தக் குடும்பம் சாப்பிட உட்கார்ந்தனர். பின்பு கிறிஸ்மஸ் ஆராதனைக்குப் புறப்பட்டனர். ஆலயத்தில் ஒரே குழப்படி. "இயேசு நம் ஊருக்கு வருவதாகச் சொன்னீர்களே. எங்கே வந்தார்?" என்று சபையார் ஆயரைச் சூழ்ந்துகொண்டு முறுமுறுத்தனர். "இல்லையே, வந்தாரே" என்று ஆயர் குதித்தார். "அவர் ஒரு ஏழை விதவையைப்போல ஒரு வியாதிப்பட்ட குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்தார். யாரோ ஒருவர் அவருக்கு கிறிஸ்மஸ் விருந்தளித்ததினால் மிகுந்த சந்தோஷமாக நமது ஊரை ஆசீர்வதித்துச் சென்றார்" என்றார். ரிச்சர்ட் மற்றும் டெய்சியின் குடும்பம் அகமகிழ்வோடு நிமிர்ந்து உட்கார்ந்தனர். மற்ற யாவரும் அதிர்ச்சியடைந்தவர்களாக ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்!



# 10

# இரத்த தானம்!

வெகு காலத்திற்கு முன்பு மிகவும் இரக்கமுள்ள ஒரு கிறிஸ்தவ வைத்தியர் இருந்தார். அவர் ஏழைகளைக் கரிசனையோடு கவனித்ததால் மிகவும் பிரசித்திபெற்றவரானார். அவருடைய மருத்துவ மனையில் எப்போதும் நீண்டவரிசையில் மக்கள் காத்திருப்பர். அவருக்கு எதிர்வீட்டிலிருந்த வியாபாரி இயேசு கிறிஸ்துவை நம்பாதவராதலால் டாக்டர் ரூபஸ்மீது பொறாமைகொண்டு பல தொல்லைகளைக் கொடுத்துவந்தார். ஆனால் டாக்டர் ரூபஸ் எப்போது அவரைப் பார்த்தாலும் புன்முறுவல் பூப்பதோடு அவரிடம் கனிவுடனே நடந்துகொள்ளுவார். டாக்டர் ரூபஸ் எவ்வளவுக் கெவ்வளவு அன்பு காட்ட முயற்சி செய்தாரோ அவ்வளவுக்கவ்வளவு சேகர் தன் எரிச்சலைக் காட்டினார்.

ஒருநாள் தெருவில் விளையாடிக்கொண்டிருந்த சேகரின் மகன் பாலுவை வேகமாய்ச் சென்றதொரு வாகனம் இடித்துவிட்டு மறைந்தது. அவனுக்கு இரத்தம் கொட்ட ஆரம்பித்ததால் வேறு வழியின்றி சேகர் அவனைத் தூக்கிக்கொண்டு டாக்டர் ரூபசின் மருத்துவனைக்கு ஓடினார். டாக்டர் உடனடியாய் ஒரு மேசையில் அவனைப் போட்டு பரிசோதித்தார். பாலுவுக்கு அவசரமாக இரத்தம் தேவைப்பட்டது. அவனது இரத்தம் பரிசோதிக்கப்பட்டதில் அது சுலபமாக கிடைக்கக் கூடாத ரகம் என்று கண்டுபிடிக்கப்பட்டது. டாக்டருக்கு தன் மகனது இரத்தம் அதே ரகம் என்று தெரியும். உடனடியாக தன் வாலிப மகனை அழைத்தனுப்பினார். அவனும் ஓடோடி வந்தான்.

பக்கத்திலேயே மகனைப் படுக்கவைத்தார். பில்லியின் இரத்தம் பாலுவின் இரத்த நாளங்களில் ஓடத் துவங்கியது. இருவரது நாடித்துடிப்புகளையும் தாதியர் கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்தனர். பாலுவைப் பார்த்துக்கொண்டிருந்த தாதி உற்சாகமாகக் கத்தினாள், "டாக்டர், பாலுவின் நாடித்துடிப்பு முன்னேறுகிறது. அவன் பிழைத்துக் கொள்ளுவான்." டாக்டர் சற்று புன்முறுவலித்தார். பாலுவின் வெளிறிய முகம் சிவக்கத் துவங்கியது.



பில்லியைக் கவனித்துக் கொண்டிருந்த தாதி எச்சரித்தாள். "டாக்டர், உங்கள் மகனின் நாடித் துடிப்பு குறைகிறது." "பொறு, பொறு" என்றார் டாக்டர் ரூபஸ். "இன்னும் கொஞ்சம் இரத்தம் கொடுத்தால் பாலு கண் விழித்து விடுவான்." "டாக்டர், பில்லியின் நாடித்துடிப்பு நின்று விட்டது" என அலறினாள் தாதி. பாலு கண்களைத் திறந்தான், பில்லி கண்களை மூடினான். டாக்டர் ரூபஸ் பாலுவைத் தாதியரிடம் விட்டு விட்டு கவனத்தைத் தன் மகன் பக்கமாய்த் திருப்பினார். ஆனால் பில்லியை எழுப்பமுடியவில்லை.

டாக்டர் ரூபஸின் கால்களில் சேகர் விழுந்தார். இருவருக்கும் இடையே இருந்த பிளவு அகன்றது.

கடவுள் தமது ஒரே மகனாகிய இயேசு கிறிஸ்துவை நாம் வாழும்படியாகச் சாகக்கொடுத்தார் என்று அறிவாயா? இயேசு கிறிஸ்துவின் இரத்தமே நமக்கு என்றென்றுமான வாழ்வைக் கொடுக்கிறது என்று அறிவாயா? நமக்கும் கடவுளுக்கும் இடையிலிருந்த பிளவை இயேசுவின் மரணமே அகற்றி நம்மைக் கடவுளோடு இணைத்தது.

# *11*

# *தகப்பனா நீதிபதியா?*

அருமையான ஒரு தகப்பனுக்கு மிகவும் பொல்லாத ஒரு மகன் இருந்தான். அவ்வப்போது தகப்பனின் பாக்கெட்டிலிருந்து பணம் திருடுவான். தகப்பன் அப்பட்டணத்தில் நீதிபதியாக இருந்தார். தன் மகனை மன்னித்து அறிவுரை கூறுவார். பொல்லாத மகன் மகேஷ், தகப்பனின் புத்திமதியைக் காதுகொடுத்தும் கேட்கமாட்டான். வரவர



மோசமாகி கெட்ட சிநேகிதரோடு சுற்றத் துவங்கினான். சிகரெட்டும் சாராயமும் குடித்து சண்டைகளில் ஈடுபட்டான். தகப்பனோ பொறுமையாகப் புத்திசொல்லிக்கொண்டே இருந்தார்.

ஒருநாள் கொலை செய்துவிட்ட மகேஷைப் போலீஸ் பிடித்தனர். நீதிமன்றத்திற்கு இழுத்து வந்தனர். தன் தகப்பன் தனக்கு இரக்கம் காட்டுவார் என்று மகேஷ் நிச்சயமாயிருந்தான். நீதிபதி தீர்ப்பைக் கூறினார்: "இவன் குற்றவாளி, தூக்கிலிடுங்கள்." மகேஷ் அதிர்ச்சியடைந்தான். "அப்பா, இந்த ஒருமுறை மட்டும் மன்னித்து விடுங்கள், நான் திருந்திவிடுவேன்," என்று மகேஷ் மனமுடைந்து கதறினான்.

நீதிபதி, "மகனே, என்னை மன்னித்துவிடு. இங்கு நான் உனக்குத் தகப்பனல்ல, நீதிபதி. உன்னை மன்னிக்க எனக்கு அதிகாரம் கிடையாது. என்னால் தீர்ப்பளிக்கத்தான் முடியும்," என்று சொல்லி, எழுந்து அந்த அறையை விட்டு வெளியேறினார்.




இன்று கடவுள் நமக்குத் தகப்பன். நமது பாவங்கள் என்னவாயிருந்தாலும் மன்னிக்க ஆயத்தமாயிருக்கிறார். நாளை அவர் நியாயாதிபதியாய் வீற்றிருப்பார். அப்பொழுது அவர் மன்னிக்க முடியாது. இன்று அவரை உன் தகப்பனாகவும் இரட்சகராகவும் ஏற்றுக் கொண்டு பிந்திப்போகுமுன் உன் வழிகளை ஏன் மாற்றிக்கொள்ளக் கூடாது?

## 12

# பார்வையற்ற குழந்தை

ஹிட்லருக்குக் கீழிருந்த ஓர் அதிகாரி கிறிஸ்துவையும் கிறிஸ்தவர்ளையும் வெறுத்தார். அவரது மனைவி கிறிஸ்தவ மருத்துவமனையொன்றில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டார். அவளும் கிறிஸ்துவை வெறுப்பவள். அவளது மருத்துவமனை அறையில் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் படம் மாட்டப்பட்டிருந்தது. அதை எடுத்துவிடும்படியாகக் கத்தினாள். "என்னுடைய குழந்தை இந்தக் கேடு கெட்டச் சிலுவையைப் பார்க்கக் கூடாது" என்று அலறினாள். மருத்துவமனை அதிகாரிகள் அதற்கு இசையவில்லை.



குழந்தை பிறந்தது. நடந்ததென்ன? குழந்தை குருடாக இருந்தது! அகந்தையை அடக்குகிறவர் ஆண்டவர்.

## 13

# உன் இயேசு எவ்வளவு வல்லவர்?

இயேசு கிறிஸ்துவை உறுதியாய் நம்பின பாபு என்றவொரு மனிதன் இருந்தான். அவன் தன் நண்பர்களிடம் தன் ஆண்டவராகிய இயேசு எவ்வளவு வல்லவர் என்றும் தன் வாழ்வில் என்ன செய்து வருகிறார் என்றும் சொல்லுவான். பாபுவின் நண்பர் அவனைக் கிண்டல் செய்வர், ஆனால் சாட்சி சொல்வதை பாபு நிறுத்தவேயில்லை.





ஒரு நாள் பாபுவின் நண்பர்கள் எரிச்சலடைந்து அவனுக்கு ஒரு பாடம் கற்பிக்கத் திட்டமிட்டனர். வேலையிலிருந்து பாபு வீட்டிற்குத் திரும்பும் வழியில் அவனுக்காகக் காத்திருந்தனர். பாபு அவர்களருகே வந்தபோது அவனை நையப் புடைத்துவிட்டனர். "பாபு, உன் இயேசு எவ்வளவு வல்லவர் ? இப்போது உன் இயேசு என்ன செய்யமுடியும் ?" என்று கேலி செய்து சிரித்தனர். பாபு அமரிக்கையோடு அவர்களைப் பார்த்துப் புன்முறுவலித்து, "உங்களை மன்னிக்க அவர் எனக்குச் சக்தி அளிக்கிறார்," என்றான்.

அவனது எதிரிகளான நண்பர் இந்தப் பதிலைப் பாபுவிடமிருந்து சற்றும் எதிர்பார்க்கவில்லை. செய்வதறியாது மலைத்து நின்றனர். அவனிடம் மன்னிப்புக் கோரினர். சீக்கிரத்தில் ஒவ்வொருவராக கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவராயினர்.

## 14

# மறைக்கப்பட்ட பாவம்!

ஆன்ட்ரூ தன் மகன் எரிக்கை மிகவும் நேசித்தார். இந்த ஏழு வயது சிறுவனுக்குப் பல கலைகளைக் கற்றுக்கொடுத்தார். பள்ளி முடிந்தவுடன் எரிக் தன் தந்தையுடன் பண்ணைக்குச் சென்று கூடமாட உதவிசெய்வான். மண்ணில் குழி செய்து ஒவ்வொரு குழியிலும் ஒவ்வொரு விதைபோட்டு லேசாக மண்ணினால் மூடக் காட்டிக்கொடுத்தார். எரிக் ஆசையோடு புதிய காரியங்களைக் கற்றுக்கொண்டான்.

ஒரு நாள் ஆன்ட்ரூவிற்குப் பிந்திவிட்டதால் கைநிறைய விதை

களை எரிக்கிடம் கொடுத்து அவற்றைத் தோட்டத்தில் விதைக்கும்படி அனுப்பிவைத்தார். எரிக்கிற்குத் தனக்குப் பொறுப்பு கொடுக்கப்பட்ட சந்தோஷம் தாங்கமுடியவில்லை. விதைகளை எடுத்துக்கொண்டு பண்ணைக்கு ஓடினான்.

பொறுமையாக விரலினால் மண்ணில் குழி செய்து ஒவ்வொரு குழியிலும் ஒவ்வொரு விதையைப் போட்டு மூடினான். மூன்று அல்லது நான்கு விதைகள் போட்டிருப்பான், அப்போது அவனது நண்பன் டென்னி அங்கு வந்து சேர்ந்தான். "இது ரொம்ப நேரமாகுமே. நான் மீன் பிடிக்கப் போறேன்" என்று ஆசைகாட்டினான். "நானும் உன் கூட வரலாம். ஆனால் அப்பா இதைச் செய்யச்சொல்லி இருக்கிறாரே" என்றான் எரிக். "அதனாலென்ன? பெரிய குழி ஒன்று செய்து எல்லா விதைகளையும் போட்டு மூடிவிட்டு வா. ஜாலியாக இருக்கும்" என்றான் டென்னி. எரிக்கிற்கு ஆசை தட்டியது. ஒரு குழி தோண்டி எல்லா விதைகளையும் அதில் போட்டு மூடினான். இருவரும் பாடிக்கொண்டே ஆற்றை அடைந்தனர்.

சாயங்காலம் சுமார் ஆறு மணியளவில் எரிக் வீடு திரும்பி அப்பாவிடம் சென்றான். "அப்பா நீங்கள் கொடுத்த வேலையை முடித்துவிட்டேன்" என்றான். "நன்றி மகனே, மழை பெய்தவுடன் நல்ல பீன்ஸ் அறுவடை கிடைக்கும்" என்றார் ஆன்ட்ரூ.

ஒரு வாரமாக விட்டு விட்டு மழை பெய்தது. தகப்பனும் மகனும் தினமும் பண்ணைக்குச் சென்று வந்தனர். ஒருநாள் எரிக் உற்சாகமாகக் கத்தினான், "அப்பா, அப்பா, பீன்ஸ் முளைக்கத் துவங்கிவிட்டது. வந்து பாருங்களேன்." ஆன்ட்ரூ ஓடி வந்தார். ஒன்று... இரண்டு... மூன்று... நான்கு... அதன்பிறகு ஒரு கும்பல் முளைகள்! "இது என்ன மகனே?" எரிக்கின் முகத்தை ஆன்ட்ரூ நோக்கினார். எரிக் வெட்கத்தால் தலைகுனிந்தான். தன் குற்றத்தையும் மீன்பிடிக்கச் சென்ற விவரத்தையும் தகப்பனிடம் சொல்ல வேண்டியதாயிற்று.



பாவத்தை அதிக நாட்கள் மூடிவைக்க முடியாது. முந்தியோ பிந்தியோ அது வெளியே வரத்தான் செய்யும். பாவம் செய்துவிட்டதை உணருவாயானால் உடனடியாக தேவனிடம் அறிக்கையிட்டு அவரது மன்னிப்பைப் பெற்றுக்கொள்.



# 15

# சகோதரனின் தியாகம்!



ஒரு தகப்பனுக்கு ரகு, ராவண் என்ற இரு மகன்கள் இருந்தனர். ரகு மிக நல்ல பையன், ஆனால் ராவண் ஊதாரி. ராவண் பள்ளிக்குப் போகாமல் நின்று விட்டு கெட்ட நண்பரோடு ஊர் சுற்ற ஆரம்பித்தான். ரகுவின் புத்திமதிகள் செவிட்டுக்காதில் விழுந்தன. பல திருடுகளிலும் சட்டவிரோதச் செயல்களிலும் அவன் ஈடுபட்டதால் போலீசுக்கு அறிமுகமானான். வளர வளர ஈவிரக்கமற்ற கொடூரன் ஆனான்.

ஒரு நாள் வீட்டில் ரகு தனியாக இருந்தான். இரவு நேரம் யாரோ அவசரமாகக் கதவைத் தட்டினர். ரகு கதவைத் திறந்தபோது திடுக்கிட்டான். ராவண் இரத்தக்கறை படிந்த ஆடைகளோடு பயந்து உள்ளே ஓடினான். கொலைக் குற்றத்திற்காகக் காவலர் அவனைத் துரத்தி வந்தனர். "அண்ணா, எனக்கு எப்படியாவது உதவிசெய்" என்று நடுக்கத்தில் வாய் குளறினான்.

"சீக்கிரம் உன் உடைகளைக் களைந்துவிட்டு என் ஆடைகளைப் போட்டுக்கொள்" என்றான் ரகு. என்ன செய்வதென்றறியாத ராவண் அப்படியே செய்தான். "சுத்தமாகக் கழுவிக்கொண்டு படுக்கையறைக்குச் செல்" என்றான் அண்ணன். தம்பி அப்படியே செய்தான். ராவணின் உடைகளை ரகு அணிந்துகொண்டான்.

சீக்கிரம் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. ரகு கதவைத் திறந்து காவலரைக் கண்டான். ரகுவின் இரத்தக்கறை படிந்த உடைகளைக் கண்ட காவலர் அவனை இழுத்துச் சென்றனர். அவன் நியாயவிசாரணைக்குப் பிறகு தூக்கிலிடப்பட்டான். அதிலிருந்து ராவண் புதிய மனிதனானான். தன் சொந்த சகோதரன் தன் உயிரையே கொடுத்திருந்தான். அதற்கு நன்றியாக ராவண் புதிய வாழ்க்கை துவங்கினான்.

இயேசு நமக்காக செய்ததும் இதுதான். நாம் பாவிகள். அவர் நமது

பாவங்களைத் தம்மீது ஏற்றுக்கொண்டு கோரச் சிலுவையில் கொடூரமாய் மாண்டார். தலையை வணங்கி, "கடவுளே நான் பாவி; எனக்காக சிலுவையில் கொடிய மரணத்தை அனுபவிக்க உம் மகனை ஒப்புக்கொடுத்தீரே. நரக அக்கினியிலிருந்து என்னைக் காப்பாற்று வதற்காக அவர் துடித்து உயிர்விட அனுமதித்தீரே. நான் உம்மை விசுவாசிக்கிறேன். உம்மேல் என் நம்பிக்கையை வைக்கிறேன். என் பாவங்களை மன்னித்து என்னை உம்முடைய பிள்ளையாக்கும். உம்முடைய ஜீவப் புத்தகத்தில் என் பெயரை எழுதும். இயேசுவின் பெயரில் கேட்கிறேன் தகப்பனே. ஆமென்" என்று ஜெபிப்பாயா ?

## 16

## டமாக்ளியஸ்!

டமாக்ளியஸ் ஓர் அடிமை. அவன் அரசரை விட்டுத் தப்பி ஒரு காட்டிற்குள் ஓடினான். அந்தக் காட்டின் வழியாய்ச் செல்லும்போது ஒரு பெரிய சிங்கம் படுத்துக்கொண்டு வேதனையில் முணங்கிக் கொண்டிருந்ததைக் கண்டான். அருகில் சென்று பார்த்தபோது சிங்கத்தின் வீங்கி சிவந்திருந்த வலது பாதத்தைப் பார்க்கமுடிந்தது. மிகவும் பயந்தாலும் மெல்ல மெல்ல சிங்கத்திடம் சென்றான். வலியினால் சிங்கம் அசையமுடியாமலிருந்தது. டமாக்ளியஸ் நெருங்கி வந்ததும் தன் வீங்கிய பாதத்தைத் தூக்கிக் காட்டியது.



டமாக்ளியஸ் அந்தப் பெரிய பாதத்தைத் தன் இரண்டு கைகளிலும் ஏந்தினான். சீழ் வைத்ததின் காரணத் தைக் கண்டுகொண்டான். ஒரு பெரிய முள் பாதத்தில் தைத்திருந்தது. டமாக் ளியஸ் முள்ளைப் பிடுங்கி எடுத்து சீழைப் பிதுக்கி எடுத்தான். காயத்தை சுத்தப்படுத்தி தன் சட்டையின் ஓரத்தைக் கிழித்து கட்டுகட்டினான். சிங்கம் வலி நீங்கி ஆழ்ந்த நித்திரையில் அயர்ந்தது. டமாக்ளியஸ் தன் பயணத்தைத் தொடர்ந்தான்.

அரசனின் சிப்பாய்கள் டமாக்ளியசைத் தொடர்ந்து பிடித்து அரசரிடம் இழுத்துச் சென்றனர். அரசர் அவனைச் சிறையில் வைக்கக் கட்டளையிட்டார். ஒரு வாரம் கழித்து அரசர் டமாக்ளியசை பட்டினி போட்ட ஒரு சிங்கத்திற்குப் போடும்படி உத்தரவிட்டார்.

பெரிய அரங்கத்திற்குள் பட்டினி போடப்பட்ட சிங்கம் அவிழ்த்து விடப்பட்டது. டமாக்ளியஸ் உள்ளே கூட்டி வரப்பட்டான். வேடிக்கை பார்க்க பெரிய கூட்டம் திரண்டிருந்தது. டமாக்ளியஸ் சிங்கத்தோடு சண்டைபோட ஆயத்தமானான். தன் இரையைப் பார்த்த பசித்த சிங்கம் பாய்ந்து வந்தது. திடீரென்று அது நின்றது; தலையைத் தாழ்த்தி டமாக்ளியசின் பாதப்படியில் படுத்துக்கொண்டது. ஆச்சரியம் கொண்ட டமாக்ளியஸ் அப்போதுதான் சிங்கத்தின் வலது பாதத்திலிருந்த தழும்பைப் பார்த்தான். சிங்கத்தின் தலையைத் தடவிக்கொடுத்தான். கூட்டம் கரம்தட்டி ஆர்ப்பரித்து, "இவனை விடுவியுங்கள், இவனை விடுவியுங்கள்," என்று கூக்குரலிட்டது.

அரசன் பேரானந்தம் கொண்டான். டமாக்ளியசைக் கூப்பிட்டு முழு விபரமும் அறிந்தான். கேட்ட விவரங்களினால் தொடப்பட்ட அரசன் டமாக்ளியசை விடுதலை செய்தான்.

இரக்கமுள்ளவர்களுக்கு இரக்கம் கிடைக்கும்.

## 17

## கிழட்டுக் கழுதை

பல்லாண்டுகளாக அடிமைபோல உழைத்த ஒரு கழுதை பாலுவுக்கு இருந்தது. அது மிகவும் கிழடாகி விட்டதால் அதற்குச் சுமைசுமக்க முடியவில்லை. கழுதை தனக்குப் பாரமாகிவிட்டது என்று எண்ணிய



பாலு அதை உயிரோடு புதைத்துவிட நினைத்தான்.

அவன் ஓர் ஆழமான குழியைத் தோண்டிக் கழுதையை அதற்குள் தள்ளினான். பின்பு மண்ணை வாரி குழிக்குள் போடத் துவங்கினான். குழி அவன் முதுகுப்புறமாயிருக்க மண்ணைக் குழிக்குள் தள்ளிக்கொண்டேயிருந்தான். குழி நிறைந்திருக்குமென்று அவன் நினைத்து இன்னும் எவ்வளவு மண் போட வேண்டுமென்று திரும்பிப்பார்த்தபோது குழி நிறைந்திருந்தது. அவனை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் வண்ணமாக கழுதை குழி யிலிருந்து வெளியேறிச் சென்றது.

குழியிலிருந்து எப்படிக் கழுதை வெளியேறியது? அற்புதமல்ல! தன்மேல் ஒரு கூடை மண் விழுந்தவுடன் கழுதை அதன் மேல் ஏறி நின்று கொள்ளும். ஒவ்வொரு கூடை மண் விழும்போதும் ஒவ்வொரு படி ஏறும். அப்படியாக ஏறிக் குழியைவிட்டு வெளியேறியது.

தங்களது உருவம், அறிவு மற்றும் திறமைகள் குறித்துப் பெற்றோர், நண்பர் மற்றும் பிறர் இளக்காரமாகப் பேசும்போது சிறுவர் பலர் சோர்ந்து போகின்றனர். கவலைப்படாதீர்கள். இப்படிப்பட்ட கிண்டல் வார்த்தைகள் எல்லாம் நாம் வாழ்க்கையில் ஏறும் படிகளாம். இறுதியில் இவையே நம்மைச் சுதந்திரப் பறவைகளாக்கும்!



# 18

# காணாமற்போன குன்று!

மெர்சி என்று ஒரு சிறுமி இருந்தாள். அவள் ஒழுங்காகக் குடும்ப ஜெபத்தில் உட்கார்ந்து தன் தகப்பன் சொல்வதையெல்லாம் கேட்பாள். ஒருநாள் தகப்பன் பிள்ளைகளுக்குச் சொன்னார்: "உங்களுக்கு கடுகளவு விசுவாசமிருந்தால், நீங்கள் ஒரு மலையைப் பார்த்து அது பெயர்ந்துபோய் கடலிலே விழும்படி கட்டளை கொடுத்தால் அது அப்படியே ஆகும்."



மெர்சியை இது சிந்திக்கச் செய்தது. அவளது வீட்டிற்கு எதிரே ஒரு குன்று இருந்தது. மளிகைக் கடை குன்றிற்கு அடுத்தப் பக்கம் இருந்தது. மெர்சியின் பெற்றோர் அவளை ஏதாவது வாங்கி வரச்சொல்லும் போதெல்லாம் அவள் குன்றில் ஏறிக் கடைக்கு இறங்க வேண்டும். அந்தக் குன்று இல்லாவிட்டால் சுலபமே என்று நினைப்பாள். கடுகு விதை விசுவாசத்தோடு நாம் ஏன் ஜெபிக்கக் கூடாது என்று எண்ணலானாள். அந்தக் குன்று போய்விடும்படியாய் ஜெபிக்கத் துவங்கினாள்.

ஒவ்வொரு நாளும் குடும்ப ஜெபத்தில் அந்தக் குன்று அகன்று போகும்படியாய் ஜெபிக்கத் துவங்கினாள். அவளது விசுவாசத்தை எப்படி ஊக்கமிழக்கச் செய்வது என்று பெற்றோர் திகைத்தனர். ஒரு வாரம் சென்றது. ஒரு நாள் ஒரு லாரி நிறைய பணியாட்கள் அவர்களது வீட்டின் முன்னே இறக்கிவிடப்பட்டனர். அவர்களது கையில் கோடரி, மண்வெட்டி போன்ற பல ஆயுதங்கள் இருந்தன. அவர்கள் குன்றின் மையப்பகுதியைத் தகர்க்கத் துவங்கினர். அவர்கள் மெர்சியின் வீட்டிற்குத் தண்ணீர் குடிக்க வந்தபோது அவளது தகப்பனார் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று கேட்டார். "ஐயா, அரசாங்கம் இந்தக் குன்றின் நடுவில் சாலை அமைக்கிறது. அந்தப் பணிக்கு

நாங்கள் வந்துள்ளோம்" என்று அவர்கள் கூறினர். ஒரு மாதத்திற்குள் அக்குன்று உடைக்கப்பட்டு சாலை அமைக்கப்பட்டது. மெர்சி சந்தோஷத்தினால் குதித்தாள். அவளது விசுவாசமான ஜெபம் கேட்கப்பட்டது.

எந்தவொரு கஷ்டத்தையும் ஆண்டவரிடம் விசுவாசத்தோடு ஜெபத்தில் தெரியப்படுத்தத் தயங்காதீர்கள்.

# *19*

# *கூனன் ரிக்கி!*

ரிக்கி மிகவும் நல்லவன். அவனுக்கு ஒரு குறை இருந்தது. அவனது முதுகு வளைந்திருந்ததால் அவன் கூனி நடப்பான். இதனால் அவன் மிகவும் வெட்கப்பட்டான். மக்களைச் சந்திக்க அவன் தயங்கி எப்போதும் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தான். படுக்கையில் படுத்துக்கொண்டு தன்னை நேர் முதுகுடைய அழகிய வாலிபனாகக் கற்பனைசெய்து அந்த மெய்சிலிர்ப்பில் லயித்திருப்பான்.

ஒரு நாள் அவன் ஓர் ஓவியனிடத்தில் சென்று தன்னுடைய படத்தை ஒரு திரையில் வரைந்து கொடுக்கும்படி பணம் கொடுத்தான். ஆனால் படத்தில் ஒரு வித்தியாசம்—தன்னுடைய கூன் இல்லாமல், உயர்ந்த நேரான அழகிய வாலிபனாகச் சித்தரிக்க வேண்டும். ஓவியன் அருமையான படம் ஒன்றை வரைந்து கொடுத்தார். ரிக் தன் படத்தைக் கண்டு களிப்பில் ஆழ்ந்தான். படத்தைத் தன் வீட்டிற்குக் கொண்டுவந்து சுவற்றில் தொங்கவிட்டான் ரிக்கி. காலையில் எழுந்தவுடன் முதல் வேலையாக அந்தப் படத்தைப் பார்க்க ஓடுவான். அவனது கூன் அவன் தன் படத்தை நிமிர்ந்து பார்க்கத் தடையாயிருக்கும். ஆனால் தன்னால் முடிந்தவரை தன்னை நிமிர்த்தி தன் முழு உருவப் படத்தைப் பார்ப்பான்.

நாட்கள், வாரங்கள், மாதங்கள் உருண்டோடின. அவனது நண்பர்கள் அவனது உயரம் சற்று கூடிவிட்டதாகக் கூறினர். இரண்டு





ஆண்டுகளின் முடிவில் ரிக் நேரான உயரமான அழகிய வாலிபனாக படத்தில் இருந்தது போலவே காட்சியளித்தான்! உடற்பயிற்சி மந்திரம்போல வேலை செய்தது. ரிக் தனது தசைகளை முடுக்கிவிட்டு முதுகை நிமிர்த்தி நிமிர்த்திப் பார்த்ததால் அவனது முதுகு நேரானது!


நமது வாழ்க்கையின் வாஞ்சையும் நோக்கமும் இயேசு கிறிஸ்துவைப்போல் மாறுவதே. அவரே நமக்கு இலட்சிய முன்மாதிரி. நாம் ரிக்கைப்போல குறையுள்ளவர்கள். ஆனால் இயேசுவின் உருவத்தை நோக்கிப் பார்த்துக்கொண்டே இருப்போமானால் நாமும் அவரைப்போல் மாறிவிடுவோம். இயேசுவை நோக்கிப் பார்ப்பது எப்படி? வேதப்புத்தகத்தை திரும்பத் திரும்ப வாசிப்பதினால் இயேசுவின் உருவத்தைக் காணலாம். நாம் அறியுமுன்பாக இயேசுவைப்போல் மாறிவிடுவோம்.

# *20*

# *மீனவனும் மனைவியும்*

சங்கர் ஒரு மீனவன். அவனும் அவனது மனைவி சோனுவும் கடற்கரையில் ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் எளிமையாக சந்தோஷமாக திருப்தியுடன் குடித்தனம் நடத்திவந்தனர். தினமும் சங்கர் கடலுக்குச் சென்று வலை வீசுவான். வலையில் சிக்கியதை மீன் மார்க்கெட்டுக்குச் சென்று விற்பான். வீட்டுக்குத் திரும்பும் வழியில் அரிசி, பருப்பு மற்றும் காய்கறி வாங்கிச் செல்வான். அவனுடைய மனைவி சாம்பாரும் சோறும் செய்வாள். இருவரும் வீட்டிற்கு வெளியே உட்கார்ந்து கடற்காற்றை ரசித்துக்கொண்டே உணவை உண்பர்.

ஒருநாள் சங்கரின் வலை மிகவும் கனத்தது. மிகவும் பாடுபட்டு கரைக்கு இழுத்தான். வலையில் நாலடி நீளமான பெரிய தங்கநிற மீனொன்று மூச்சு விடத் திணறிக் கொண்டு வாலை அடித்துக் கொண்டு இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டான். சங்கருக்கு ஒரே சந்தோஷம். மார்க்கெட்டில் நல்ல விலை போகுமே!



அதிசயிக்கத்தக்க விதத்தில் தங்க மீன் பேசத் துவங்கியது: "இரக்கமுள்ள மீனவனே, நான் ஒரு மீன் இல்லை, ஓர் இராஜகுமாரன். ஒரு மந்திரக்கிழவி என்னை மீனாக மாற்றிவிட்டாள். என்னைப் போக விட்டுவிடு, உனக்கு அவசியமானபோது என்னைக் கூப்பிட்டால் நான் வந்து உனக்கு உதவி செய்வேன். தயவுசெய்து...,!" என்று கெஞ்சியது. சங்கரின் உள்ளம் நெகிழ்ந்தது. அவனது இளகிய நெஞ்சம் மீனை விற்க இடம் கொடுக்கவில்லை. ஆகவே மீனைப் பதவிசாக வலையிலிருந்து எடுத்து கடலில் விட்டான். மீன் வேகமாய் நீந்திச் சென்று, தலையைத் தூக்கி, "அருமை மீனவனே, உனக்கு ஏதாவது வேண்டுமா?" என்று கேட்டது. மீனவன் யோசித்தான். பின்பு பணிவோடு, "கடவுள் எங்களுக்கு ஒரு வீட்டையும் உணவையும் உடைகளையும் கொடுத்திருக்கிறார், தங்கமீனே. எதுவும் தேவையாகத் தெரியவில்லை. நன்றி" என்றான். மீன் சுழலும் தண்ணீர்களில் குதித்து மறைந்தது.

சங்கர் வீட்டிற்கு வந்து உற்சாகம் பொங்க நடந்த யாவற்றையும் ஒன்றுவிடாமல் சோனுவிடம் விவரித்தான். சோனுவின் முகம் நீண்டது. சங்கரைப் பார்த்துக் கத்த ஆரம்பித்தாள். "முட்டாள், நமது வீட்டைப் பார். ஒவ்வொரு மழைக்கும் ஒழுகுகிறது. மீன்தான் கேட்டதே. ஒரு நல்ல வீடு வேண்டுமென்று கேட்டிருக்கலாமல்லவா? இந்த நிமிடமே நீ போய் ஒரு வீடு வேண்டுமென்று கேள்" என்று துரத்தினாள். சங்கர் திடுக்கிட்டான். மீனிடம் எதையும் கேட்க வெட்கப்பட்டான். ஆனால் மனைவியின் முகத்தைப் பார்த்தவுடன் பதில் பேசாமல் கடலை நோக்கி நடைபோட்டான்.

"தங்க மீன், தங்க மீன்" என்று கூப்பிட்டான். அடுத்த நிமிடமே தங்க மீன் கரையை நோக்கி நீந்தி வருவதைக் கண்டான். "இரக்கமுள்ள மீனவனே, உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டது. தயக்கத்



தோடு மீனவன், "தங்க மீனே, என்னை மன்னித்துக்கொள். என் மனைவி நல்ல வீடு ஒன்று கேட்கிறாள்" என்றான். "அவ்வளவுதானே" என்று சொல்லி மீன் ஆழத்தில் தாவி மறைந்தது. மீனவன் வீட்டிற்குத் திரும்பி, தன் மனைவி அழகிய வீடொன்றின் தாழ்வாரத்தில் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். மின் விளக்குகளும் கேஸ் ஸ்டவ்வும் இருந்தன. மனைவிக்குப் படு குஷி! ஆனால் ஒரு வாரத்துக்குதான்.

அடுத்த வாரம், "ஒரு பங்களா இருந்தால் தாவிலை. ஒரு இராஜகுமாரனின் உயிரைக் காப்பாற்றிய உனக்கு அதுகூட கிடைக்காவிட்டால் எப்படி? போ" என்று கட்டளை கொடுத்தாள் சோனு. பயந்தாங்காளி மீனவன் கடலுக்குச் சென்று தன் மனைவியின் விருப்பத்தை மீனுக்குத் தெரிவித்தான். "இது என்ன பிரமாதம்," என்று சொல்லிவிட்டு மறைந்தது மீன். பெரிய பங்களாவிற்கு முன்னே புல் தரையில் மனைவி மகிழ்வுடன் நாற்காலியில் உட்கார்ந்திருக்கக் கண்டான் சங்கர். தாழ்வாரத்தில் கார் ஒன்று நின்றது. வேலைக்காரர் தேனீர் பரிமாறிக் கொண்டிருந்தனர்.

அடுத்த வாரம் சோனுவின் முகம் நீண்டுவிட்டது. "நான் ராணியாயிருந்தால் எப்படி இருக்கும் தெரியுமா? மீனிடம் போ. மீன் நிச்சயமாய் நமது கோரிக்கையை அங்கீகரிக்கும்" என்றாள். "*நமது* என்று சொல்லாதே *எனது* என்று சொல். இது எனக்கு விருப்பமேயில்லை. இது நமக்குத் தகாது" என்றான் சங்கர். ஆனால் மனைவியின் கோபமான முகத்தைக் கண்டதும் வாலைச் சுருட்டிக்கொண்டு கடலை நோக்கி நடந்தான். அவனுடைய வேண்டுதல் கேட்கப்பட்டது. இருவருக்கும் தலையில் கிரீடம், உட்கார சிங்காசனம். ஹோட்டல் சாப்பாட்டைத் தோற்கடிக்கும் உணவு வகைகள்.

மீனவனின் இதயமோ நடுங்கிக்கொண்டிருந்தது. அடுத்து மனைவி என்ன கேட்பாளோ? இதெல்லாம் தனக்குப் பிடிக்கவேயில்லையே என்று கவலை அவனுக்கு. அடுத்த வாரம் மனைவி புதியதொரு அணுகுண்டைத் தூக்கிப்போட்டாள். "எனக்கு அதிகாரமே இல்லை," என முறுமுறுத்தாள். "நான் சொன்னால்தான் சூரியன் உதிக்க வேண்டும். என் கட்டளையின்படிதான் சூரியன் அஸ்தமிக்க வேண்டும். போ, போய் மீனிடம் சொல்" என்றாள். சங்கர் வாயைப் பொத்திக்கொண்டான். மன்னிப்புக் கேட்டுக்கொண்டே தன் மனைவியின் வேண்டுதலை அறிவித்தான். "மீனவனே, கவலைப்படாதே. நீ சந்தோஷமான மனிதனாய் இருப்பாய்; வீட்டிற்குப் போ" என்றது அதிசய

மீன். மீனின் வார்த்தைகளில் சங்கருக்கு புதிய தெம்பு பிறந்தது.

அவன் என்ன கண்டானென்று நினைக்கிறீர்கள்? சோனு குடிசைக்கு முன் உட்கார்ந்து அரிசியில் கல் நீக்கிக்கொண்டிருந்தாள். "சபாஷ், நான் ஒரு சந்தோஷமான மனிதனானேன்" என்று குதூகலித்தான் சங்கர். சோனுவின் கண்ணீர்த் துளிகள் அரிசியில் விழுந்தன.

பேராசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். அது உங்களை அழித்துவிடும். எளிமையாகவும் தாழ்மையாகவும் இருங்கள். அதுவே சந்தோஷமான வாழ்க்கைக்கு வழி!

## *21*

## *தாயின் அழகிய கரங்கள்!*



தாய் தனக்குச் சோறு போடும் போது ரூபன் அவளது கரங் களையே பார்த்துக்கொண்டிருந் தான். எப்போதும் அப்படித்தான் செய்வான். குஷ்டரோகம் போன்ற அவளது நெளிந்த விரல்களும் வெள்ளையும் கருப்புமான தழும் புகளும் அவனை உமட்டச் செய்தன. கரண்டி இல்லாத போது அவள் தன் கையினால் சாதத்தை எடுத்துப் போடும்போது அதைச் சாப்பிட முடியாமல் தவிப்பான். அவளது அரவணைப்பை அருவருத்தான். அவள் குளிப்பாட்டி விடுவதை வெறுத்தான். அவள் தன்னோடிருப்பதை தன் நண்பர்கள் பார்ப்பதை அவன் விரும்ப வில்லை.



அவன் வளர வளர அருவருப்பு எண்ணமும் வளர்ந்தது. ஆனால் தன் உணர்வுகளைத் தாயிடம் சொல்ல அவனுக்குத் தைரியமில்லை. ஒரு நாள் தாங்க முடியாமல் தன் தாயிடம் கேட்டுவிடுவது என்று தீர்மானித்தான். அவளைப் புண்படுத்தாமல் மென்மையாக இனி தனக்கு அவள் கைகளால் சாதம் போடவேண்டாமென சொல்லத் திட்டமிட்டான். ரூபனுக்கு வயது ஆறு. யாரும் அவனுக்கு அவனது தாயின் கரங்களைக் குறித்துச் சொன்னதில்லை.

இறுதியில் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கேட்டுவிட்டான்: "மம்மி, உங்கள் கைகளுக்கு என்ன ஆனது? ஏதாவது வியாதியா அல்லது என்ன?"

அவனது தாய் புன்முறுவல் பூத்தார்கள். "நான் உனக்குச் சாதம் போடும்போது நீ முகம் சுளிப்பதை நான் கவனித்தபடியால் நானே ஒரு நாள் உன்னிடம் பேசவேண்டுமென்று இருந்தேன். கதையைக் கேள். இந்த வீட்டிற்கு வருமுன்பாக நாம் ஒரு குடிசையில் வாழ்ந்து கொண்டிருந்தோம். நீ அப்போது ஆறு மாதக் குழந்தை. உன்னை பாயில் தூங்க வைத்துவிட்டு மாட்டைக் கவனிக்கச் சென்றேன். திடீரென்று கூக்குரல் கேட்டு ஓடி வந்தபோதுதான் நமது வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பதைக் கண்டேன். வீட்டைச் சுற்றி பலரும் நின்று நெருப்பை அணைப்பதற்காக தண்ணீரும் மணலும் வீசிக்கொண் டிருந்தனர். நான் உள்ளே பாய்ந்து சென்று உன்னை எடுத்து வர விரும்பினாலும் மக்கள் என்னை அனுமதிக்கவில்லை. ஆனால் அவர்கள் பிடியிலிருந்து எப்படியோ என்னை விடுவித்துக் கொண்டு உள்ளே பாய்ந்தேன். நீ படுத்திருந்த பாய் தீப்பற்றத் துவங்கியிருந்தது. உஷ்ணத்தினால் நீ கண்விழித்து அழுதுகொண்டிருந்தாய். உன்னை அணுகுமுன்பாக தீப்பிழம்புகளை அணைக்கவேண்டியிருந்தது. என் கைகளினால் தீயை அணைத்து உன்னைத் தூக்கிக்கொண்டு வெளியே ஓடிவந்தேன்.

“வெளியே வந்த பிறகுதான் என் கைகள் வெந்துபோயிருந்ததைக் கண்டேன். ஆனால் நீ பிழைத்துக்கொண்டாய் என்ற நிம்மதி எனக்கு. என்னை மருத்துவமனைக்குக் கொண்டுசென்று சிகிச்சை செய்தனர். அறுவை சிகிச்சையும் பெற்றேன். கடவுளுக்கு ஸ்தோத்திரம், என் கைகள்ஆறினதால் அவற்றைப் பயன்படுத்தமுடிகிறது” என்றார்கள்.

இதற்குள் ரூபனின் கண்களில் நீர் வழியத் துவங்கியிருந்தது. ஏங்கி ஏங்கி அழுதான். தாயின் கரங்களைத் தன் கைகளில் எடுத்து

முத்தமிட்டான். "மம்மி, நான் பார்த்ததிலேயே மிகவும் அழகிய கரங்கள் இவைகள்தான்" என்று சொல்லி தாயைக் கட்டிப்பிடித்துக் கொண்டான். அவர்களுடைய கரங்களைத் தன் நண்பர்களுக்குக் காட்டித் தழும்புகளின் கதையை விவரித்துக் கூறினான். தாயின்மேல் அவன் கொண்டிருந்த அன்பு அணைகட்ட முடியாததானது. தாய் அவனது தலையைக் கோதினாள். அவளது மடி அவனுக்கு மோட்சமாக இருந்தது.

இயேசு நமக்கு செய்ததும் இதுவேதான். நம்மை நரக அக்கினிக்குத் தப்புவிக்கும்படியாக அவர் தமது முகம், கைகள், கால்கள் மற்றும் முதுகைக் காயப்படவும் புண்ணாகவும் ஒப்புக்கொடுத்தார். நமது இதயப்பூர்வமான அன்புக்கு அவர் தகுதியானவர் அன்றோ?

# *22*

# *அசிங்கமான வாத்துக்குஞ்சி!*

வாத்து ஒன்று தன் முட்டைகளை ஓர் ஆற்றின் ஓரமாக இட்டது. அந்த ஆறு முட்டைகளும் ஒவ்வொன்றாக பொரிக்கத் துவங்கின. அவற்றில் ஐந்திலிருந்து அழகிய வாத்துக்குஞ்சுகள் வெளிப்பட்டு தாயோடு நீந்திச் செல்லலாயின. கடைசியாக ஆறாவது முட்டை உடைந்து அதிலிருந்து அசிங்கமான ஒரு குஞ்சு வெளிப்பட்டது. தத்தக்கா புத்தக்கா என்று அது தாயையும் அதன் குஞ்சுகளையும் பின்பற்றிச் சென்றது.

குஞ்சுகள் திரும்பிப் பார்த்து முகத்தைச் சுளித்தன. அது கருப்பும் வெள்ளையுமாக சிலுப்பிக்கொண்டிருந்தது. அசிங்கமான குஞ்சு அவர்களின் முகபாவனையைக் கண்டு மனமுடைந்தது. ஆகவே அவர்களோடு செல்வதை நிறுத்தியது. தள்ளப்பட்ட குஞ்சு தன் உருவத்தை தண்ணீரில் கண்டு தன்னையே வெறுத்தது. வாத்து நடைபோட்டுக் கரை ஏறியது. அங்கே தானியம் பொறுக்கி சாப்பிட்டுக் கொண்டிருந்த சிட்டுக்குருவிகள் வாத்துக்குஞ்சு வந்ததும் பறந்து ஓடின. இயல்புதானே! ஆனால் குஞ்சு, "நான் அசிங்கமாயிருப்பதால்தான் அவை பறந்து போய்விட்டன" என எண்ணிக்



கொண்டது.



குளிர்காலம் வந்தது. குஞ்சு பனியில் நடுநடுங்கியது. ஒரு குடியானவன் குஞ்சைக் கண்டு வீட்டிற்குக் கொண்டு சென்றான். குஞ்சு நினைத்தது, "யாரும் என்னை நேசிக்கவே முடியாது. நான் இங்கிருந்து தப்பவேண்டும்." தப்பித்து ஓட முயன்றபோது அது பால் பாத்திரத்தைத் தட்டிவிட்டு மாவுச்சட்டியைக் கவிழ்த்துவிட்டது. ஒரு நாய் குலைத்தது, ஒரு பிள்ளை அதைப் பிடித்துக்கொண்டு வரும்படி துரத்தியது. ஆனால் அவர்கள் தன்னை வெறுத்ததால்தான் துரத்துகிறார்கள் என்று குஞ்சு எண்ணியது.

அசிங்கமான வாத்துக்குஞ்சு அதன்பிறகு ஒரு கோழியைச் சந்தித்தது. "ஐயோ, என்னால் இவளைப்போல கொக்கரிக்க முடியவில்லையே, நான் ஒன்றுக்கும் உதவாதவள்" என்று நினைத்தது. ஒரு பூனையைப் பார்த்தது. "இந்தப் பூனைபோல் என்னால் சத்தம் பண்ண முடியவில்லையே. நான் எதைத்தான் சரியாகச் செய்கிறேன்" என்று நொந்துகொண்டது. இப்போது வசந்தகாலம் மலரத் துவங்கியது. மலைப்பகுதி வண்ணவண்ணமாக மிளிரத் துவங்கியது.

வானத்தில் ஏதோ விநோதமான சத்தம் கேட்கிறதே என்று குஞ்சு வானத்தை அண்ணார்ந்து பார்த்தது. அது ஓர் அன்னப்பறவைக் கூட்டம். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து மொத்தம் ஆறு. அவை வெண்ணைபோல குஞ்சின் தலைக்குமேல் பறந்து வந்து குளத்தில் இறங்கின. குஞ்சைக் கூப்பிடுவதுபோல இருந்தது அவைகளின் பார்வை. அது வாத்துநடைபோட்டு குளத்தை அடைந்தது. அந்த அன்னப் பறவைகளைப் பார்த்தது; பின்பு தன் நிழலைத் தண்ணீரில் பார்த்தது. அங்கே என்ன தெரிந்தது? ஓர் அழகிய அன்னப்பட்சி! அசிங்கமான குஞ்சு அழகிய வெண்ணிற அன்னப்பட்சியாக வளர்ந்துவிட்டிருந்தது. அதற்குத் தன் கண்களையே நம்பமுடியவில்லை. அது நீந்தி நீந்தி அன்னங்களின் கூட்டத்தோடு சேர்ந்துகொண்டது!

நாம் யாவருமே வாழ்க்கையில் ஏதோ ஒரு நிலையில், "நான் உதவாக்கறை" என்று யோசிக்கத்தான் செய்கிறோம். யாரோ சொல்வதை வைத்து நம்மைக் கணக்குப்போடும் கெட்டப்

பழக்கத்திற்குள் வருகிறோம். கடவுள் நம்மை வனைந்துகொண்டிருக்கிறார் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். நமது அழகிய சிறகுகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன; ஒருநாள் நாம் அசிங்க வாத்துக் குஞ்சுகளாயிராமல் அருமையான அன்னப் பறவைகளாவோம்!

## 23

## ஷேர்லியின் நம்பிக்கை

ஷேர்லி கடவுள் பக்தியுள்ள சிறுமி. தன் பெற்றோரோடு ஆலயக் கூட்டங்களில் கலந்து கொள்வதில் ஆர்வம் காட்டுபவள். அவர்களது ஊரில் நற்செய்திக் கூட்டங்கள் நடந்து கொண்டிருந்தன. ஷேர்லி உற்சாகமாகப் புறப்பட்டுப் பெற்றோரோடு சென்றாள். அது கோடைகாலமாதலால் தாங்கமுடியாத சூடு. அவர்களது மாவட்டத்தை வறட்சி ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தது. பிரசங்கம் துவங்குமுன் பிரசங்கியார், "அடுத்தநாள் மழைக்காக சிறப்பு ஜெபம் ஏறெடுக்கப்படும்" என்று அறிவித்தார். சபையார் யாவரையும் உபவாசத்தோடு வரும்படி ஊக்குவித்தார்.

ஷேர்லி மதியம் சாப்பிடாமல் உபவாசிக்க நினைத்தாள். தாய் மனசுக்குள் சிரித்துக்கொண்டே, “பாவம் பிள்ளை. எத்தனை நம்பிக்கையாயிருக்கிறாள், எதையும் இத்தனை தீவிரமாக எடுக்காதிருப்பாளானால் நலமாயிருக்குமே!" என்று சிந்தித்தாள். சாயங்காலக் கூட்டத்திற்கு யாவருமாகப் புறப்பட்டனர். ஷேர்லி தன் குட்டிக் குடையை எடுத்துக்கொண்டாள். “இந்தச் சாயங்காலத்தில் எதற்குக் குடை ? " என்றார் அப்பா. "அப்பா, மழைக்காக ஜெபிக்கப்போகிறோமே. கடவுள் நமக்கு மழை கொடுக்கப்போகிறார். அப்போது வீடு வந்துசேர





குடை வேண்டுமே" என்று களங்கமற்ற தொனியில் பதிலளித்தாள் ஷேர்லி.

"அடடா, இவள் ஏமாந்து போகாமலிருக்க வேண்டுமே" என்று தந்தை நினைத்துக்கொண்டார். மழைக்காக ஜெபத்தோடு கூட்டம் துவங்கியது. பிரசங்கியாரும் சபையாரும் ஊக்கத்தோடு மழைக்காக ஜெபித்தனர். அதன்பின்பு பிரசங்கியார் செய்தி கொடுக்கத் துவங்கினார். ஓரிரு மின்னல்கள் மின்னின. தொடர்ந்து பிரசங்கித்தார். சில இடிகள் இடித்தன. மக்கள் சுற்றி முற்றிப் பார்த்தனர். கருமேகங்கள் சூழ்ந்தன. பிரசங்கி தன் செய்தியை முடித்து "ஆமென்" என்ற வேளையில் சில மழைத்துளிகள் விழுந்தன. மக்கள் தங்கள் வேதாகமத்தைப் பாதுகாக்கவும் ஒதுங்கவும் இடம் தேடினர். மழை கொட்டத் துவங்கியது. மக்கள் நாலா திசையிலும் சிதறி ஓடினர். தனது வேதாகமத்திற்காகவும் பாட்டுப்புத்தகத்திற்காகவும் ஷேர்லி ஒரு பாலிதீன் பை கொண்டு வந்திருந்தாள். புத்தகங்களைச் சரியாக வைத்துப் பையை இடுக்கிக் கொண்டாள். குடையைத் திறந்து பெற்றோரோடு நடைபோட்டாள். ஷேர்லியைப் பார்த்த பெற்றோர் தாங்களும் குடை கொண்டுவந்திருந்தனர். தேவனைத் துதித்துக் கொண்டே வீடுவந்து சேர்ந்தனர்.

நீங்கள் ஜெபிக்கும்போது நம்பிக்கையோடு ஜெபியுங்கள்!

## 24

## கிறிஸ்துவா யூதாசா?

கென் நல்ல ஓவியன். இயேசுவின் இறுதி இராப்போஜனத்தை திரையில் படமாகச் சித்தரிக்க உட்கார்ந்தார். ஒவ்வொரு

திருத்தூதுவருக்கும் ஒருவரைத் தெரிந்தெடுத்து அவரை உட்காரவைத்து வரைந்தார். இறுதியில் இரண்டு இடங்கள் மட்டுமே காலியாக இருந்தன—கிறிஸ்துவுடையதும் யூதாசுடையதும். கிறிஸ்து போன்ற முகத்தைத் தேடிப் பட்டணத்தைக் கென் சுற்றிவந்தார். இறுதியில் சிறு பிள்ளைகளுக்கு ஓய்வுநாள் பாடசாலை நடத்திக் கொண்டிருந்த ஒரு வாலிபனைக் கண்டார். "படத்திற்குக் கிறிஸ் துவாக உட்கார்ந்திருக்க முடியுமா?" என்று அவனை வினவினார். டேனியல் என்ற அந்த வாலிபன் மகிழ்ச்சியோடு ஒத்துக்கொண்டான். ஆகவே அவன் கென்னுடைய ஸ்டுடியோவிற்கு வர, கிறிஸ்துவின் இடம் நிரப்பப்பட்டது. கென்னுக்கு மிக்க மகிழ்ச்சி.

இப்போது யூதாசின் இடம் மட்டுமே காலி. கென் ஒவ்வொரு முகத்தையாகப் பார்த்து சுற்றி வந்தார். சேரிகளுக்கும் சிறைச்சாலை களுக்கும் ஒதுக்கமான இடங்களுக்குமாக அலைந்து பார்த்தார். பயனில்லை. இரண்டு ஆண்டுகள் கடந்தன. ஒருநாள் கென் ஒரு கள்ளுக்கடையைத் தாண்டிச் சென்றபோது அங்கே குடித்துக் கொண்டிருந்த ஒருவனைக் கண்டார். கொடூரமான அவனது முகம் கடினப்பட்டிருந்தது; கண்கள் சிவந்து தள்ளிக் கொண்டிருந்தன. ஆஹா, யூதாசின் இடத்தை எடுக்க இதைவிடப் பொருத்தமான ஒரு முகம் கிடைக்கப் போவதில்லை என்று எண்ணினார் கென். அவர் உள்ளே சென்று அம்மனிதனிடம் அன்பாகப் பேசினார். அவனும் கென்னோடு அவரது ஸ்டுடியோவிற்கு வந்து யூதாசாக முகம் கொடுப்பதாக ஒத்துக் கொண்டான்.

வேலை துவங்கியது. வரைந்து கொண்டிருந்தபோதே அம்மனி தனின் கண்களில் கண்ணீர் சேர்ந்து பளபளத்தன. பின்பு அவை கீழே உருண்டோடின. கென் திடுக்கிட்டார். "இவனை அழச்செய்தது என்ன? இவனைப் புண்படுத்திவிட்டேனா?" என்று கென் குழம்பி காரணத்தைக் கண்டுபிடிக்கத் தவித்த வேளையில் அவனே விம்மி விம்மிப் பேச ஆரம்பித்தான். "என்னைத் தெரியவில்லையா?" கென்னுக்கு விடுகதையாயிருந்தது அவனது கேள்வி. "எங்கே பார்த்தேன்





இந்த மனிதனை?" என்று தன் மூளையைக் கிண்டினார். "என் பெயர் டேனியல். இரண்டு வருடங்களுக்கு முன்பாக உங்கள் படத்திற்கு கிறிஸ்துவாக வந்து உட்கார்ந்தேன். இப்போது யூதாசாக உட்கார்ந்திருக்கிறேன். கிறிஸ்துவை விட்டுத் தூரமாகச் சென்றேன். சோதனைகளுக்கு இடம் கொடுத்தேன், சிகரெட்டு குடித்தேன், கள் குடித்தேன், கெட்ட நண்பரோடு சேர்ந்தேன். எல்லாத் தீய பழக் கங்களும் அதைத் தொடர்ந்தன. நான் கிறிஸ்துவாயிருந்தேன்; இப்போது யூதாசாக இருக்கிறேன்" என்று தன் முகத்தைக் கைகளில் பதித்தவனாய் விம்மி விம்மி அழுதான் டேனியல்.

கென் தன் கரங்களை அவன் தோள்களைச் சுற்றிப்போட்டு அன்போடு மென்மையாகப் பேசி அவனைத் திரும்பவும் கிறிஸ்துவிடம் நடத்தினார்.

நீ இயேசுவைப் போலிருக்கிறாயா, யூதாசைப்போல் இருக்கிறாயா?

## 25

## *தங்க அரிசி!*

பிச்சைக்காரன் ஒருவன் தன் கையில் சட்டி ஏந்தி ஊரைச் சுற்றி வந்தான். மக்கள் அதில் பிடி அரிசி போட்டனர். சாயங்காலமானபோது ஏறத்தாழ சட்டி நிறைந்துவிட்டது. தன் குடிசைக்குத் திரும்பிப்போகிற வழியில் எலும்பும் தோலுமான வியாதிப்பட்ட பிச்சைக்காரன் எதிர்ப்பட்டான். பாத்திரம் நிறைய அரிசியைக் கண்டதும் கைகளை ஏந்திக் கெஞ்சினான்.

இவன் தயங்கினான். "நாள் முழுவதும் பாடுபட்டு நான் இவ்வளவு அரிசி சம்பாதித்திருக்கிறேன். அதில் பங்கு கேட்கிறானே இந்தச் சோம்பேறி" என்று நினைத்தான். உள்ளூர சபித்துக்கொண்டே மனமற்றவனாய் ஒரே ஒரு அரிசியை எடுத்து அவனது கையில் போட்டுவிட்டு நடந்துவிட்டான்.

வீட்டிற்கு வந்தவுடன் அரிசியைச் சுத்தம் செய்யத் துவங்கினான். திடீரென்று அரிசியில் ஏதோ மின்னியதைக் கண்டான். அதைப் பொறுக்கி எடுத்து உற்றுப் பார்த்ததில் அது ஒரு தங்க அரிசி என்று கண்டான். திடீரென்று அவனுக்கு எல்லாம் புரிந்துவிட்டது. அவன் பார்த்தது வியாதிப்பட்ட பிச்சைக்காரனல்ல, மாறுவேடத்தில் வந்த இயேசு! தனது பாத்திரத்திலிருந்த அரிசி அனைத்தையும் கொடுத்திருந்தால் ஒரு பாத்திரம் நிறையத் தங்க அரிசிகளைப் பெற்றிருப்பான். தன் மதியீனத்தை நொந்துகொண்டு இடிந்துபோய் உட்கார்ந்துவிட்டான்.

ஏழைகளுக்கு இரங்கும்போது இயேசுவுக்கே நாம் உதவி



செய்கிறோம். பசியாயிருப்பவர்களுக்கு உணவையும் தாகமாயிருப்பவர்களுக்குத் தண்ணீரையும் நாம் கொடுக்க வேண்டும். சரியாய் உடுத்தியில்லாதவர்களைக் காண்போமானால் உடைகளைக் கொடுக்கவேண்டும். நோய்வாய்ப்பட்டவர்களைக் கண்டால் அவர்கள் சிகிச்சை பெற உதவிசெய்யவேண்டும். கைதிகளையும் கெட்டவர்களையும் சந்தித்து இயேசு கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லவேண்டும். அப்படியானால் பரலோகத்தில் மிகுதியான பரிசுகளைப் பெற்றுக்கொள்வோம்!

# 26

## நீல நரி

அடர்ந்த காடு ஒன்றில் ஒரு நரி வாழ்ந்து வந்தது. அதன் தந்திரமுள்ள சுபாவத்தினால் காட்டின் மிருகங்கள் அதைத் துரத்திவிட்டன. உயிர்பிழைக்க ஓடியபோது வண்ணானொருவன் தன் வெள்ளைத் துணிகளுக்காகக் கரைத்து வைத்திருந்த நீலத்தில்






விழுந்துவிட்டது. தொட்டியிலிருந்து வெளியே வந்தபோது நரி நீல நிறமாகக் காட்சியளித்தது.

நரி காட்டிற்குத் திரும்பி வந்தது. நீல நிற விலங்கு எதையும் மிருகங்கள் பார்த்திராதபடியால் யாவும் கதிகலங்கின. சிங்கம் முதற்கொண்டு எல்லா மிருகங்களும் நடு நடுங்கி நீல நரியை அரசனாகும்படி வேண்டி அதைச் சிங்காசனத்தில் வீற்றிருக்கச் செய்தன. அரண்மனையின் எல்லா சுகபோகங்களையும் தனக்குக் கிடைத்த மரியாதையையும் நரி வெகுவாய் ரசித்தது.

ஒரு வாரம் கடந்தது. ஒரு நாள் நீலநரி தன் சேவகருடன் வேட்டையாடச் சென்றது. மிகவும் கனத்த மழை பெய்யத் தொடங்கியது. நீலநரியின் சாயம் கரைந்து ஓட ஆரம்பித்தது. மிருகங்கள் நரியை அடையாளம் கண்டுகொண்டு அதன் ஏமாற்று புத்திக்காக அங்கேயே அதைக் கொன்றுபோட்டன.

வெளிப்படையான மாற்றங்கள் நிலைக்காது. தேவன் நம்மிடத்தில் உள்ளான இதய மாற்றத்தை எதிர்பார்க்கிறார்.

# 27

## குரங்கும் முதலையும்

ஒரு குரங்கு நெளவா மரமொன்றின்மேல் வசித்துவந்தது. ஒவ்வொரு பழக் காலத்திலும் நிறைய நெளவாப் பழங்களைப் புசித்து வந்தது. மரம் ஆற்றங்கரையில் இருந்தது. அந்த ஆற்றில் ஒரு பெரிய முதலை வாழ்ந்தது. குரங்கு முதலைக்கு நெளவாப் பழங்களைப் பறித்துப் போட்டதால் இருவரும் சிநேகிதராயினர்.

ஓர் ஒய்வுநாள் பள்ளி ஆசிரியை தன் வகுப்புப் பிள்ளைகளை நெளவா மரத்து நிழலில் உட்காரவைத்து இயேசுவைப்பற்றி சொல்லிக் கொடுப்பார்கள். குரங்கு அவர்களை ஏளனம் செய்து பழக்கொட்டைகளை அவர்கள்மேல் வீசி தொல்லை கொடுத்து வந்தது. ஆசிரியையும் பிள்ளைகளும் குரங்குக்காக ஜெபிக்கத் துவங்கினர்.

ஒருநாள் முதலை சில நெளவாப் பழங்களைத் தன் மனைவிக்குக் கொண்டு கொடுத்தது. அப்பழங்களைச் சாப்பிட்டுவிட்டு மனைவி, "இப்பழமே இவ்வளவு ருசியாக இருக்கிறதே. இப்பழத்தையே சாப்பிட்டு வாழும் குரங்கின் ஈரல் எவ்வளவு ருசியாக இருக்கும்! அந்தக் குரங்கின் ஈரலை எனக்குக் கொண்டு வா" என்றது. முதலை ஒரு சதி செய்தது. குரங்கை தன் வீட்டிற்கு விருந்துக்கு அழைத்தது.

குரங்கிற்கு ஒரே சந்தோஷம். தலையைச் சீவி பவுடர் போட்டுக்கொண்டு நதிக்கரைக்குச் சென்றது. முதலை குரங்கை தன் வீட்டிற்குக் கொண்டுபோக அதைத் தன் முதுகில் ஏறிக்கொள்ளச் சொன்னது. ஆற்றின் நடுவே வந்தவுடன் முதலை நீருக்குள் மூழ்க ஆரம்பித்தது. "நண்பனே, பொறு. நான் மூழ்கிவிடுவேனே" என்றது குரங்கு. "ஹ ஹா, நான் உன்னை விருந்துக்கு அழைத்துச் செல்லவில்லை. என் மனைவிக்கு விருந்தாக உன் ஈரலைக் கொடுக்கத்தான் அழைத்துச் செல்கிறேன் ஹ ஹா" என்று முதலை சிரித்தது.

குரங்கிற்கு பயம் பிடித்துக்கொண்டது. மின்னலடித்தாற்போல் ஓய்வுநாள் பள்ளி ஆசிரியை கற்றுக் கொடுத்ததையும் இயேசு எப்படி ஆபத்தில் உதவுவார் என்று சொன்னதையும் நினைவுகூர்ந்தது. உடனே ஊக்கமாய் ஜெபிக்கத் துவங்கியது. உடனடியாய் அதற்கு ஓர் உபாயம் தோன்றியது. அமரிக்கையாய் முதலையிடம், "அண்ணா நீ ஏன் எனக்கு இதை முன்னமே சொல்லவில்லை? என் ஈரல் மிகவும் அழுக்காக இருந்ததால் இன்றுதான் அதைத் துவைத்து மரத்தில் காயப்போட்டேன்" என்றது. முதலை ஏமாற்றமடைந்தது. "சரி, பரவாயில்லை. என்னைக் கரையில் கொண்டுபோய் விடு. ஒரே ஓட்டத்தில் ஈரலை எடுத்துக்கொண்டு ஓடி வருகிறேன்" என்றது குரங்கு.

முதலை மகிழ்ச்சியோடு குரங்கைக் கரையில் கொண்டுபோய் விட்டது. குரங்கு வேகமாய் மரத்தின்மேல் ஏறிக்கொண்டு முட்டாள் முதலையைக் கிண்டல் செய்தது. அதிலிருந்து குரங்கு ஞாயிறு



வகுப்பிற்குத் தொல்லை கொடுப்பதை நிறுத்திக் கவனமாய்ப் பாடங்களைக் கவனிக்கத் துவங்கியது. ஒழுங்காக காலையும் இரவும் ஜெபிக்கக் கற்றுக்கொண்டது.

ஆத்திரமடைந்த முதலை எப்படியாவது குரங்கைப் பிடிக்கத் திட்டமிட்டது. குரங்கு கொய்யாப்பழம் சாப்பிடச் செல்லும் ஒரு தோட்டத்திற்குச் சென்று, பழங்களைச் சேகரித்து தன்மேல் போட்டு மூடிக்கொண்டு படுத்துக்கொண்டது. தோட்டத்திற்கு வந்த குரங்கு குவிந்து கிடந்த கொய்யாக்களைக் கண்டதும் சந்தேகப்பட்டது. சத்தமாக, "கொய்யாக்களே, ஏன் எல்லோரும் ஒரே இடத்தில் கும்பலாக இருக்கிறீர்கள்? உங்களைச் சாப்பிடமாட்டேன். நீங்கள் சிதறி இருந்தால் நான் பொறுக்கிச் சாப்பிடுவேன்" என்று சொன்னது. முதலை உடனே முதுகை அசைத்துப் பழங்களைச் சிதறச் செய்தது. முதலையின் முதுகைக் கண்ட குரங்கு இம்முறையும் தப்பித்துக் கொண்டது.

குரங்கைப் பிடிக்க முதலை நிச்சயமான ஒரு யுக்தியைக் கையாண்டது. கொய்யாத் தோட்டத்தில் மல்லாக்கப் படுத்துக் கொண்டு செத்துப்போனதுபோல பாவனை செய்தது. "நான் செத்துப்போய்விட்டேன் என்றெண்ணி குரங்கு என் பக்கத்தில் வரும்போது அதைப் பிடித்துக்கொள்வேன்" என்றது. அசையாமல் கிடந்த முதலையைக் கண்டதும் குரங்கிற்கு ஒரே சந்தேகம். கடவுளிடம் புத்திக்காக ஜெபித்தது. "இந்த முதலை சாகவேயில்லை. கொஞ்சம் உயிர் இருக்கிறது. செத்துவிட்டால் வால் ஆடுமே. வாலில் ஒரு அசைவையும் காணோமே" என்று சொன்னது. அதைக் கேட்ட முதலை வாலை லேசாக ஆட்டத் துவங்கியது.




"முட்டாள் முதலை" என்று சொல்லிவிட்டு குரங்கு ஓடிப்போனது.

ஆபத்தில் கர்த்தரே நமக்கு அனுகூலமான உதவி.

## 28

# ஐந்து காளைகள்



முன்னொரு காலத்தில் ஐந்து காளைகள் இணை பிரியா நண்பராயிருந்தனர். அவை எப்போதும் ஒன்றாகவே இருந்தன. அவை அருகிலிருந்த காட்டிற்கு மேயச் செல்லும். ஒரு புலி அவைகளை கவனித்துக்கொண்டே இருந்தது. அவ்வப்போது அந்தப் புலி காளைகளில் ஒன்றை தாக்குவதற்காகப் பாயும். ஆனால் மற்ற நான்கு காளைகளும் உடனே அதன் உதவிக்கு ஓடிவந்து புலியை முட்டித் துரத்திவிடும்.

ஒரு நாள் காளைகளுக்குள்ளே மனத்தாங்கல் ஏற்பட்டு ஒன்றோடொன்று சண்டையிட ஆரம்பித்தன. அவை ஒன்றாக மேய்வதைத் தவிர்த்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு பக்கமாய்ச் சென்று மேயத் துவங்கின. இதற்காகத்தானே புலி காத்துக் கொண்டிருந்தது. ஒரு காளையைத் தாக்கி அது நன்றாக சாப்பிட்டு முடித்தது.

மற்ற காளைகள் நடந்ததை அறிந்தவுடன் தமது முட்டாள்தனத்தை நினைத்து நொந்துகொண்டன. அவை ஒன்றாகக் கூடி அதன்பின் இணைந்து நின்றன. இழந்துபோன தமது நண்பனை நினைத்து கவலைப்பட்டன.

நண்பர்களுக்குள்ளே சண்டைகளும் மனத்தாங்கல்களும் சகஜம்தான். ஆனால் நாம் விரைவாக ஒப்புரவாகி ஒருவரையொருவர் மன்னித்து கைகோர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நமது எதிரியாகிய சாத்தான் நம்மைப் பிடிப்பான். ஒற்றுமையே நமது பலம்.



## 29

# புலி, புலி ..!

ஒரு கிராமத்துப் பையன் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தான். மதிய வேளையில் சோம்பலான நேரத்தில் ஒரு தமாஷ் செய்ய விரும்பினான். அவனது கிராமம் காட்டுப்பகுதியின் ஓரத்தில் இருந்தபடியால் ஒரு குறும்பு செய்ய நினைத்தான். சத்தத்தை உயர்த்தி, "ஐயோ, புலி, புலி," என்று கூவினான். வயலில் வேலை செய்துகொண்டிருந்த விவசாயிகள் அவனது சத்தத்தைக் கேட்டு ஓடி வந்தனர்.

அந்தப் பையன் சந்தீப் கைகளைத் தட்டிச் சிரித்தான். கிராமத்தினர் கோபப்பட்டு தங்கள் வேலைக்குத் திரும்பினர்.

ஒருவாரம் கடந்தது. அந்த போக்கிரிப் பையன் சந்தீப் குடியானவரை இன்னொருமுறை ஏய்க்கலாமே என்றெண்ணினான். உரத்த சத்தமாய், "புலி, புலி, யாராவது வாருங்களேன், உதவி செய்யுங்களேன்," என்று கூச்சலிட்டான். குடியானவர் தம் கையிலிருந்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு பையனைக் காப்பாற்ற ஓடோடி வந்தனர். அவர்களைக் கண்ட மாத்திரத்தில் சந்தீப் விழுந்து விழுந்து சிரித்தான். கிராமத்தினர் மிகவும் கோபமடைந்து இனி அப்படிச் செய்யக்கூடாது என்று எச்சரித்துத் திரும்பிப் போயினர்.

ஒருமாதமாயிற்று. ஆடு மேய்த்துக்கொண்டிருந்தபோது காட்டின் ஓரத்தில் தந்திரமாக ஒரு நிழல் பதுங்குவதை சந்தீப் கண்டான். பயம்



பிடித்துக்கொண்டது. "ஐயோ, அம்மா, புலி, புலி, ஓடி வாருங்கள்; நிஜமாகவே புலி" என்று கதறினான். யாரும் உதவிக்கு வரவில்லை. "உன்னுடைய தந்திரத்திற்கு நாங்கள் ஏமாறமாட்டோம்" என்று பதிலாகக் கத்திவிட்டு வேலையில் கவனம் செலுத்தினர். கதறல் சத்தம் குறைந்து குறைந்து மெல்ல ஓய்ந்தது.

சந்தேகமடைந்த கிராமத்தினர் பையனைப் பார்க்கச் சென்றனர். அடப்பாவமே! அவனது உடலின் சில துண்டுகள் மட்டுமே கிடைத்தன.

இனி பொய்யே சொல்லுவதில்லையென்று இன்றே தீர்மான மெடுங்கள். எப்போதும் உண்மையையே பேசுங்கள். நீங்கள் பொய் பேசினால் மக்கள் உங்கள் மேல் நம்பிக்கை இழந்துவிடுவார்கள். பொய் பேசுபவர் மோட்சத்திற்குள் போகமுடியாது.

# 30

# சிகப்புக் குட்டி

ஓர் அழகிய வீட்டில் ஒரு சிறிய குடும்பம் வசித்து வந்தது—தகப்பன், தாய் மற்றும் அவர்களது ஐந்து வயது குட்டி மகள். அவ்வீடு காட்டிற்கு அருகில் இருந்தது. அந்தக் குட்டிப்பிள்ளைக்கு சிகப்பு நிறமென்றால் ரொம்பப் பிரியம். சிகப்புத் தொப்பிதான் வைப்பாள். சிகப்பு உடைதான் வேண்டுமென்பாள். எல்லாமே அவளுக்கு சிகப்பில்தான் வேண்டு மென்பாள். அதனால் அவளை யாவரும் சிகப்புக் குட்டி என்றே அழைத்தனர்.

சிறுமியின் பாட்டி காட்டின் மறுபக்கம் தனிமையாக வாழ்ந்து வந்தார்கள். அவர்களது பிறந்தநாள் நெருங்கிவந்தபோது சிகப்புக் குட்டியின் தாயார் ஒரு கேக் செய்தார்கள். சிகப்புக் குட்டி பாட்டியம்மாவிற்கு கேக்கை கொண்டுபோக விரும்பினாள். ஆகவே அம்மா அவளுக்குக் கேக்கைப் பொட்டலம் செய்து கொடுத்தார்கள்.

சிகப்புக் குட்டி வீட்டிற்கு வெளியே காலை வைத்ததும் அம்மா அவளை உள்ளே கூப்பிட்டு, "செல்லமே, வீட்டை விட்டு வெளியே போகுமுன் ஜெபித்தாயா?" என்று கேட்டார்கள். "இல்லையம்மா மறந்துவிட்டேன்" என்றாள் சிகப்புக் குட்டி. அவள் ஜெபித்தபின்பு அம்மா, "மகளே, நேர் பாதையில் போ; முன்பின் தெரியாதவர்களிடம் பேசாதே" என்று சொல்லி அனுப்பினார்கள். "சரி அம்மா" என்று சொல்லிவிட்டு சிகப்புக் குட்டி பாடல்கள் பாடிக்கொண்டே செல்லலானாள்.



ஓநாய் ஒன்று இந்தச் சிறுமியின்மேல் கண்வைத்து அவளை இரவு உணவிற்குச் சாப்பிடத் திட்டமிட்டது. ஆனால் தெருவில் அவளைத் தாக்கமுடியாதே. ஆகவே மெல்ல அவளிடம் சென்று, மிக இனி மையாக, "செல்லக்குட்டி, செல்லக்குட்டி, எங்கே போகிறாய்?" என்று கேட்டது. சிகப்புக் குட்டி களங்கமின்றி "பாட்டி வீட்டிற்கு" என்றாள். அம்மா சொன்னதைச் சுத்தமாக மறந்துவிட்டு ஓநாயோடு பேசத் துவங்கினாள்.

"இந்த வழியாகப் போனால் நீ இருட்டுமுன் பாட்டி வீட்டிற்குப் போய்ச் சேரமாட்டாய். நீ காட்டின் வழியாய் குறுக்குப் பாதையில் செல்லவேண்டும்," என்று சொன்ன ஓநாய், காட்டின் வழியே வளைந்து வளைந்து சென்ற பாதை ஒன்றைக் காட்டியது. ஓநாயின் தேனொ ழுகும் பேச்சைக் கேட்ட சிகப்புக் குட்டி ஏமாந்துபோய் காட்டு வழியே நடக்கலானாள்.

இப்போது பாட்டி வீட்டிற்கு ஓநாய் அவசரமாய் ஓடியது. அது கதவைத் தட்டி தன் குரலை மாற்றி, "பாட்டியம்மா, சிகப்புக் குட்டி வந்திருக்கிறேன்," என்றது. பாட்டியம்மா கதவைத் திறந்தவுடன் அவர்களது தொண்டையைப் பிடித்தது ஓநாய். அவர்கள் பயத்தில் மயங்கி விழுந்ததும் அவர்களை ஒரு அலமாரியில் போட்டுப் பூட்டியது. பின்பு அவர்களது மூக்குக் கண்ணாடியையும் தொப்பியையும் போட்டுக்கொண்டு அவர்களது போர்வையால் தன்னை மூடிக் கொண்டு அவர்களது கட்டிலில் படுத்துக்கொண்டது.

சிகப்புக் குட்டி உள்ளே வந்ததும் அது, "வாடா செல்லமே, வா" என்றது. சிகப்புக் குட்டிக்கு ஒரே ஆச்சரியம். "பாட்டியம்மா ஏன் உங்கள் சத்தம் இவ்வளவு கோரமாக இருக்கிறது ?" என்று கேட்டாள். "எனக்கு சளி பிடித்திருக்கிறது, கண்ணே" என்றது ஓநாய். "உங்கள் கண்கள் ஏன் இவ்வளவு பெரிதாய் இருக்கின்றன?" என்று வினவினாள். "உன் அழகைப் பார்ப்பதற்காகத்தான், ராஜாத்தி" என்றது ஓநாய். "உங்கள் காதுகள் ஏன் இத்தனைப் பெரிதாயிருக்கின்றன?" என்றது சிகப்புக்குட்டி. "உன் இனிமையான பாடல்களைக் கேட்கத்தான், என் ராணி" என்றது ஓநாய். "உங்கள் பற்கள் ஏன் இவ்வளவு நீளமாய் இருக்கின்றன, பாட்டி ?" என்று கேட்டது சிகப்புக் குட்டி. உடனே ஓநாய் "உன்னைச் சாப்பிடத்தான்," என்று அவள்மேல் தாவியது. "இயேசுவே இரட்சியும்," என்று அலறினாள் சிகப்புக் குட்டி.

பக்கத்தில் மரம் வெட்டிக்கொண்டிருந்த ஒரு விறகுவெட்டி அவளது சத்தத்தைக் கேட்டு, சரியாக ஓநாய் அவளைப் பிடித்திருந்த நேரம்

உள்ளே ஓடி வந்தார். தன் கோடரியின் ஒரே வீச்சில் ஓநாயைக் கொன்றுபோட்டார். பிறகு இருவருமாக பாட்டியை வெளியே எடுத்து தண்ணீர் தெளித்து எழுப்பினர். பாட்டியம்மா சந்தோஷமாக கேக்கைச் சாப்பிட்டார்கள். விறகுவெட்டி சிகப்புக் குட்டியைப் பத்திரமாக வீடு கொண்டுபோய்ச் சேர்த்தார்.



வீட்டை விட்டு வெளியே செல்லும் முன்பாக ஜெபித்துவிட்டுதான் செல்லவேண்டும். அம்மா சொல்வதைக் கவனமாய்க் கேட்டு அதன்படி நடவுங்கள். எந்த ஆபத்திலும் இயேசுவின் பெயரைச் சொல்லிக் கூப்பிடுங்கள்.

# 31

# சிலுவை

ஒரு சிறு பிள்ளைக்கு சுமக்க ஒரு சிலுவை கொடுக்கப்பட்டது. அவளுக்கு அது பிடிக்கவேயில்லை. எல்லோரும் சிலுவை சுமக்க வேண்டும் என்று அவளுக்கு நன்றாகத் தெரிந்தாலும் அவளுக்கு அவளது சிலுவை விருப்பமேயில்லை. இன்னும் கொஞ்சம் அழகாக வசதியாக இருக்கலாமே என்று சிந்திக்கலானாள்.

ஒருநாள் இயேசு அவளுக்குக் காட்சியளித்து அவளை பரலோகத்திற்கு அழைத்துச் சென்றார். ஓர் அறைக்கு அழைத்துச் சென்று அவர் கதவைத் திறந்தபோது மோனாவின் இதயம் மகிழ்ச்சியால் நடனமாடியது. உள்ளே பலவிதமான சிலுவைகள் இருந்தன. "உனக்கு எந்தச் சிலுவை வேண்டுமோ அதை நீ எடுத்துக்கொள்ளலாம்" என்றார் இயேசு.

அவள் உள்ளே சென்று சுற்றி வந்து ஒவ்வொரு சிலுவையாகப்





பார்வையிட்டாள். பளபளவென்று ஜொலித்த விலையேறப்பெற்ற கற்கள் பதிக்கப்பட்ட சிலுவையொன்றின்மேல் அவளது பார்வை விழுந்தது. "சுமக்க இது அருமையாயிருக்குமே," என்று சொல்லிக்கொண்டே அதைக் கையிலெடுத்தாள். ஹ ுஹ ும், அது அவளுக்கு மிகுந்த கனமாயிருந்தது. கொஞ்ச தூரம் அதைச் சுமந்து செல்வதற்குள்ளே மூச்சுவாங்க ஆரம்பித்தது. ஆகவே அதை வைத்துவிட்டு வேறொன்றை எடுத்தாள். அது கவர்ச்சிகரமாகவும் வண்ணவண்ணமாகவும் இருந்தது. ஆனால் அதைத் தன் தோளில் வைத்தபோது அதன் கூர்மையான ஓரங்கள் அவளது சதையை வெட்டின. மற்றொன்று மிகப் பெரியதாகவும் வேறொன்று அலங்காரமேயின்றியும் இருந்தது. கடைசியாகத் தனக்கேற்ற ஒன்றை எடுத்துக்கொண்டாள். இலகுவாகவும் கச்சிதமாகவும் இருந்தது.

"இதை எடுத்துக்கொள்கிறேன்" என்றாள் இயேசுவிடம். இயேசு புன்னகையுடன் அவளைப் பார்த்து, "நான் உனக்கு முதன்முதலில் கொடுத்த சிலுவை அதுதான்" என்றார்.

நம் எல்லாருக்குமே சுமக்க சிலுவைகள் உண்டு. அது அசௌகரியமோ சிக்கலோ அல்லது நாம் விரும்பாத ஒன்றாகவோ இருக்கலாம். கிறிஸ்தவப் பயிற்சியில் அதுவும் ஒன்று. இயேசு தமது சிலுவையைச் சுமந்தார். ஆகவே நாமும் நமது சிலுவையைச் சுமக்கவேண்டும். ஆனால் ஆண்டவர் நமக்குக் கொடுத்திருக்கும் சிலுவையே நமக்கு ஏற்றது என்பதை நினைவிலிருத்திக்கொள்ளவேண்டும்.

**32**

# ஹான்சலும் கிரீடாவும்

மரங்களை வெட்டிப் பிழைத்துவந்த ஒரு விறகுவெட்டியின் குடும்பம் இருந்தது. அவர்களுக்கு ஹான்சல், கிரீடா என்று இரு பிள்ளைகள் இருந்தனர். அம்மா அன்பாக இருந்தாலும் மிகக் கண்டிப்பாக இருப்பார்கள். பிள்ளைகளுக்கு வேதம் வாசிக்கவும் ஜெபிக்கவும் கற்றுக்கொடுத்தார்கள். அப்பா அவர்களைக் கூட்டி தினமும் குடும்ப ஜெபம் நடத்துவார்.

ஒருநாள் அம்மா மிகவும் சுகவீனமானதால் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்கள். சில நாட்கள் காய்ச்சலுக்குப் பிறகு அவர்கள் மரித்துப்போனார்கள். ஹான்சலும் கிரீடாவும் கதறி அழுதனர். வேறொரு அம்மா அவர்களுக்கிருந்தால் ஆறுதலடைவார்கள் என்றெண்ணிய அப்பா மறுமணம் செய்துகொண்டார்.

அந்தப் புதிய அம்மாவிற்கு இந்தப் பிள்ளைகளைப் பிடிக்கவில்லை. அவர்களைக் கொடுமைப்படுத்தினாள். ஒருநாள் அந்த அம்மா தங்கள் பப்பாவிடம், "இவர்களைக் காட்டிற்குக் கொண்டுபோய் அங்கே விட்டுவிடுங்கள். இரண்டு பிள்ளைகளுக்குச் சோறுபோட நம்மால் முடியாது," என்று சொன்னதை ஹான்சலும் கிரீடாவும் ஒட்டுக் கேட்டனர். பப்பா மிகவும் துக்கப்பட்டாலும் அம்மா பேச்சைத் தட்ட முடியவில்லை.

அடுத்தநாள் தங்களுக்குக் காலையில் கொடுக்கப்பட்ட ரொட்டியை ஹான்சலும் கிரீடாவும் ஒளித்து வைத்துக்கொண்டனர். அம்மாவும் அப்பாவும் பிள்ளைகளைத் தங்களோடு காட்டிற்கு வர அழைத்தபோது இருவரும் ரொட்டியைப் பிய்த்துப் பிய்த்துப் போட்டுக்கொண்டே சென்றனர். காட்டின் மையத்திற்கு வந்தபோது அப்பா, "நீங்கள் இங்கே விளையாடிக்கொண்டிருங்கள். நாங்கள் விறகு வெட்டினபின்பு வந்து உங்களைக் கூட்டிச்செல்வோம்" என்றார்.

ஆகவே இருவரும் விளையாடிக் கொண்டிருந்தனர். சாயங்காலம் நாலுமணிவரை பெற்றோர் தங்களைக் கூப்பிட வராததால் அவர் களுக்கு பயமெடுக்கத் துவங்கியது. கிரீடா அழத்துவங்கினாள். "நாம்





ரொட்டித் துண்டுகளைப் பார்த்தே வீடுபோய் சேர்ந்து விடலாம்" என்று ஹான்சல் அவளுக்கு தைரியமூட்டி னான். அடடா! அவர்கள் தேடிப்பார்த்தபோது ரொட்டித் துண்டுகளைக் காணவில்லை. அணில்களும் குருவிகளும் அவற்றைத் தின்றுவிட்டி ருந்தன. "மம்மி சொன்னது உனக்கு ஞாபகமிருக்கிறதா அண்ணா? ஜீசஸ் நம்ம கூடவே இருக்கிறார். நமக்கு உதவி செய்வார்" என்றாள் கிரீடா. ஆகவே இருவரும் நடக்கத் தொடங்கினர்.

யானைகள் பிளிருகிற சத்தமும் சிங்கங்கள் உறுமுகிற சத்தமும் கேட்டன. மலைப்பாம்புகள் குறுக்கே கிடந்தன. அவைகளைத் தாண்டி ஓடினர். இருட்டத் துவங்கியபோது தூரத்தில் சிமிட்டும் ஒரு விளக்கைக் கண்டனர். பிள்ளைகளுக்கு சற்று தைரியம். "வா கிரீடா, அந்த வெளிச்சத்திற்குப் போய்விட்டால் அப்புறம் ஆபத்து ஒன்றுமில்லை" என்றான் ஹான்சல். ஆகவே ஓடி அவ்வீட்டை அடைந்தனர்.

என்ன ஆச்சரியம்! அந்த வீட்டின் சுற்றுச்சுவர் முழுவதும் கரும்புகளால் கட்டப்பட்டிருந்தது. இருந்த பசியில் கரும்பை உடைத்துச் சவைக்கத் துவங்கினர். வீட்டின் சுவர் கேக் துண்டுகளாலும் ஜன்னல் மிட்டாய் பதிக்கப்பட்டதாகவும் இருந்தது. கதவு முழுவதும் பிஸ்கெட்! இருவரும் பிஸ்கெட்டுகளையும் சாக்லேட்டுகளையும் எடுத்து எடுத்து வாயிலடைத்தனர்.

திடீரென்று ஒரு முரட்டுக்கரம் இருவர் சட்டையையும் பிடித்தது. "என்ன தைரியம் உங்களுக்கு, திருடர்களா. நீங்கள் செய்ததற்கு தண்டனை அனுபவிப்பீர்கள்" என்றது ஒரு கனத்த குரல். அது ஒரு மந்திரக்கிழவியின் வீடு. அவள் இருவரையும் உள்ளே கொண்டுபோய் ஹான்சலை ஒரு கூட்டிலடைத்தாள். ஆனால் கிரீடாவை வேலைக்கு வைத்துக் கொண்டாள். அவள் கூட்டி, சுத்தம் செய்து, துணிகளைத் துவைத்து, தண்ணீர் எடுக்க வேண்டும். தினமும் அவளுக்கு ஒரு ரொட்டித்துண்டு கிடைக்கவும், வர வர எலும்பும் தோலுமானாள். ஆனால் மந்திரக்கிழவி ஹான்சலுக்கு கொழுத்த சாப்பாடு கொடுத்து அவனைக் கொழுக்கவைத்தாள்.

ஹான்சலும் கிரீடாவும் தினமும் ஜெபித்தனர். ஹான்சல் கிரீடாவிடம், "கவலைப்படாதே, கடவுள் நமக்கு எப்படியும் உதவுவார்" என்பான். ஒருநாள் மந்திரக்கிழவியின் சிநேகிதி வந்தபோது, "நாளை என் பிறந்தநாள். நீ கட்டாயம் சாப்பிட வரவேண்டும். நல்ல கொழுத்த கறி இருக்கிறது" என்றாள் அவள். இதை ஒட்டுக்கேட்ட ஹான்சலும் கிரீடாவும் நடுங்கத் துவங்கினர். இப்போது எல்லாம் புரிந்தது. பிறந்தநாள் கறிக்காகத்தான் ஹான்சலை கொழுக்கவைத்திருந் திருக்கிறாள்!

இருவரும் அன்றிரவு ஞானத்திற்காகவும் பெலத்திற்காகவும் ஊக்கமாய் ஜெபித்தனர். இருவரும் துரிதமாக செயல்படத் திட்டமிட்டனர். அடுத்த நாள் கிழவி ஹான்சலைப் பிடிக்கக் கூட்டுக்குள் குனிந்தபோது கிரீடா அவள் காலை வாரிவிட்டு அவளைக் கூட்டுக்குள் விழத்தள்ளி ஹான்சலை வெளியே தூக்கிவிட்டாள். இருவரும் கூட்டைப் பூட்டிவிட்டு உதவிக்காகக் கத்திக்கொண்டே ஓட்டமாக ஓடினர். வனத்துறை அதிகாரி அவர்களைக் கண்டு நம்பர் 100க்குப் போன் செய்தார். போலீஸ் வேன் சீக்கிரமாய் வந்து அவர்களை வீட்டில் கொண்டு சேர்த்தது. மந்திரக் கிழவியைப் பிடித்து சிறைச்சாலையில் போட்டனர்.

பிள்ளைகளைப் பார்த்து அவர்கள் அடைந்த துன்பங்களை யெல்லாம் கேட்டதும் அப்பா மிகவும் அழுதார். அதிலிருந்து பப்பா அவர்களைப் பத்திரமாய்ப் பாதுகாத்து இரட்டிப்பாய் நேசித்தார்.

நமது தேவன் ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணை!

# 33

# பண்டோராவின் பெட்டி

பண்டோரா ஒரு அழகிய குட்டிப் பெண். அவளுக்கு வேதத்தைப் போதிக்கும் அன்பான பெற்றோர் இருந்தனர். பண்டோரா இயேசுவை நேசித்தாலும் சிலவேளைகளில் சுட்டியாகவும் கீழ்ப்படியாமலும் இருந்தாள்.



ஒருநாள் பண்டோராவின் பெற்றோர் ஒரு பெரிய பெட்டியை



வீட்டிற்குள்ளே கொண்டு வந்தனர். அது பண்டோ ராவின் குறுகுறுப்பைக் கிளறிவிட்டது. ஆனால் அவளது அப்பா அதைத் திறக்க அவளை அனுமதிக் கவேயில்லை. ஒருநாள் அதைக் காட்டிக் கொடுப் பதாகச் சொன்னார். அதற் குள் என்னதான் இருக்கும் என்று பண்டோரா சிந்தித்தாள். விடையை அறிய சீக்கிரமே சந்தர்ப்பம் கிட்டியது.

ஒருநாள் பண்டோராவின் பெற்றோர் ஆலயத்தில் நடந்த பெற்றோர் கூட்டத்திற்குப் போகவேண்டியதாயிற்று. பண்டோராவை நல்ல பிள்ளையாகவும் ஜாக்கிரதையாகவும் இருந்துகொள்ளக் கூறினர். அவர்கள் பண்டோராவை வீட்டிற்குள்ளே வைத்து வெளியே பூட்டிவிட்டு சீக்கிரம் திரும்பிவிடுவதாகச் சொல்லி ஆலயத்திற்குச் சென்றனர்.

பண்டோரா கொஞ்சநேரம் விளையாடினாள். பிறகு ஆயாசமானாள். திடீரென்று அவளுக்குப் பெட்டியின் ஞாபகம் வந்தது. அப்பா அதைத் திறக்கவேகூடாது என்று சொன்னதும் நினைவிற்கு வந்தது. ஆனால் குறுகுறுப்பை அவளால் அடக்கமுடியவில்லை. மெல்லமெல்ல பெட்டியின் அருகே நடந்து சென்றாள். அதன் அருகே உட்கார்ந்து பட்டென்று மூடியைத் திறந்தாள். என்ன நடந்ததென்று அவள் அறியுமுன்பாக தேனீக்கள் கூட்டம் வெளியேவந்து அவளைச் சரமாரியாகக் கொட்டத் தொடங்கின.

பண்டோரா பயந்து அரண்டு அலறத்துவங்கினாள். தேனீக் களுக்குத் தப்ப அவளுக்கு வழியில்லை. அவளது கூக்குரலைக் கேட்டு அக்கம்பக்கத்தினர் ஓடி வந்தனர். அவர்கள் பெற்றோரைக் கூப்பிட அவர்கள் அவசரமாய் வந்தனர். பண்டோராவின் முகம், கை, கால்கள் சிவந்து வீங்கியிருந்தன. அவள் மூச்சுத்திணறி வேதனையில் துடித்துக்கொண்டிருந்தாள். உடனடியாக அவள் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சை செய்யப்பட்டு ஊசிகள் பல போடப்பட்டன.

கடினமான வழியில் பாடத்தைக் கற்றுக்கொண்டாள். நமக்கு எல்லாம் நன்மையாக நடக்கும்படியாக நாம் பெற்றோருக்குக் கீழ்ப்படியவேண்டும் என்று வேதம் சொல்கிறது. கடினமாகத் தெரிந்தாலும், பெற்றோருக்குக் கீழ்ப்படிந்தால் உலகத்தின் பல ஆபத்துகளுக்குத் தப்பி கடவுளுடைய ஆசீர்வாதங்களை அனுப விப்போம்.

# 34

# புதையல் வேட்டை

ராமுவிற்கு மூன்று பையன்கள். விவசாயியாகிய அவனுக்கு வயதாகிவிட்டதால் தன் மகன்கள் தன் வேலையைச் செய்ய எதிர்பார்த்தான். அவர்களோ சோம்பேறிகளாகவும் விவசாயத்தில் எவ்வித நாட்டமும் இல்லாதவர்களாகவும் இருந்தனர். மற்ற வாலிபரோடு உட்கார்ந்து கதைபேசி பொழுதைப் போக்கினர். துக்கத்துடனிருந்த ராமுவிற்கு ஒரு யோசனை உதித்தது.

தன் மூன்று மகன்களையும் கூப்பிட்டு தன் சம்பாத்தியம், சேமிப்பு அனைத்தையும் வயலில் புதைத்து வைத்திருப்பதாகவும் அவர்கள் வேண்டுமானால் தேடி எடுத்துக்கொள்ளலாம் என்றும் கூறினார். புதையல் கிட்டுமென்ற எண்ணம் பையன்களை மெய்சிலிர்க்கச் செய்தது. உடனே தோண்டும் ஆயுதங்களுடன் மூவரும் வயலுக்குப் புறப்பட்டு விட்டனர்.



வயலை அகல, நீள, ஆழத் தோண்டினர். ஒரு இடத்தையும் விட்டுவைக்கவில்லை. கடைசியில் புதையல் கிடைக்காமல், களைத்துப்போய் கோபமாக வீடு திரும்பினர். அப்பா சொன்னார், "மக்களே தோண்டினது தோண்டிவிட்டீர்கள். கடினமான வேலை முடிந்தது. விதைப்பது சுலபமான வேலை. அதைச் செய்தாலென்ன?" அது சரியாகத்தான் தோன்றியது பிள்ளைகளுக்கு. மூவரும் விதைகளை விதைத்து வயலைப் பராமரித்தனர். அமோக விளைச்சல்! அவ்வாண்டு மகன்கள் நல்லதொரு அறுவடை செய்தனர். நல்ல லாபம் பெற்றுத் தகப்பனைப் பாராட்டினர். "நாங்கள் மெய்யாகவே புதையலைக் கண்டு பிடித்தோம்" என்று அகமகிழ்ந்தனர். தகப்பனார் உளம் பூரித்தார்.



கடவுள் சோம்பேறிகளை ஆசீர்வதிப்பதில்லை. கடின உழைப்பாளிகளைத்தான் ஆசீர்வதிக்கிறார். வீட்டில் பெற்றோருக்கு உதவிசெய்யத் துவங்குங்கள். பாத்திரங்களைக் கழுவலாம், தரையைக் கூட்டலாம், வீட்டைச் சுத்தம்செய்யலாம், இன்னும் பலவிதத்தில் பெற்றோருக்கு உதவலாம். அப்படியானால் உங்கள் எதிர்காலம் பிரகாசமாயிருக்கும்.

# 35

# விலையேறப்பெற்ற முத்து

முத்து வியாபாரி ஒருவர் உலகமெல்லாம் சுற்றி விலையேறப்பெற்ற பெரிய முத்துக்களைச் சேகரித்து வந்தார். தூத்துக்குடியில் முத்துக்குளிப்பவர் ஒருவர் மிகப்பெரிய முத்து ஒன்று வைத்திருப் பதாகக் கேள்விப்பட்டார். அதை எப்படியாவது தனக்குச் சொந்த மாக்கிக்கொள்ள விரும்பினார். அவர் தூத்துக்குடி சென்று அம் மனிதனைச் சந்தித்து தான் என்ன விலை வேண்டுமானாலும் கொடுப்பதாகவும் அந்த முத்தை தனக்குக் கொடுத்துவிடும்படியாகவும் கெஞ்சினார்.

அந்த முத்துக்குளிப்பவர் துக்கத்தோடு புன்முறுவல் பூத்தார். "உங்களால் அதற்குக் கிரயம் செலுத்தமுடியாது," என்றார். "உங்களுக்குக் கட்டாயம் வேண்டுமானால் அதை இலவசமாக வேண்டுமானால் கொடுக்கலாம்" என்றார். "அப்படி எப்படி முடியும்?



விலையைச் செலுத்தாமல் அதை உங்களிடமிருந்து பெற்றுக்கொள்வது நியாயமல்ல. நான் அதின் விலையைக் கொடுப்பேன்" என்றார். அப்போது அந்த முத்துக்குளிப்பவர் ஏன் அந்த முத்திற்கு விலை செலுத்த முடியாது என்று விளக்கலானார்—

"என் மகன் முத்துக் குளிப்பவன். இந்தப் பெரிய விலையேறப்பெற்ற முத்தை அவன் எடுத்த நாளில் அவன் கடலின் மிக ஆழத்திற்குச் சென்று அதை எடுத்தான். அவன் நீர்மட்டத்திற்கு வந்தபோது, தீடீரென்று தண்ணீர் அழுத்தம் நீங்கியதால் காற்று அவன் இரத்தத்திற்குள் கொப்புளித்து வந்து உடனே மரித்துப்போனான். என் மகனின் உயிர்க்கிரயத்தினால் எடுக்கப்பட்டது இந்த முத்து. இதற்கு நீங்கள் என்ன விலை கொடுப்பீர்கள்?" முத்து வியாபாரி இலவச ஈவாக அவர் கையிலிருந்து அந்த முத்தைப் பெற்றுக்கொண்டு கண்ணீரோடு நன்றி செலுத்தினார்.

இரட்சிப்பு தேவனுடைய இலவச ஈவு. தேவனது ஒரே பேறான மகனாகிய இயேசு கிறிஸ்துவின் உயிரைக்கொடுத்து அது சம்பாதிக்கப்பட்டது. நாம் இரட்சிப்பைப் பெறும்படியாக எதையும் செய்ய முடியாது. தேவனுடைய இந்த இலவச ஈவை நாம் நன்றியோடு பெற்றுக்கொள்ள அவர் கேட்கிறார்.

## 36

## வளர்ப்புப் புலி

பிரான்ஸ் தேசத்தில் பணக்காரர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு புலிக்குட்டியை விலைக்கு வாங்கி தன் செல்லப் பிராணியாக வளர்த்து வந்தார். அதற்குப் பாலூட்டி வீட்டிலேயே வைத்திருந்தார். அது





வீட்டுக்குள்ளேயே வளர்ந்து அவருடனே இருந்தது. ஒவ்வொரு இரவும் அவர் அதை ஓர் அறையில் போட்டுப் பூட்டி விடுவார். காலையில் திறந்து வெளியே விடுவார்.

நாலு வருடங்களில் குட்டி பெரிய புலியாக வளர்ந்து விட்டது. ஒரு நாள் இரவு, வேலைக்காரர் எல்லாரும் போய்விட்டனர். அவர் புலியை அதன் அறைக்கு அழைத்துச் சென்றார். புலி உள்ளே செல்ல மனமின்றி நின்றதால் அவர் அதை லேசாக உள்ளே தள்ளினார். அவ்வளவுதான். எரிச்சலடைந்த புலி கோபத்துடன் சீறி அவர்மேல் பாய்ந்து அவரைக் கொன்றது.

பாவமும் புலியைப் போலதான். அதோடு நாம் விளையாட முடியாது. ஒருநாள் அது நம்மை நரகத்தில் சேர்த்துவிடும். எல்லாவிதப் பாவங்களுக்கும் நாம் விலகியிருக்க வேண்டும்.

## 37

## உதவும் நம் கரங்கள்

குருவியொன்று வயலில் தன் கூட்டைக் கட்டியது. வயல் விளைந்து தானியங்கள் முதிர்ந்து நின்றன. குருவி முட்டையிட்டு இப்போது மூன்று குஞ்சுகளிருந்தன. வயலின் சொந்தக்காரர் வயலைப் பார்க்க வந்தார். "வயல் விளைந்துவிட்டது. நாளைக்கு இவற்றை அறுவடை செய்யும்படி வேலைக்காரரை அனுப்பவேண்டும்" என்றார். குஞ்சுகளுக்குப் பயம் பிடித்தது. "அம்மா, வேறு இடத்துக்குப் பறந்து போய்விடலாம். வேலைக்காரர் நம்மைப் பிடித்துக்கொள்வார்கள்" என்றன. "கவலைப்படாதீர்கள், பிள்ளைகளே, இப்போது வேண்டாம்" என்றது தாய்ப்பறவை.

அடுத்தநாள் சொந்தக்காரர் மறுபடியும் வந்தார். அவர் வயலைப் பார்த்துவிட்டு, "தானியங்கள் முற்றிவிட்டன. வேலைக்காரரோ வரவில்லை. அறுவடை செய்ய நாளை என் மகன்களை அனுப்ப வேண்டும்," என்று சொல்லிச் சென்றார். குஞ்சுகள் நடுங்கின, "அம்மா, அம்மா, வேறெங்காவது போய்விடலாம், அம்மா. நிச்சயமாய் மகன்கள் நம்மைப் பிடித்துக்கொள்வார்கள்" என்று நடுங்கின. "பயமொன்று மில்லை, செல்லங்களா. நாம் காத்திருக்கலாம்" என்றது தாய்.

அடுத்த நாளும் உரிமையாளர் வந்து வயலைப் பார்வையிட்டார். "அறுக்கக் காலமாயிற்று, மகன்களோ வந்தபாடில்லை. நாளை நானே வந்து அறுப்பு அறுப்பேன்" என்று கூறிச் சென்றார். சொந்தக்காரர் சென்ற பின்பு தாய்ப்பறவை கூறியது, "குஞ்சுகளே, இப்போது நாம் பறந்து செல்லவேண்டிய வேளை வந்தது. வாருங்கள் போகலாம்." குடும்பமாக அவை பறந்து சென்றன.



கடவுள் உங்களுக்கு இரண்டு கைகளைக் கொடுத்திருக்கிறார். நீங்கள் உங்களுக்கு உதவி செய்து கொள்ளவேண்டும். தன் கையே தனக்குதவி.


# 38

# *சிங்கமும் முயலும்*

ஒரு காட்டில் மிகவும் பொல்லாத சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. அது தன் விருப்பம்போல் விலங்குகளைக் கொன்று வந்தது. ஆகவே எல்லா மிருகங்களும் கூட்டங்கூடி ஒரு தீர்மானம் எடுத்தன. தங்களை இஷ்டப்படி கொல்லவேண்டாம். தாங்களாகவே ஒரு மிருகத்தைத் தெரிந்தெடுத்து சிங்கத்திற்கு இரையாகச் சிங்கத்தின் குகைக்கே



அனுப்பிவைப்போம் என்று அதனிடம் வேண்டிக்கொள்ளத் தீர்மானித்தன.



சிங்கமும் ஒத்துக்கொண்டது. ஒவ்வொரு நாளும் தெரிந்தெடுக்கப்பட்ட விலங்கு சிங்கத்திற்கு இரையாக அதன் குகைக்குச் செல்லும். ஒருநாள் முயலது தருணம் வந்தது. முயல் பயந்து நடுங்கியது . "அப்பா, கடவுளே, நான் என்ன செய்வேன் ? எனக்கு உதவிசெய்யும்" என்று ஜெபித்தது. கடவுள் அதற்கொரு யுக்தி காண்பித்தார்.

அது சிங்கத்திடம் சென்றபோது, சிங்கம் கோபமாக கெர்ஜித்து, "நான் பசியாயிருந்தேன். நீ ஏன் இவ்வளவு பிந்தி வந்தாய் ?" என்றது. "ஐயா, மன்னித்துக்கொள்ளுங்கள். நேரத்திற்குதான் வந்து கொண்டிருந்தேன். வழியில் ஒரு சிங்கம் உங்களைத் திட்டிக் கொண்டிருந்ததைக் கண்டேன். அதனால்தான் பிந்திவிட்டேன்" என்றது முயல். சிங்கத்திற்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. "இந்த நிமிடமே என்னை அந்தப் போக்கிரி சிங்கத்திடம் கூட்டிச்செல்" என்று உறுமியது.


முயல் சிங்கத்தை காட்டிலிருந்த ஆழமான ஒரு கிணற்றிற்கு கூட்டிச் சென்று, "அந்தப் பொல்லா சிங்கம் இங்குதான் இருக்கிறது" என்று காட்டியது. சிங்கம் உள்ளே எட்டிப் பார்த்து தன் பிம்பத்தைக் கண்டது. அது கெர்ஜிக்க பிம்பமும் கெர்ஜித்தது. கோபக்கார சிங்கம் தன் எதிரி என்று நினைத்து சிங்கத்தைத் தாக்க கிணற்றினுள் பாய்ந்து மரித்துப் போனது. முயல் விலங்குகளிடம் சென்று நடந்ததைக் கூறியது. எல்லா மிருகங்களும் கொண்டாடி முயலின் புத்தியைப் புகழ்ந்தன.

பலமில்லாதவருக்கோ பலமுள்ளவருக்கோ உதவிசெய்வது தேவனுக்குப் பெரிய காரியமல்ல. நீங்கள் பலவீனராக, சிறியவராக கடினமான சிக்கலை எதிர்கொண்டாலும், தேவனை நோக்கிக் கூப்பிட்டால் அவர் நிச்சயமாக உதவி செய்வார்.

## 39

# முயலும் புத்திசாலி ஆமையும்

அடர்ந்த காடு ஒன்றில் வாழ்ந்து வந்த திமிர்பிடித்த முயல் ஒன்று எப்போதும் ஆமை நகர்வதைக் கிண்டலடித்து வந்தது. ஒரு நாள் அது ஆமையிடம், "என்னோடு ஓட்டப் பந்தயத்திற்கு வருகிறாயா?" என்று சவால் விட்டது. ஆமையும் ஒத்துக்கொண்டது. காட்டு மிருகங்கள் யாவும் பந்தயத்தை வேடிக்கைப் பார்க்கக் கூடிவிட்டன. ஆமை தோற்று விட்டது என்று சொல்லவும் தேவையில்லை. முயல் பெருமையுடன் கையசைத்தபோது ஆமை, "பொறு, தம்பி, பந்தயம் இன்னும் முடியவில்லை. உன்னுடைய இடத்தில் ஓடினோம். இப்போது பந்தயத்தை என்னுடைய இடத்தில் வைத்துக் கொள்வோம். அப்போதுதான் இறுதி வெற்றியைத் தீர்மானிக்கமுடியும். வா, இப்போது நான் வாழும் குளத்தை இருவரும் நீந்திக் கடக்கவேண்டும்" என்றது. எல்லா விலங்குகளும், "கரெக்ட், கரெக்ட்" என்று தலையசைத்தன.



முயல் வெட்கித் தலைகுனிந்தது. தன்னால் நீந்த முடியாததால் தோல்வியை ஒத்துக்கொண்டது.

கடவுள் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான கிருபைகளைக் கொடுத்துள்ளார். மற்றவரது வரங்களை அற்பமாக எண்ணவும் கூடாது; நமது வரங்களைக் குறித்து நாம் ஜம்பமடித்துக்கொள்ளவும் கூடாது.



## 40

# கெட்ட கொக்கு

மர உச்சி ஒன்றில் ஒரு கொக்கு வசித்து வந்தது. அதற்கு வயதாகிவிட்டதால் முன்போல் மீன் பிடிக்க முடியவில்லை. ஆகவே தன் வயிற்றை நிரப்ப ஓர் உபாயத்தைக் கையாண்டது. அதன்படி ஒரு குளத்தினருகே சென்று சோக முகத்தோடு நின்று கொண்டது. தனக்குத்தானே அது சத்தமாக, "இந்தக் குளத்து மீன்களெல்லாம் பாவம். வெயில் அகோரம். தண்ணீரும் வற்றுகிறது. மீனவர் வந்து வலைவீசி மீன்களையெல்லாம் பிடிக்கப்போவதாகப் பேசிக் கொண்டதைக் கேட்டேன். பரிதாபம்," என்றது.

இதைக் கேட்ட மீன்கள் மிகவும் பயந்துபோயின. "நீர் சொல்வது உண்மைதானா ?" என்று கொக்கை வினவின. "மெய்தான்" என்று சொல்லிய கொக்கு தந்திரமாக, "ஆனா உங்களுக்கு உதவிசெய்ய விரும்புகிறேன்," என்று கனிவு சொட்டப் பேசியது. "தயவு செய்து, மாமா, எங்களுக்கு உதவி செய்யுங்கள்," என்று எல்லா மீன்களுமாக ஓலமிட்டன. கொக்கு, "கவலைப்படாதீர்கள், அருகே ஒரு பெரிய ஏரி இருக்கிறது. ஒவ்வொருவராக உங்களை அங்கே கொண்டுபோய் விட்டுவிடுகிறேன்" என்றது.

அப்படியாக ஒவ்வொரு நாளும் கொக்கு குளத்தாங்கரைக்கு வரும். மீன்கள் வரிசையில் நிற்கும். ஒரு மீனைத் தன் வாயில் எடுத்துக் கொண்டு பறந்து போகும். சற்று தூரம் சென்றதும் அந்த மீனைத் தின்றுவிட்டுத் திரும்பி குளத்திற்கு வரும். மீன்களிடம், "உங்கள் நண்பன் ஏரியில் கும்மாளம் போடுகிறான். உங்கள் எல்லாரையும் சீக்கிரம் வரச்சொல்லுகிறான்" என்று சொல்லும். கொஞ்ச நாட்களாக இது நடந்தது. மெலிந்த கொக்கு குண்டாகிக் கொண்டே வந்தது. குளத்திலிருந்த ஒரு நண்டிற்கு சந்தேகம் வந்தது. அது தன் சிநேகிதரைப் பார்த்து, "இதில் ஏதோ விஷமம் இருக்கிறது. நீங்கள் போவதை நிறுத்துங்கள். அடுத்து நான் போய் பார்க்கிறேன். அதன் பிறகு யோசிக்கலாம்" என்றது. மீன்கள் அதன் ஆலோசனையைக் கேட்டன. ஆகவே அடுத்து நண்டு சென்று சொல்லியது, "மாமா, நான்



உங்கள் வாயில் குத்தலாக இருப்பேன். ஆகவே உங்கள் கழுத்தில் உட்கார்ந்து கொள்ளுகிறேன்," என்றது. கொக்கிற்கு ஒரே குஷி. "இன்று நண்டு கறி," என்று நினைத்துக்கொண்டு நண்டைக் கழுத்தில் ஏற்றிக்கொண்டது.

கொக்கு தான் மீன்களைத் தின்னும் பாறைக்கு மேல் வந்ததும் இறங்கத் துவங்கியது. நண்டு பாறையிலிருந்த மீன் எலும்புகளையும் இரத்தத்தையும் பார்த்தது. எல்லாம் அதற்குத் தெளிவாயிற்று. ஒரே விநாடியில் தன் கொடுக்குகளால் கொக்கின் கழுத்தைப் பிடித்து வெட்டியது.

கொக்கு செத்து கீழே விழுந்தது. நண்டு திணறித் திணறி தன் குளத்துக்கு வந்து சேர்ந்து நண்பர்களிடம் எல்லாக் கதையையும் கூறியது. முன்பின் தெரியாதவரை நம்பின தங்களது முட்டாள் தனத்தை எண்ணி மீன்கள் கண்ணீர்விட்டன.

உலகம் சிறுவருக்குப் பாதுகாவலான இடமல்ல. பெற்றோரிடம் சொல்லாமல் நீங்கள் வீட்டை விட்டு வெளியே செல்லக்கூடாது. எல்லா அன்னியரையும் நம்பிவிடக் கூடாது. தினமும் உங்கள் பாதுகாவலுக்காகவும் பத்திரத்திற்காகவும் ஜெபிக்கவேண்டும்.


## 41

## *புதையல்*

விக்கி என்று மிகவும் எளியவன் ஒருவன் இருந்தான். அவன் தனது பணக்கார அயலான் ரஞ்சித்திடம் அற்ப கூலிக்கு வேலைபார்த்து வந்தான். வயிற்றுப் பிழைப்பு கடினமாயிருந்தது. தன் மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளுக்கும் சோறு போடுவதே திண்டாட்டமாயிருந்தது.



ஒரு நாள் விக்கி வழக்கம்போல வயல் வேலைக்குப் புறப்பட்டான். அவன் கொத்தும்போது அவனது மண்வெட்டி 'டங்' என்று எதிலோ பட்டது. விக்கி தோண்டுவதை நிறுத்தி மண்ணை அகற்றி அது என்னது என்று பார்த்தான். அவனது கண்கள் அகல விரிந்தன. அது பலவிதமான நகைகளும் விலையேறப்பெற்றக் கற்களும் நிறைந்த தங்கப் பெட்டகம்! சுற்றும் முற்றும் பார்த்தான். யாரும் அருகிலில்லை. மடமடவென்று அப்பெட்டகத்தை மண்ணைப்போட்டு மூடிவிட்டு விசிலடித்துப் பாட்டு பாடிக்கொண்டே வீட்டை அடைந்தான்.



வீட்டிற்கு வந்தவுடன் தனக்கிருந்த எல்லாவற்றையும் விற்கத் துவங்கினான். தனது குடிசையையும் தனக்கிருந்த இரண்டு மாடுகளையும் சில ஆடுகளையும் விற்றான். ரஞ்சித்திடம் சென்று அந்த நிலத்தை விலை பேசினான். ரஞ்சித்திற்கு விற்க விருப்பமில்லை. ஆனால் விக்கி அதிகமாக தர முன்வரவே லாபம் பெற எண்ணி பெரிய தொகை கேட்டான்.

விக்கி ஒப்புக்கொண்டு வீட்டிற்கு வந்தான். அவனுக்கு கூடுதல் பணம் தேவைப்பட்டது. தன் மனைவி பிள்ளைகளை ஒரு மிராசுதார் வீட்டில் கொத்தடிமைகளாகவிட்டு மீதப் பணத்தை அவரிடம் பெற்றுக் கொண்டான். மனைவி மற்றும் பிள்ளைகள் கதறி அழுதனர். அவன் நண்பர்கள் அவனை முட்டாள் என்று திட்டினர்.

விக்கி பணத்தை எடுத்துக்கொண்டு ரஞ்சித்திடம் சென்று பத்திரங்களில் கையெழுத்திட்டான். இப்போது அவனே நிலத்தின் சொந்தக்காரன். புதையலை எடுத்துக்கொண்டுபோய் முதல் வேலையாகத் தன் மனைவி பிள்ளைகளை மீட்டான். பெரிய நிலம் வாங்கி பெரிய வீடு கட்டி சுகமாய் வாழ்ந்தான். அவனது நண்பர் அவனது ஞானத்தைப் பாராட்டினர்.

இறையரசு ஒரு புதையல். அந்த ராஜரீகப் பட்டணத்திற்குள் நுழைவதற்காக நாம் எதைவேண்டுமானாலும் தியாகம் செய்யலாம். வாழ்க்கையில் வேறெதுவும் அதைவிட முக்கியம் கிடையாது.

# 42

## சிங்கமும் எலியும்

சிம்மா என்ற சிங்கம் மிகவும் தலைகனம் கொண்டது. பலவீனரை அது உதாசீனப்படுத்தி வந்தது. தானே சர்வ வல்லவன், தனக்கு யாருடைய உதவியும் தேவையில்லை என்று எண்ணியது.

ஒரு நாள் விளையாடிக் கொண்டிருந்த சுண்டெலி ஒன்று தெரியாத்தனமாய் தூங்கிக்கொண்டிருந்த சிம்மாவின் மேல் ஏறிவிட்டது. சுண்டெலி தொந்தரவால் சிம்மா விழித்துக் கொண்டது. அது மிகவும் கோபங்கொண்டு சுண்டெலியை நசுக்கிச் சாகடிக்கப் போனது. சுண்டெலி சென்னா தன்னை மன்னித்து விட்டுவிடும்படி சிம்மாவிடம் கெஞ்சியது. சிம்மாவிற்கு என்ன கஷ்டமானாலும் வந்து உதவுவதாக வாக்களித்தது. சிம்மா பெருமிதமாய்ச் சிரித்தது. "நீயோ சிறிய சுண்டெலி. எனக்கு உதவி செய்யப் போகிறாயோ ?" என்று சிரித்துக்கொண்டே சென்னாவை விரட்டிவிட்டது.

ஒருநாள் மிருகக்காட்சிசாலைப் பணியாளர் சிங்கம் ஒன்றிற்காக விரித்து வைத்த வலையில் சிம்மா சிக்கிக் கொண்டது. சிம்மா கொர்ஜித்தது, உருண்டது, ஆனால் தன்னை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. சிக்கலில் மாட்டிக் கொண்ட ஒரு சிங்கத்தின் சத்தத்தைக் கேட்ட சென்னா அது யாரென்று பார்க்க ஓடியது. அது சிம்மாவேதான். மின்னல் போல சுண்டெலி தன் வேலையைத் துவங்கியது. சிக் சிக் சிக் என்று தன் சிறு பற்களால்





வலையைத் தும்புதும்பாக்கி சிம்மாவை விடுவித்தது.

சிம்மா சுண்டெலியைத் தன் கையிலெடுத்து முத்தமிட்டு நன்றி நவின்றது. "நீ சின்னவன்தான்; ஆனால் எனக்கு ஒரு பெரிய பாடத்தைக் கற்பித்துவிட்டாய். நான்தான் பெரியவன் என்று எண்ணி மற்றவர்களை அற்பமாய் எண்ணக்கூடாது என்று படித்துக் கொண்டேன். ஒருவருக்கொருவர் நாம் தேவை," என்றது சிம்மா.

# 43

## குதூகலமான குருவிகள்

இரண்டு குதூகலமான குருவிகள் மரக்கிளை ஒன்றில் அமர்ந்து பாடிக்கொண்டிருந்தன. தினந்தோறும் அவை காலையில் எழுந்து தேவனைத் துதித்துப் பல பாடல்கள் இவ்விதமாகவேப் பாடும். திடீரென்று ஒரு குருவி பாடுவதை நிறுத்தியது. மற்றக் குருவியிடம் அது சொல்லியது, "கொஞ்சம் கீழே பாரேன். எத்தனை பேர் போய்க்கொண்டிருக்கிறார்கள். சிலர் அலுவலகத்திற்குச் செல்கிறார்கள். அவர்கள் கைநிறைய சம்பளம் வாங்குவார்கள். சிலர் பணம் எடுப்பதற்காக வங்கிக்குச் செல்கிறார்கள். இன்னும் சிலர் தங்கள் மூன்று மாடி வீடுகளுக்குச் செல்கிறார்கள். இவர்களைப் பாரேன். ஹோட்டலுக்குள்ளே போகிறார்கள். அறுசுவை உணவை ருசிப்பார்கள். ஆனால் ஒன்றைக் கவனித் தாயா ? யாராவது மலர்ந்த முகத்துடன் இருக்கிறார்களா, பாரேன். ஒரு முகத்திலேயாவது புன்முறுவல் இல்லை, சிரிப்பு இல்லை,



வாயில் பாடலில்லை; ஏன்? ஏன் இவர்கள் முகங்கள் இத்தனை சோகமாய் நீண்டுபோய் இருக்கின்றன? நாம் சம்பாதிப்பதில்லை, நமக்கு வங்கியில் பணமும் இல்லை; ஆனால் இத்தனை சந்தோஷமாகப் பாடிக்கொண்டிருக்கிறோமே!"

அடுத்த குருவி ஒரு நிமிடம் யோசித்துவிட்டுப் பதிலளித்தது, "நமக்கு இருப்பதுபோல் ஒரு பரம தந்தை அவர்களுக்கு இல்லையோ என்னவோ!"

இயேசு நமக்காக கவலைப்படுகிறவராகையால் நாம் அந்தக் குருவிகளைப்போல கவலையற்றவர்களாய் இருக்கவேண்டுமென்று விரும்புகிறார். உங்கள் கவலை என்னவானாலும் உங்களுக்குப் பரலோகத் தந்தை ஒருவர் உண்டு. அவரிடம் சொல்லிவிட்டு மகிழ்ச்சியாயிருங்கள்.

## 44

## *எறும்பும் புறாவும்*



ஓடை ஒன்றில் தவறி விழுந்து விட்ட எறும்பு ஒன்று தன் உயிருக் காகப் போராடிக்கொண்டிருந்தது. ஓடைக்கரையிலிருந்து ஒரு மரக் கிளையில் உட்கார்ந்து ஒரு புறா அந்த எறும்பின் தத்தளிப்பைப் பார்த்துக் கொண்டிருந்தது. எறும்புக் காகப் பரிதாபப்பட்ட புறா ஓர் இலையைக் கொய்து எறும்பின் பக்கமாய்ப் போட்டது. எறும்பு இலையில் ஏறி கரையை அடைந்தது. எறும்பு புறாவுக்கு மிகுந்த நன்றி சொல்லியது.

ஒரு நாள் புறா மரக்கிளையில் உட்கார்ந்திருந்தது. ஒரு வேடன்



புறாவைப் பார்த்ததும் தன் அம்பை எடுத்துக் குறிவைத்துப் புறாவை அடிக்கத் தயாரானான். எறும்பு இதைக் கண்டு பதைபதைத்து ஓடி வேடனின் காலை நறுக்கென்று கடித்துவிட்டது. வேடன் கத்திக் கொண்டே கீழே பார்த்தான். சத்தம்கேட்ட புறா பறந்துபோனது. தன்னைக் காப்பாற்றினது எறும்பு என்று அறிந்து நன்றி செலுத்தியது.

நமக்கு ஒருவர் செய்த நன்மையை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. நன்றியுணர்வோடு இருக்கவேண்டும்.

## 45

## *எச்சரிக்கை: காட்டுத் தீ!*

கோடைகாலங்களில் நிகழும் காட்டுத் தீக்கு பெயர்போன சான்டியாகோ என்ற இடத்தில் இது நடந்தது. அக்டோபர் 2007இல் தேசிய காலநிலை சேவை எச்சரிக்கை விடுத்தது. பெரும் காட்டுத் தீ ஒன்று உருவாக ஏதுவான சூழ்நிலைகள் உள்ளன என அறிவித்தது. அக்டோபர் 21 ஞாயிறன்று பயமுறுத்தக்கூடிய புகைமூட்டங்கள் காட்டுப்பகுதியில் எழத்துவங்கின. சான்டியாகோ தீயணைப்புக் குழுவினர் நவீன எச்சரிப்பு முறைகள் மூலமாக ஆபத்துப் பகுதி யிலிருந்த வீடுகளுக்குப் போன் மூலம் செய்தி அனுப்பினர். “இப்பகுதியிலுள்ளோர் உடனடியாய் வெளியேறுங்கள்!" என்பதே அச்செய்தி. ஆயிரக்கணக்கான மக்கள் அவ்விடத்தைவிட்டு வெளி யேறினர். ஆனால் சிலர் வீட்டை விட்டுச் செல்ல மறுத்துவிட்டனர்.

தங்கள் வீட்டைப் பாதுகாக்கும் முயற்சியில் ஒரு தகப்பனும் அவரது பதினைந்து வயது மகனும் குடும்பமனைத்தையும் வெளியேற்றிவிட்டுப் பின்தங்கிவிட்டனர். தீயணைக்கும் எஞ்சின்கள் வந்தபோது புகைக்காடாயிருந்தபடியால் அவர்கள் உடனடியாய் வெளியேறவேண்டுமென்று எச்சரிக்கப்பட்டனர். உடனடியாய் அவர்கள் தங்கள் வாகனத்தில் ஏறி ஓட எத்தனித்தனர். துரதிர்ஷ் டவசமாக புகையினாலும் நெருப்பினாலும் தகப்பன் எரிந்து மரித்து போனார். மகன் அரைவேக்காடாக ஹெலிகாப்டர் மூலம் தூக்கப்பட்டு



பலமாதங்கள் தீக்காயங்களுக்காகச் சிகிச்சை பெறவேண்டியிருந்தது. அவர்கள் மட்டும் எச்சரிக்கைக்குச் செவிமடுத்திருப்பார்களானால் வீடு அழிந்துவிட்டாலும் உயிர்பிழைத்திருப்பர்.

தமது இரண்டாம் வருகையையும் நியாயத்தீர்ப்பையும் குறித்து மறுபடியும் மறுபடியும் ஆண்டவர் வேதத்தில் எச்சரித்திருக்கிறார். இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு பரிசுத்த வாழ்க்கை வாழ்பவர்கள் நரக அக்கினிக்குத் தப்பித்துக் கொள்வார்கள். மற்றவர்கள் நெருப்பில் கறித்துண்டுகளைப்போல வாட்டப்படுவார்கள். எச்சரிப்பைக் கவனிப்போமானால் மோட்சத்தில் சுகித்திருப்போம். மிகவும் பிந்திப் போகும் வரை காத்திருக்காதீர்கள்.

## *46*

# *உழைப்பின் அற்புதம்!*

ஓர் அம்மா குருவியும் ஓர் அப்பா குருவியும் ஆற்றோரத்து மரத்தின்மேல் வசித்துவந்தன. அவை ஓர் அழகிய கூடுகட்டி அதில் மூன்று ரோஜா நிற முட்டைகளை இட்டன. அவை கூட்டைப் பத்திரமாய்ப் பாதுகாத்து குஞ்சுகள் வெளிவர ஆவலாய்க் காத்திருந்தன. ஒருநாள் ஒரு பெரும்புயல் வீசி மரத்தை அசைத்ததில் கூடு ஆற்றுக்குள்ளே விழுந்துவிட்டது. குருவிகளுக்குத் துக்கம் தாங்கமுடியவில்லை. இரண்டும் ஊக்கமாய் ஜெபித்தும் ஒன்றும் நடக்கவில்லை.

குருவிகள் இலைகளால் இரண்டு தொண்ணைகள் செய்து



அவற்றால் ஆற்று நீரைக் கோரிக் கோரி கரையில் ஊற்றலாயின.



கூட்டை எப்படியாவது எடுத்துவிடலாம் என்ற நம்பிக்கையோடு சலிக்காமல் உழைத்தன. அவ்வழியே சென்ற அணில் ஒன்று, "என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டது. குருவிகள் விளக்கின போது அது கேலிச் சிரிப்பாய் சிரித்து, "அட முட்டாள்களே, ஒருபோதும் ஆற்று நீரைக் காலிசெய்து உங்கள் முட்டைகளை நீங்கள் கண்டெடுக்கமுடியாது. இதை விட்டுவிட்டு ஏதாவது பிரயோஜனமாய்ச் செய்யுங்கள்" என்று சொல்லிச் சென்றது.

குருவிகள் சோர்ந்துபோனாலும் அணில் போனபிறகு தம் நீர் இரைக்கும் வேலையைத் தொடர்ந்தன. திடீரென்று ஆற்றில் ஒரு தேவதூதன் தோன்றி கைகளில் கூட்டையும் முட்டைகளையும் ஏந்தி வந்து குருவிகளிடம் கொடுத்தான். குருவிகளுக்குச் சந்தோஷம் பொங்கியது. அவை தேவதூதனிடம், "நாங்கள் ஜெபித்தவுடனே ஏன் எங்களுக்குக் கூட்டை கொடுக்கவில்லை? ஏன் இத்தனை நாட்கள் காத்திருந்தீர்?" என்று கேட்டன. தேவதூதன், "அதைக்குறித்து நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று பார்க்கக் காத்திருந்தேன். சோர்பு வார்த்தைகளைக் கேட்டபின்பும் நீங்கள் விடாமல் முயற்சிசெய்ததால் உங்கள் உத்தமத்தையும் கடின உழைப்பையும் அறிந்தேன். ஆகவேதான் உங்களை ஆசீர்வதிக்கத் தீர்மானித்தேன்" என்று சொல்லிவிட்டு மறைந்துவிட்டான்.

கடினமாக உழைத்தால் அற்புதங்கள் கட்டாயம் நிகழும்!

## 47

# ஒரே ஒரு புத்தி!

ஒரு குளத்தில் ஒரு பெரிய மீனும் பல சிறிய மீன்களும் தவளைகளும் இருந்தன. கோடை வெயில் அகோரமாகி குளத்துத் தண்ணீர் வற்றத் துவங்கியது. ஒருநாள் மீனவர் வந்து குளத்தைப் பார்த்தனர். மீன்களைப் பிடிக்க இதுதான் ஏற்ற சமயம் என்றும் அடுத்தநாள் வலைகளை எடுத்துக்கொண்டு வரலாம் என்றும் தங்களுக்குள்ளே பேசிக் கொண்டனர்.

மீன்கள் அவர்களது வார்த்தைகளைக் கேட்டு திகிலடைந்தன. திடீரென்று அந்தப் பெரிய மீன் தன் வாலை அடித்துக் கூறியது, "எனக்கு ஆயிரம் புத்தி இருக்கிறது. நான் எப்படியாவது தப்பித்துக் கொள்வேன்." சிறு மீன்கள் துள்ளிக்குதித்து, "எங்களுக்கு நூறு புத்தியுண்டு. நாங்கள் எப்படியாவது தப்பித்துக்கொள்வோம்," என்றன. தவளைகள் துக்கமுகமாயிருந்தன. "எங்களுக்கு இயேசு என்ற ஒரே புத்தியைத் தவிர வேறே புத்தியே கிடையாது. நாங்கள் என்ன செய் வோம்?" என்று தவித்தன.



அடுத்தநாள் மீனவர்கள் வந்து வலையை வீசினபோது முதலாவது பெரிய மீன் அகப்பட்டது. அதைத் தரையில் மல்லாக்கப் போட்டனர். அடுத்து சிறு மீன்கள் மாட்டிக் கொண்டன. அவற்றைக் கயிற்றில் கோர்த்து தொங்கவிட்டனர். அடுத்து அவர்கள் வலைவீசியபோது தவளை களை வாரிக்கொண்டு வந்தது வலை. மீனவர்கள் அவற்றை மறுபடியும் குளத்தில் வீசிவிட்டு வீடு திரும்பினர். தவளைகள் தம் உயிரைக் காப்பாற்றியதற்காகத் தேவனுக்குத் துதிப்பாடல்கள் ஏறெடுத்து நடனமாடின—



*ஆயிரம் புத்தர மல்லாத்தர,*
*நூத்துப் புத்தர கோத்தர.*
*ஒத்தப் புத்தர தத்தர புத்தர,*
*ஒத்தப் புத்தர தத்தர புத்தர.*

இயேசுவே நமது ஞானம். சுயபுத்தியில் சாராமல் அவரில் நமது நம்பிக்கையை வைத்தால் அவர் நம்மைப் பார்த்துக் கொள்வார்.

## 48

# வெறுங்கால்!

டேவிட் என்பவனின் குடும்பம் எளிமையான குடும்பமாயிருந்தாலும் பக்தியுள்ள குடும்பம். அவனது பெற்றோர் தமது சிறிய வருமானத்தில் எப்போதும் தேவனைத் துதித்துக்கொண்டு மகிழ்ச்சியாய் வாழ்ந்துவந்தனர். இது அவனுக்கு எரிச்சல் மூட்டியது. ஏனென்றால் அவனது நண்பர்கள் யாவரும் காலணி அணிந்து வந்தபோது அவன் மட்டும் வெறுங்காலாய்ப் பள்ளிக்குச் செல்லவேண்டியிருந்தது. அப்பாவைக் கேட்டபோதெல்லாம் அவர், "முயற்சி செய்கிறேன் மகனே," என்பார். சிலவேளை அப்பாவிடம் முறுமுறுப்பான், சிலவேளை அம்மாவிடம் மோதுவான். தன் நண்பர்களைப் பார்க்க வெட்கப்பட்டு நீண்ட முகத்தோடு பள்ளிக்குச் செல் வான். அவனுக்குக் கடவுள்மேல் ஆத் திரம். ஜெபிக்கும்போதெல்லாம் தேவ னைக் குற்றஞ்சாட்டுவான்.



ஒருநாள் பள்ளியிலிருந்து திரும்பும் போது இரண்டு சிறுவர் மெதுவாக நடந்து செல்வதைக் கவனித்தான். அவர்களது நடை விநோதமாயிருந்தது. டேவிட் பக்கத்தில் சென்றபோது தெளி வாகப் பார்க்கமுடிந்தது. ஒரு பையன் ஊன்றுகோல் வைத்து நடந்து சென்றான். அவனுக்கு ஒருகால் முழங்காலுக்குக் கீழ் இல்லை. அவன்

சத்தமாகச் சிரித்துக்கொண்டு ஜோக் அடித்துக் கொண்டு நொண்டி நொண்டி சென்று கொண்டிருந்தான். அடுத்தவன் இந்தப் பையனின் தோளில் ஒரு கையை வைத்திருந்தான். அவன் கண் தெரியாதவன். அடுத்தவனின் ஜோக்குகளுக்குக் குலுங்கிக் குலுங்கிச் சிரித்துக் கொண்டிருந்தான்.

டேவிட் மலைத்துப்போனான். ஒரே காலுடைய இந்தப் பையன் வாழ்க்கையின் நன்மைகளில் திளைத்துக்கொண்டிருந்தான்; தானோ இரண்டு நல்ல கால்களோடும் எப்போதும் குறைகூறிக்கொண்டும் கோபப்பட்டுக்கொண்டும் இருந்தான். எத்தனை முட்டாளாயிருந்திருக்கிறான்! காலணிகளைக் குறித்து மறந்தே போனான். குனிந்து தன் கால்களைப் பார்த்து தேவனுக்கு நன்றி செலுத்தினான். முகத்தில் பெரிய புன்னகை மலர்ந்தது.

டேவிட் பின்னர் செருப்பு பேச்சை எடுக்கவேயில்லை. மாறாக குடும்ப ஜெபத்தில் தனக்கு இருப்பவற்றிற்கெல்லாம் தேவனைத் துதிக்கத் துவங்கினான். பெற்றோர் வியப்பில் ஆழ்ந்தனர்.

உங்களுக்கு இல்லாததற்காக கவலைப்படாதீர்கள்; இருப்பவற்றிற்காக தேவனைத் துதித்து மகிழ்ச்சியாயிருங்கள்.

## 49

## *மூலையில் ஒரு மெழுகுவர்த்தி!*

வயதான ஒருவருக்கு மூன்று மகன்கள்—ராமு, சோமு, ஜாமு. தனது சொத்து முழுவதையும் மூவரில் சிறந்த புத்திசாலிக்கே எழுதிவைக்க விரும்பினார். மகன்களிடம், "நான் ஒரு அறையைக் காட்டுவேன். ஒவ்வொருவருக்கும் ஒரு நாள் அவகாசமளிப்பேன். நீங்கள் அந்த அறையை எத்தனை நெருக்கமாக நிறைக்கமுடியுமோ அத்தனை நெருக்கமாக நிறைக்கவேண்டும். யார் மிக நெருக்கமாக அறையை



நிறைக்கிறார்களோ அவர்களுக்கே என் சொத்து முழுவதையும் கொடுக்கப்போகிறேன்" என்றார்.



அடுத்தநாள் ராமுவின் தினம். காலையிலிருந்து சுறுசுறுப்பாக விறகுகளை வெட்டி அறையை நிரப்புவதில் கவனமாயிருந்தான். சோமுவுக்கு வேறொரு யுக்தி இருந்ததால் அவன் சிரித்துக் கொண்டே இருந்தான். தகப்பன் ராமுவின் வேலையில் மகிழ்ச்சியடைந்தாலும் மற்ற இருவரின் வேலையைப் பார்க்கக் காத்திருந்தார். அடுத்தநாள் சோமு வைக்கோல் கட்டுகளைக் கொண்டுவந்து அறையை அடைத்தான். தகப்பன் சாயங்காலத்தில் வந்து சோமுவின் வேலையைக் கண்டு அகமகிழ்ந்தார். "நிச்சயமாய் ஜாமு இதைவிடப் பிரமாதமாகச் செய்துவிட மாட்டான்" என்று எண்ணினார்.

மறுநாள் ஜாமு அமரிக்கையாகத் தன் வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். பார்வையிடும் நேரம் நெருங்கியது; அறையோ காலியாயிருந்தது. தன் தகப்பன் வருவதற்குச் சற்று முன்பாக ஜாமு ஒரு மெழுகுவர்த்தியைக் கொழுத்தி ஒரு மூலையில் வைத்தான். வெளிச்சம் அறை முழுவதையும் நிரப்பிற்று. தகப்பன் பரவசமடைந்து தன் சொத்துக்களை ஜாமுவுக்கே கொடுத்துவிட்டார்.

"நீங்களே உலகத்துக்கு ஒளி" என்றார் இயேசு. இந்த உலகத்தில் கடவுள் நம்மை எங்கு வைத்தாலும் நாம் அங்கிருந்து ஒளி கொடுக்கவேண்டும். நமது மூலையில் நாம் ஒளி கொடுத்துக் கொண்டிருப்போமானால் இந்த உலகத்தைப் பிரகாசிப்பிக்க கடவுள் நம்மைப் பயன்படுத்துவார். நீங்கள் சிறிய மெழுகுவர்த்தியாயிருக்கலாம்; ஆனால் நீங்கள் இருக்கும் இடத்தை ஒளிமயமாக்கலாம்.

## 50

# பன்றிகளும் பீன்சும்

பன்றிகளைப் பிடிப்பது கடினம். அவை வேகமாய் ஓடும். ஆகவே பன்றிக்கறி தயாரிக்கும் நிறுவனம் ஒரு யுக்தியைக் கையாளுகிறது.

ஒரு மனிதன் ஒரு கூடை நிறைய பீன்சைக் கொண்டுவந்து தரையில் கொட்டினான். எல்லாப் பன்றிகளும் அங்கு விரைந்து ஓடி பீன்சைச் சாப்பிட்டு முடித்தன. அம்மனிதன் இன்னொரு கூடை பீன்சைக் கொண்டுவந்து சற்று தூரத்தில் கொட்டினான். பன்றிகள் அங்கு விரைந்து சாப்பிட்டு முடித்தன. அந்த மனிதன் தூர தூரமாய்க் கொட்டிக் கடைசியில் ஓர் அறையில் ஒரு கூடை பீன்சைக் கொட்டினான். எல்லாப் பன்றிகளும் அறைக்குள் முண்டியடித்துக் கொண்டு ஓடி ஆத்திரம் ஆத்திரமாகப் பீன்சை விழுங்கின. அறையின் கதவு சாத்தப்பட்டு பன்றிகள் அடித்துக் கொல்லப்பட்டு டின்களில் பன்றிக்கறியாயின.



இப்படித்தானே பிசாசு நம்மை நரகத்திற்குக் கொண்டுச் செல்கிறான். அவன் தனது பணத்தை இங்கே காட்டுகிறான், நாம் இங்கே ஓடுகிறோம். பின்பு சில அருவருப்பான படங்களைக் காட்டுகிறான், அதற்கும் ஓடுகிறோம். இறுதியில் நாம் திரும்பி வரக் கூடாத தூரம் சென்று நரகத்தில் முடிவடைகிறோம். பாவமாய்த் தோன்றுகிறவற்றையும் விட்டு நாம் விலகும்படி வேதம் ஆலோசனை கூறுகிறது. எல்லா கெட்டக் காரியங்களிலிருந்தும் உங்களை விலக்கிக் காத்துக்கொள்வதினால் நரகத்திற்குத் தப்பித்துக் கொள்ளுங்கள்.



## 51

# புத்தியுள்ள சிறுமி

கமலா தன் சிநேகிதிகளுடன் தோட்டத்தினருகில் விளையாடிக் கொண்டிருந்தாள். நேரமாக ஆக சிநேகிதிகள் ஒவ்வொருவராக வீடு சென்றுவிட்டதால் கமலா தனித்து விடப்பட்டாள். திருடன் போன்ற ஒருவன் தன்னை நோக்கி வருவதைக் கண்டாள். அவனது கண்கள் அவளது தங்கக் கம்மல்களிலேயே லயித்திருந்தன. கமலா அவனது திருட்டு எண்ணத்தைப் புரிந்து கொண்டவளாய் அழுவது போல பாசாங்கு செய்தாள்.



திருடன் அருகில் வந்து, "ஏனம்மா அழுகிறாய்?" என்று கேட்டவுடன், கமலா, "என் நெக்லஸ் கிணற்றிற்குள் விழுந்துவிட்டது," என்றாள். வறண்ட அந்தக் கிணற்றை எட்டிப்பார்த்த பேராசை கொண்ட திருடன் நெக்லஸ் கிடைக்குமே என்று கிணற்றில் மடமடவென்று இறங்கினான். கமலா வீட்டிற்கு ஓடிப்போனாள்.

தனிமையான இடத்தில் ஒருபோதும் நிற்காதீர்கள். பிறரோடு சேர்ந்து நிற்பதே பாதுகாவல்.

# 52

# திருடன்



ஒரு பொல்லாத பாம்பு இருந்தது. அதின் மனைவியும் பிள்ளைகளும் மிகவும் நல்லவர்களும் தேவனை நம்புகிறவர்களுமாயிருந்தார்கள். இந்தக் கெட்ட பாம்பு தினமும் ஒரு கோழியின் கூட்டிற்குள் நுழைந்து அன்று கோழி இட்டிருந்த முட்டையை விழுங்கி விட்டு ஒரு சிறு துவாரம் வழியாக தப்பிச் செல்லும். முட்டையுடைய வயிறு உப்பிக்கொள்ளுமாகையால் பாம்புக்குப் புக முடியாது. அப்போது பாம்பு துவாரத்திற்குள் நெளிந்து நெளிந்து முட்டையை உடைத்துக்கொண்டு வெளியே தப்பிச் செல்லும்.

இந்தத் திருட்டை மனைவி, பிள்ளைகள் அரோசித்தனர். திருட வேண்டாம்; கடினமாக உழைத்துச் சம்பாதித்துச் சாப்பிடவேண்டுமென்று புத்தி சொல்வர். ஆனால் கெட்ட பாம்பு கடவுளை நம்பாதபடியால் சிரித்து மழுப்பிவிடும்.

வீட்டுச் சொந்தக்காரர் தினமும் முட்டையைத் தேடிவந்து ஏமாற்றமடைவார். அவர் பாம்பின் தடத்தைத் தரையில் கண்டு திருடனைப் பிடிக்க ஒரு வழிசெய்தார். கோழி முட்டையிட்டதும் முட்டையை வேகவைத்து கோழியின் அருகே வைத்துவிட்டார். வழக்கப்படியே பாம்பு வந்து முட்டையை விழுங்கியது. அது துவாரத்தின் வழியாகச் செல்லும்போது எப்போதும்போல நெளிந்து முட்டையை உடைக்கப் பார்த்தது. முட்டை கடினமாகிவிட்டதால் உடையவில்லை. பாம்பு பிடிபட்டது. காலையில் வீட்டுச் சொந்தக்காரர் பாம்பைக் கொன்றுபோட்டார். "ஆலோசனையைக் கேட்காமல் போனேனே" என்று அழுதுகொண்டே பாம்பு உயிரை விட்டது.

பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான். நல்லவர்களின் புத்திமதியைக் கேட்டு தவறானவைகளை விட்டு விலகுங்கள்.



# 53

# இரட்டைக் கிளி

ஒரு மனிதன் காட்டு வழியாக ஒத்தையடிப் பாதையில் நடந்து சென்றான். மிகவும் களைப்பாக இருந்தபடியால் ஒரு மரத்தினடியில் படுத்து சற்று கண் அயர நினைத்தான். மரத்தின் உச்சியிலிருந்து கெட்ட வார்த்தைகள் வசைமாரிப் பொழிந்தன. மேலே ஒரு கிளி உட்கார்ந்துகொண்டு, "முட்டாள், அறிவுகெட்டவனே, உதவாக்கரை" என்றெல்லாம் திட்டிக்கொண்டிருந்தது. தாங்கமுடியாமல் அவன் எழுந்து நடக்க ஆரம்பித்தான்.

சீக்கிரம் ஓர் ஆசிரமத்திற்கு வந்தான். உள்ளே போய் சற்று இளைப்பாறலாமே என்று எண்ணினான். ஒரு சாது அங்கே வாழ்ந்து வந்தார். அவன் சாதுவின் வீட்டிற்குள் நுழைந்தவுடனே கம்பு ஒன்றில் உட்கார்ந்திருந்த கிளி, "வாருங்கள் ஐயா! நலமா? உட்கார்ந்து சற்று இளைப்பாருங்கள்" என்றது. தொடர்ந்து அந்தக் கிளி பணிவாக அன்போடு இனிமையாகப் பேசிக்கொண்டே இருந்தது. ஆச்சரியமடைந்த மனிதன் வழியில் நடந்த கதையைச் சொன்னான்.



சாது முழுக் கதையையும் சொன்னார். வேடனொருவன் மரப்பொந்து ஒன்றில் இரண்டு கிளிக் குஞ்சுகளைக் கண்டான். ஒன்றைச் சாதுவிற்குக் கொடுத்துவிட்டு மற்றொன்றைத் தன் வீட்டில் வளர்த்தான். சாதுவிடம் வளர்ந்த கிளி சாது பேசிய பணிவான சுத்தமான மொழியையே நாள் முழுவதும் கேட்டு அப்படியே பேசப் படித்தது. ஆனால் வேடனிடம் வளர்ந்த கிளியோ வேடனும் அவன் வீட்டாரும் பேசிய கெட்ட வார்த்தைகளையே கேட்டுக் கேட்டு அப்படியே பேசப் பழகியது.

நாம் நமது நண்பரைப் போலத்தான் இருப்போம். நல்ல நண்பரோடு இருப்போமானால் நல்ல மொழியும் நன்னடக்கையும் கற்றுக்கொள்

வோம். கெட்ட நண்பரோடே இருப்போமானால் நாமும் கெட்டுப் போவோம். ஆகவே கெட்ட நண்பரைத் தவிர்த்துவிடுங்கள்.

# 54

# மிதந்த கோடரி

ஏழை விறகு வெட்டி ஒருவன் காட்டிற்குச் சென்று ஓர் ஆற்றினருகே மரம்வெட்டத் துவங்கினான். திடீரென்று கோடரியின் முனை பிடியிலிருந்து கழன்று பறந்து ஆற்றில் விழுந்தது. இன்னொரு கோடரி வாங்குவதற்கு அவனுக்கு வசதியில்லாதிருந்ததால் அழத் துவங்கினான்.



அவன் அழுதுகொண்டிருந்தபோது ஆற்றிலிருந்து ஒரு தேவதூதன் தங்கக் கோடரி ஒன்றை எடுத்துக்கொண்டு எழும்பி வருவதைக் கண்டான். தூதன் அவனைச் சமாதானப்படுத்தி, "இந்தக் கோடரி உன்னுடையதா பார்," என்றார். ஏழை மனிதன், "இல்லை, இது தங்கக் கோடரி; என்னுடையது இரும்பாலானது" என்று சொல்லிவிட்டு அழுதான். தேவதூதன் ஆற்றினுள் மறைந்து பின்னும் ஒரு வெள்ளிக் கோடரியுடன் வெளிப்பட்டார். இந்தக் கோடரியையும் அம்மனிதன் ஏற்றுக்கொள்ள மறுத்து அழுதுகொண்டே இருந்தான். தூதன் மறுபடியுமாய் தண்ணீருக்குள் சென்று விறகுவெட்டியின்



கோடரியோடு வந்தார். அவனது முகம் மலர்ந்தது. கையை நீட்டி தூதனுக்கு நன்றி சொல்லிப் பெற்றுக்கொண்டான்.

தேவதூதன், "உன்னுடைய உத்தமத்திற்குப் பரிசளிக்க விரும்புகிறேன். மூன்று கோடரிகளையும் எடுத்துக்கொள், இவை உனக்குத் தேவனுடைய ஈவுகள்" என்றார். ஏழை விறகுவெட்டி அகமகிழ்ந்து வீட்டிற்குச் சென்று சந்தோஷமாய், வசதியாய் வாழ்ந்தான்.

கடவுள் உண்மையுள்ளவர்களை ஆசீர்வதிக்கிறார்.

# 55

# சிருஷ்டிகர்

ரேமாண்ட் தன்னுடைய ஃபோர்டு காரை ஓட்டிக்கொண்டு ஊருக்கு வெளியே வந்தான். சில கிலோ மீட்டர்களே வந்திருப்பான், அதற்குள் கார் மக்கர் செய்து நின்றுவிட்டது. ரேமாண்ட் இறங்கி பானெட்டைத் திறந்து தலையை உள்ளே விட்டுக் காரைச் சரிபார்த்தான். ஆனால் கார் அசையவேயில்லை.

அரைமணி நேரம் கழித்து கோலை ஊன்றி நடைபயின்று கொண்டிருந்த ஒரு வயதானவர் ரேமாண்டிடம் வந்தார். "மகனே, நான் ஏதாவது உதவி செய்யட்டுமா?" என்று கேட்டார். ரேமாண்ட் அந்தத் தாத்தாவை மேலும் கீழும் பார்த்துவிட்டு நினைத்தான்," இந்தக் கிழவர் என்னச் செய்யப்போகிறார்?" பணிவோடு பதிலளித்தான். "இல்லை ஐயா, நான் பார்த்துக்கொள்ளுகிறேன்."

ரேமாண்ட் திணறினான். கார் அசைவதாயில்லை. அரைமணி நேரம் கழித்து அதே வயதானவர் நடைபயிற்சி முடித்து திரும்பிக் கொண்டிருந்தார். "மகனே, நான் ஏதாவது உதவி செய்யட்டுமா?" என்று மறுபடியும் கேட்டார்.

இதற்குள் சலிப்படைந்து போன ரேமாண்ட் 'இனி அவர் ஏதாவது செய்துதான் பார்க்கட்டுமே' என்றெண்ணி, "சரி ஐயா, உங்களால் எதுவும் செய்ய முடியும் என்று நான் நினைக் கவில்லை. இது சிக்கலான ரிப்பேர். வேண்டுமானால் முயற்சிசெய்து பாருங்கள்" என்றான்.



முதியவர் பானெட்டுக்குள் தலையைவிட்டு ஏதோ செய்தார். பின்பு ரேமாண்டைக் காரை எடுத்துப் பார்க்கச்சொன்னார். கார் இரண்டு இருமல் இருமி கிளம்பியது. ரேமாண்ட் அந்த முதியவரின் ஞானத்தைக் கண்டு வியந்தான். "நன்றி ஐயா, உங்கள் பெயரை அறிந்து கொள்ளலாமா ?" என்று கேட்டான். "நான்தான் ஹென்றி ஃபோர்டு" என்று சொல்லிவிட்டுப் பெரியவர் கரமசைத்துக் கோலூன்றி நடைபோட்டார்.

ஃபோர்டு நிறுவனத்தின் நிறுவனரும் சொந்தக்காரருமான ஹென்றி ஃபோர்டின் உதவிக்கரத்தை மறுத்திருக்கிறான் ரேமாண்ட் ! சில வேளைகளில் ரேமாண்டைப்போல நமது சிக்கல்களை நாமே சரி செய்துகொள்ள முயற்சிக்கிறோம். நம்மைப் படைத்தவராகிய கடவுளுக்கு இடமளிப்போமானால் அவர் நமது சிக்கல்களைச் சுலபமாய்த் தீர்ப்பார்.



# 56

# எங்கே போகிறோம்?

ஒரு காட்டிற்குள் புலி ஒன்று மானொன்றைத் துரத்திச் சென்றது. அது துரத்திச் செல்லும் போது நரி ஒன்று குறுக்கேச் சென்றது. நரியைக் கண்ட புலி நரியைத் துரத்தத் துவங் கியது. நரியைத் துரத் திச் சென்றபோது குறுக்கே ஒரு முயல் ஓடியது. கவனம் திசை திரும்பவே நரியை விட்டுவிட்டு முயலின் பின்னே புலி பாய்ந்து சென்றது. திடீரென்று ஓர் எலி குறுக்கே ஓடவே எலியைத் துரத்திச் சென்றது புலி. எலி ஒரு வளைக்குள் ஓடி மறைந்தது. புலி அந்த எலிவளைக்கு முன்னே நின்றுகொண்டு சிந்தித்தது, "நான் எங்கே துவங்கினேன், எங்கே வந்து முடிவடைந்திருக்கிறேன் ?"




நம்மில் பலரும் தேவனையே பின்பற்றுவோம் என்ற உயரிய நோக்கத்துடன் வாழ்வை ஆரம்பிக்கிறோம். நமது பரிசுத்த வாஞ்சைகள் மெல்லவே சிதறடிக்கப்படுகின்றன. செல்வங்களையும் உல்லாசங்களையும் மற்ற உலக நாட்டங்களையும் துரத்திச் சென்று காலியான விரக்தியான உணர்வுடன் முடிவடைகிறோம். வாழ்க் கையின் நோக்கங்களை நேராக வைத்துக்கொள்ளுங்கள். தேவனைப் பின்தொடர்ந்து ஓடுவதைவிட மேலான நாட்டம் வேறொன்றும் இவ்வாழ்க்கையில் கிடையாது.

# 57

## ஆடுகள் கற்பிக்கும் பாடம்

ஓர் ஆற்றின் குறுக்கே குறுகிய பாலம் அமைக்கப்பட்டிருந்தது. இரு முனைகளிலிருந்தும் வந்த ஆடுகள் பாலத்தைக் கடக்க முயன்றன. விலகி நின்று இடமளிக்கப் போதுமான அகலமில்லை. ஒருவரும் பின்னே சென்று வெளியேறி அடுத்தவர் பாலத்தைக் கடக்க அனுமதிப்பதாக இல்லை. ஆகவே இருவரும் தலைகளால் முட்டிச் சண்டையிட ஆரம்பித்தனர். சண்டை முற்றி இருவரும் தண்ணீரில் விழுந்தனர்.

இருவரும் வேகமாக ஏறி மறுபடியும் கடக்க முயற்சித்தனர். ஒருவரையொருவர் கோபக்கனல் வீச தாக்க முற்பட்டபோது தமது வீழ்ச்சியை சிந்தித்துக் கொண்டன. இப்போது ஞானம் வந்தது. ஓர் ஆடு சொன்னது, "தம்பி, நான் படுத்துக்கொள்ளுகிறேன். நீ என்னைத் தாண்டிப்போ; பின்பு நான் கடந்து செல்கிறேன்." இவ்விதமாக இருவரும் சமாதானமாய் ஆற்றைக் கடந்தனர்.



சண்டையில் நாமே இறங்கிப் படுத்துக் கொள்வோமானால் சிக்கல் சுலபமாகத் தீர்ந்துவிடும். மற்றொருவருக்காக விட்டுக் கொடுப்பது கடினமாகத் தெரியலாம். ஆனால் விட்டுக்கொடுக்கப் பழகுவீர்களானால் நன்மை பெறுவது நீங்களேயாம்!



# 58

## தாய்க் கோழி



ஆஸ்திரேலியாவில் ஒரு முறை காட்டுத்தீ பற்றி எரிந்தது. பல ஏக்கர் காடுகளை அது அழித்ததோடல்லாமல் பல விலங்கினங்களையும் பொசுக்கி விட் டது. தீயணைக்கும் படையினரின் விடா முயற்சியால் தீ ஒருவிதமாக அணைக்கப்பட்டது.

தீயணைப்பு வீரர்கள் எரிந்து சாம்பலான காட்டினூடே நடந்து கரிக்கட்டைகளான மரங்களையும் காட்டு மிருகங்களையும் பார்வையிட்டனர். அதிலொருவர் எரிந்து கிடந்த ஒரு காட்டுக் கோழியைக் கண்டு ஒரு குச்சியினால் அதைத் தூக்கினார். என்ன கண்டார் தெரியுமா? வறுபட்ட அந்தக் கோழிக்கடியில் ஆறு கோழிக் குஞ்சுகள் உயிருடனும் கீச்சிட்டுக் கொண்டும் இருந்தன!

உங்களையும் என்னையும் காப்பாற்றும்படியாய் இயேசு தம் உயிரைக் கொடுத்தார் என்று அறிவீர்களா? அவர் மறுபடியும் உயிரோடு எழுந்தார். இன்றும் கூட தாய்க்கோழியைப்போல தமது செட்டைகளின் மறைவிலே பாதுகாவலாக வந்தடையும்படி நம்மை அழைக்கிறார். நாம் இயேசு கிறிஸ்துவை நம்புவோமானால் நரக அக்கினிக்கு பயப்படவே தேவையில்லை. அவர் நம்மைப் பத்திரமாகச் சொர்க்கத்தில் கொண்டு சேர்ப்பார்.

# 59

# கெட்ட இருதயம்

சீனியும் சிம்மனும் இரண்டு சாதுக்கள். அவர்கள் இருவரும் ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொண்டு போட்டியிடுபவர். இருவரும் கடவுளுடைய ஆசியை வேண்டினர். ஆகவே இருவரும் ஒரு காட்டிற்குள் சென்று உபவாசித்து ஆசீர்வாதத்திற்காக வேண்டுதல் செய்யத் தொடங்கினர். அவர்கள் வெவ்வேறு மரத்தடியில் உட்கார்ந்து காத்திருந்தனர்.



ஒரு தேவதூதன் முதலாவது சீனிக்குத் தோன்றி அவனுக்கு என்ன வேண்டுமென்று கேட்டான். சீனி சற்றும் யோசிக்காமல், "நீங்கள் சிம்மனுக்கு என்ன கொடுக்கிறீர் களோ அதை எனக்கு இரட்டிப்பாய்த் தரவேண்டும்," என்றான். இப்போது தூதன் சிம்மனிடம் சென்று அவனு டைய வேண்டுதலென்ன வென்று கேட்டான். "சீனி என்ன கேட்டான்?" என்று கேட்டான் சிம்மன். "உனக்குக் கொடுக்கும் ஆசி அவனுக்கு இரட்டிப்பாய் வேண்டும் என்று கேட்டான்," என்றான் தேவதூதன். சிம்மன் ஒரு கணம் யோசித்தான். பின்பு தூதனிடம் சொன்னான், "எனக்கு ஒரு ஆசி வேண்டும். என்னுடைய ஒரு கண்ணைப் பிடுங்கிவிடு!"

சிலர் தங்களுக்குக் கேடுவந்தாலும் பரவாயில்லை என்று பிறருக்குக் கேடு விளைவிப்பர். நாம் நல்ல இருதயத்தை உருவாக்க வேண்டும். மற்றவர்களை எப்படி ஆசீர்வதிக்கலாம் என்று எப்போதும் சிந்திக்க வேண்டுமேயொழிய பிறருக்குத் தீமை செய்ய நினைக்கக் கூடாது.



# 60

# மூன்று திருடர்

மூன்று திருடர் ஒரு வீட்டில் திருடிவிட்டு கொள்ளைப்பொருளுடன் ஒரு காட்டிற்குச் சென்றனர். திருட்டுப் பொருட்களைப் பங்கிடும்படியாக ஒரு மரத்தடியில் உட்கார்ந்தனர். வேலுவை மதிய உணவு வாங்கிவரச் சொல்லிவிட்டு சாப்பிட்டபின் பங்கிடத் தீர்மானித்தனர். வேலு சென்றவுடன் வீரனும் மாறனும் ஒரு திட்டம் தீட்டினர். வேலு உணவுடன் வந்ததும் அவனை அடித்துக் கொன்றுவிட்டு தாங்கள் இருவரும் திருடின பணத்தையும் நகைகளையும் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்ள நினைத்தனர்.



வேலு வேறொரு திட்டம் தீட்டி னான். உணவில் நஞ்சு கலந்து விட்டால் எல்லாப் பணத்தையும் பொருட்களையும் தான் ஒருவனே அனுபவிக்கலாம் என்று கனவு கண்டான். வேலன் வந்தவுடன் வீரனும் மாறனும் அவனை அடித்துக் கொன்றனர். வெற்றிச் சிரிப்புடன் இருவரும் உட்கார்ந்து, சாப்பிட்டு, செத்து விழுந்தனர்!

பிறருக்கு கேடு விளைவிப்போமானால் அந்தத் தீமையை நாமே அனுபவிப்போம். கெடுவான் கேடு நினைப்பான். பிறர் நமக்கு என்ன செய்யவேண்டுமென விரும்புகிறோமோ அதையே நாம் அவர்களுக்குச் செய்யவேண்டும்.

# 61

# ஜெபிக்கும் கரங்கள்



அகில உலகப் பிரசித்திபெற்ற, நெளிந்து வளைந்த விரல்கள் கூப்பியுள்ள இந்தப் படத்தைத்தான் ஜெபிக்கும் கரங்கள் என்கிறோம். ஜெர்மனியிலிருந்த ஆல்பிரக் ட்டியூரர் மற்றும் பிரான்ஸ் நிங்ஸ்டீன் என்ற இரு வாலிப நண்பர்களின் அன்பும் தியாகமும் பற்றிய கதையாகும் இது. இருவரும் மலரும் ஓவியக் கலைஞர்கள். இருவரும் எளியவராதலால், ஒருவர் சர்வகலாசாலையில் ஓவியப் பயிற்சிபெறச் செல்லும்போது அடுத்தவர் வேலை செய்து அன்னாரைப் படிக்கவைப்பது என்று திட்டமிட்டனர். அதன்பிறகு ஓவியப் பட்டப்படிப்பை முடித்தவர் தனது ஓவியங்களை விற்று அடுத்தவரை ஓவியக் கலைப்பயிற்சிக்கு அனுப்ப முடிவுசெய்தனர்.


யார் முதலில் பட்டப்படிப்பிற்குச் செல்வதென்று சீட்டுப்போட்டு முடிவெடுத்தனர். அதன்படி ட்யூரர் படிக்கவும் நிங்ஸ்டீன் வேலைக்கும் சென்றனர். ட்யூரர் புகழ்பெற்ற ஓவியக் கலைஞராகத் தேர்ச்சிபெற்று பணக்காரராக வீடு திரும்பி, ஒப்பந்தத்தின் தன் பங்கை நிறைவேற்ற துடிப்புடனிருந்தார். அப்பொழுதுதான் தன் சிநேகிதன் தனக்காகச் செலுத்திய பெரும் கிரயத்தை வேதனையோடு அறிந்துகொண்டார். சில ஆண்டுகளாக சுரங்கத்தில் கரடுமுரடான கடின கூலிவேலை செய்ததில் நிங்ஸ்டீனின் மென்மையான உணர்வுள்ள விரல்கள் பாழாகிவிட்டிருந்தன. ஓவியனாகும் தனது கனவை அவர் கைவிடவேண்டி வந்தாலும் தனது நண்பனின் சாதனையில் அவர் அகமகிழ்ந்தாரேயொழிய கவலைப்படவில்லை.

ஒரு நாள் நிங்ஸ்டீன் தனது நெளிந்து வளைந்து போன கரங்களைக் கூப்பி முழங்காலிட்டிருப்பதை ட்யூரர் காண நேர்ந்தது. அந்த ஓவியர் விரைவாக அந்த ஜெபிக்கும் கரங்களை வரைந்தார். இன்றைய ஓவியக் கண்காட்சிகளில் ட்யூரரது பல படைப்புகள் சிறப்பிடம் பெற்றாலும் மக்களுக்கு மிகவும் பிடித்தமானது ஜெபிக்கும் கரங்கள்தான். அன்பு, தியாகம், உழைப்பு மற்றும் நன்றியின் சிகரமான உள்ளத்தைத் தொடும் இக்கதையைப் பின்னணியில் கொண்ட இச்சித்திரம் உலகெங்கும் கோடிக்கணக்கில் நகலெடுக்கப்பட்டுள்ளது!



# 62

# முட்டாள் யார்?



ஓர் இடுக்கமான பாதையில் இரு மனிதர்கள் எதிரெதிராக வந்துகொண்டிருந்தனர். முக முகமாய் வந்தனர். பாதை இடுக்கமாய் இருந்ததால் ஒருவர் சுவர்புறமாய்ச் சாய்ந்து கொண்டால்தான் அடுத்தவருக்கு வழிவிட முடியும். தனக்கெதிரே வந்தவரை வெறுத்த தலைகனம் பிடித்தவர், "நான் முட்டாள்களுக்கு வழிவிடுவதில்லை," என்றார். அடுத்தவர் பணிவுடன், "நான் விடுவேனையா, நீங்கள் செல்லலாம்," என்று ஒதுங்கிக்கொண்டு வழிவிட்டார். அகங்காரம் பிடித்த அயலகத்தவர் வெட்கினார்.

வேதம் நாம் யாரையும் முட்டாள் அல்லது மூடன் என்று சொல்லக்கூடாது என்று போதிக்கிறது. அப்படிச் சொல்வோமானால் கடவுளது கோபத்திற்கு ஆளாவோம். யாரையாவது முட்டாள் என்று சொல்வதினால் நம்மையே முட்டாளாக்கிக் கொள்ளுகிறோம்.

# 63

## அழகிய கறை

மூன்று மீனவர் ஒரு டீக்கடையில் உட்கார்ந்து டீ கேட்டனர். டீ கொண்டுவரப்பட்டபோது அவர்கள் தாங்கள் பிடித்தவற்றைக் குறித்து மெய்மறந்து பேசிக்கொண்டிருந்தனர். ஒருவர் தன் கரங்களை அகல விரித்து தான் அத்தனை பெரிய மீன் பிடித்ததாகக் காட்டினார். டீ கொண்டுவரப்பட்டத் தட்டில் அவரது கை, வேகமாய்ப் பட்டதால் டீ எதிரிலிருந்த சுவற்றில் கொட்டி, டீக்கடையின் அழகிய வெள்ளைச் சுவர் கறையானது.



கோபமடைந்த டீக்கடை சொந் தக்காரர் ஆவேசமாக மீனவனை நோக்கி வந்தார். பயந்து போன மீனவனைப் பார்த்து அவர் கத்தத் துவங்கினபோது, வேறொரு மேசை யில் உட்கார்ந்திருந்த ஒருவர் விரை வாக எழுந்து அவசரமாக மீனவரின் மேசைக்கு வந்தார். மெல்ல கடைக்காரரை சாந்தப்படுத்தினார். அவர் சுவற்றினருகேச் சென்று தனது பாக்கெட்டிலிருந்து சாயக் கட்டிகளை எடுத்தார். சில நிமிடங்கள் தனது சாயக் கட்டிகளால் கோடிழைத்து வண்ணம் பூசினார். டீ கறை கெம்பீரமான கொம்புகளையுடைய கலைமானாக உருமாறியது. மீனவர் வாயடைத்து நின்றனர்; உரிமையாளர் கையெடுத்துக் கும்பிட்டார்.

உங்கள் வாழ்க்கை கறைபடிந்துவிட்டிருக்கலாம். பரீட்சையில் தோல்வியடைந்திருப்பீர்கள் அல்லது நண்பருடன் சண்டை போட்டி ருப்பீர்கள். இன்னும் பல இருக்கலாம். உங்கள் வாழ்க்கையை இயேசுவிடம் ஒப்படையுங்கள். அவர் அதைக் கவர்ச்சிகரமான ஓவியமாக மாற்றிவிடுவார்.



# 64

## யாரைப் பின்பற்றுகிறீர்கள்?



நான்கு வயது சிறுவனொருவன் தன் பெற்றோரால் வேறொருவரிடம் ஓர் இரவு பார்த்துக் கொள்ளும்படியாக விடப்பட்டான். இரவு ஒன்பது மணி. அவர் பையனைத் தூங்கவைத்துவிட்டு வீட்டிற்கு வெளியே நடந்துசென்றார். சிறிது நேரத்தில் பையன் விழித்துக் கொண்டு தன் பாதுகாவலரைக் காணாமல் கதவண்டைக்குச் சென் றான். கதவைத் திறந்தபோது பனி பெய்துகொண்டிருப்பதையும் பனியில் ஒருவரது கால்தடங்கள் பதிந்திருப்பதையும் கண்டான். அந்தச் சிறுவன் கால் தடங்களிலேயே நடக்கலானான். எங்கு வந்து சேர்ந்தான் தெரியுமா? கள்ளுக்கடைக்கு! அங்கே அந்த மனிதன் குடித்துக் கொண்டிருந்தான்.


நமக்குச் சிலரைப் பிடிக்கலாம். இன்னும் சிலரை நமது ஹீரோக்களாக நாம் நினைக்கலாம். நாம் யாரைப் பாராட்டுகிறோமோ அன்னாரைப் பின்பற்றுகிறோம். ஒருவரை நாம் பின்பற்றும்போது அவர் எங்கே செல்கிறாரோ அங்குதான் நாமும் செல்கிறோம். பின்பற்றச் சிறந்தவர் இயேசு. அவரது அடிச்சுவடுகளில் நடப்பீர்களானால் நிச்சயம் மோட்சம் வந்து சேருவீர்கள். எப்படி அவரது அடிச்சுவடுகளில் நடக்கலாம்? வேதத்தைக் கிரமமாய் வாசித்து இயேசுவைப்போல் வாழ்வதின் மூலமாகத்தான். அப்படித்தான் இயேசுவின் அடிச் சுவடுகளில் நடக்கவேண்டும்.

# 65

## கீரியும் பிள்ளையும்

ஓர் அம்மா ஒரு கீரியைச் செல்லமாக வளர்த்து வந்தார்கள். அது வீட்டில் விளையாடித் திரிந்தது. ஒருநாள் அந்தத் தாய் தன் குழந்தையைப் பாயில் போட்டுவிட்டு தண்ணீர் எடுக்கக் குடத்தைத் தூக்கிக்கொண்டு வெளியே போனார்கள். அவர்கள் தண்ணீர் குடத்தோடு திரும்பி வரும்போது வீட்டு வாசற்படியில் கீரி நிற்பதைக் கண்டார்கள். அதன் வாயிலிருந்து இரத்தம் சொட்டிக்கொண்டிருந்தது.

தாய் கதிகலங்கிவிட்டாள். "அடப் பாவி, என் குழந்தையைக் கொன்றுவிட்டாயே," என்று அலறிக்கொண்டு தண்ணீர் குடத்தை கீரியின்மேல் போட்டுவிட்டு உள்ளே ஓடினாள். உள்ளே ஓடினவள் என்னத்தைக் கண்டாள்? குழந்தை பாயில் சிரித்து விளையாடிக்கொண்டிருந்தது. குழந்தையின் அருகே நல்லபாம்பு ஒன்று கடித்துக் கொல்லப்பட்டுக்கிடந்தது.



நல்லபாம்பு வீட்டுக்குள் நுழைந்திருக்கிறது. பாம்பு குழந்தையிடம் செல்வதைக் கண்ட கீரி குழந்தையைக் காப்பாற்ற ஓடிப் பாம்புடன் சண்டைபோட்டு அதைக் கொன்றுவிட்டது. தாயினிடமிருந்து பாராட்டு பெறும்படியாக பெருமிதமாக வாசற்படியில் நின்று கொண்டிருந்தது.

தாய் கீரியைப் பார்க்க ஓடினாள். அது நசுங்கி செத்துக்கிடந்தது.

நாம் அவசரப்பட்டு யாரையும் நியாயம்தீர்க்கக் கூடாது. சிலவேளை நமது பெற்றோர் கெட்டவர்கள் என்று நினைக்கிறோம். சிலவேளை ஒரு நண்பனது பொய்யை நம்பி மற்றொரு நண்பனது நட்புறவை முறித்துக் கொள்ளுகிறோம். நாம் பொறுத்திருக்க வேண்டும். காரியத்தை நிச்சயமாக அறியும்வரை காத்திருக்க வேண்டும். உண்மை அறிய சிலவேளை அதிக காலமாகலாம். ஆகவே அவசரப்பட்டு யாரையும் குற்றஞ்சாட்டக் கூடாது.




# 66

## உறுதியான அன்பு

சுசிலாவும் சுனிலும் மணி மற்றும் மேரியினுடைய பிள்ளைகள். மணியும் மேரியும் ஆசிரியர்களாகப் பணிபுரிந்து வந்ததால் பிள்ளைகளைக் கவனிக்க அவர்களுக்கு நேரம் கிடைப்பது அபூர்வம். சாயங்காலம் ட்யூஷனும் எடுப்பதினால் நிறைய சம்பாதித்தனர். அவர்கள் ஒரு வீடு கட்டவும் ஒரு காரும் குளிர்சாதனப் பெட்டியும் வாங்கத் திட்டமிட்டிருந்தனர். ஓர் ஏ.சி.யும் துவைக்கும் இயந்திரமும் பட்டியலில் இருந்தன. அவர்களுக்குப் பிள்ளைகளோடு நேரம் செலவழிக்க முடியாததால் வேறு வழியில் தம் அன்பைக் காட்டினர். நிறைய விளையாட்டுச் சாமான்கள் வாங்கிக் கொடுப்பதோடு அடிக்கடி வெளியே சாப்பிடவும் அழைத்துச் செல்வர். இரண்டு பிள்ளைகளும் சோபாவில் படுத்து நேரம் போவது தெரியாமல் டி.வி. பார்ப்பர். சாயங்காலம் பெற்றோர் கோழி சமுசாவும் சாக்லேட் கேக்கும் வாங்கி வருவதைப் பிள்ளைகள் சாப்பிட்டுவிட்டு உணவின்றித் தூங்கிவிடுவர். தாய்க்கு இது சுலபமானதுதான். இதுவே அடிக்கடி நடக்கும்.

எப்பொழுதெல்லாம் பெற்றோருக்கு சுசிலாவையும் சுனிலையும் கவனிக்கமுடியாதோ அப்பொழுதெல்லாம் அவர்கள் அண்மையிலிருந்த தாத்தா பாட்டி வீட்டில் விடப்படுவர். இது அடிக்கடி நடக்கும். இருவருக்கும் தாத்தா பாட்டி வீடு என்றால் வேப்பங்காய்தான். அங்கேயுள்ள கட்டுப்பாடுகளை இருவரும் வெறுத்தனர். பாட்டியின் கதைகளை அவர்கள் விரும்பினாலும் அவர்கள் இரவு பல்தேய்க்கக்

கட்டாயப்படுத்துவது எரிச்சல் மூட்டியது. பருப்பையும் காய்கறிகளையும் விழுங்கமுடியாமல் முழிக்கும்போது சாப்பாட்டை முடிக்காமல் மேசையைவிட்டு எழக்கூடாது என்பார் தாத்தா. அவர்களது தட்டை அவர்களே கழுவி வைக்க வேண்டும். போர்வைகளையும் தங்கள் உடைகளையும் மடித்துவைக்க வேண்டும். குளித்தபின் டவலை கம்பியில் விரித்துப்போடவேண்டும். காலணிகளை அதற்குரிய ஸ்டான்டில் வைக்கவேண்டும். டி.வி. பார்க்க அனுமதி கிடையாது. எப்போதாவது அரை மணி நேரம் பார்க்க விடுவார்கள். ஆனால் இருவருக்கும் சைக்கிள்களும் ஷட்டில் காக்குகளும் கால்பந்தும் வாங்கிக் கொடுத்திருந்தனர். இருவரும் இவற்றை வெறுத்தனர். வேறு வழியில்லாமல் அவற்றைப் பயன் படுத்தினர்.



பாட்டி-தாத்தாவோடு தூங்க வேண்டிய நாட்களில் மெல்லவே ஆறு மணிக்கு எழுப்பிவிடப்படுவது அவர் களுக்குக் கொடுமையாகத் தெரிந்தது. எந்த இனிப்பும் ஒருநாளைக்கு ஒன்று தான் அல்லது அதுவும் கிடையாது.

தாத்தா அவர்களைக் குடும்ப ஜெபத்தில் உட்காரவைத்து பைபிள் போதிப்பார். அதன் பிறகு வீட்டுப் பாடங்களை முடித்துவிட்டு படிக்க வேண்டும். வேதாகமத்தைப் படித்து தாத்தா கேட்கும் கேள்விகளுக்குப் பதிலளித்துவிட்டு ஜெபிக்க வேண்டும். விருந்தினர் வந்தால் எழுந்து நின்று கைகூப்பி வணக்கம் சொல்லவேண்டும். டி.வி. ஓடிக் கொண்டிருந்தால் அணைக்க வேண்டும். இருவரும் முணங்குவர். விளையாடினால் விளையாட்டு சாமான்களை எடுத்த இடத்தில் வைத்து இடத்தைச் சுத்தம்செய்ய வேண்டும். பேஸ்ட் ட்யூப் திறந்து கிடந்தால் கூப்பிட்டு மூட வைப்பர். சிலசமயங்கள் பெற்றோர் ஞாயிற்றுக்கிழமை ஓய்வெடுத்தால் தாத்தா பாட்டியோடு கோவிலுக்குப் போகவேண்டும்.

வளர்ந்தபோது அப்பாவின் ஸ்கூட்டரை எடுத்துச் செல்வர். தாத்தா வீட்டில் அதெல்லாம் நடக்காது. லைசன்ஸ் எடுக்குமுன் ஓட்டக் கூடாது என்று தாத்தா ஒற்றைக் காலில் நின்றுவிட்டார். கடைக்கு அனுப்பினார்களானால் கடைசி பைசாவரை கணக்குக் கொடுக்கவேண்டும்.



ஒருநாள் இருவருமாக தாத்தா-பாட்டி வீட்டிற்குப் போவதில் லையென்று தீர்மானித்தனர். மணியும் மேரியும் தாத்தா-பாட்டியிடம் பிள்ளைகளைச் சற்று விடுதலையோடு விடுங்கள், அதிகம் விரட்டாதீர்கள் என்று கேட்டுப்பார்த்தனர். ஆனால் அவர்கள் அசைய மறுத்து விட்டனர். சுசிலாவும் சுனிலும் தங்கள் வீட்டில் இருக்க வேண்டுமென்றால் வீட்டு ஒழுங்கின்படிதான் நடக்கவேண்டும் என்று சாதித்துவிட்டனர். வேறு வழியின்றி மணியும் மேரியும் முழுநேரமும் பிள்ளைகளைத் தங்களுடனே வைத்துக்கொண்டனர்.

நாட்கள் கடந்தன. சில மாற்றங்கள் தெரிந்தன. இரு பிள்ளைகளின் எடையும் கணிசமாகக் கூடிவிட்டது. சகமாணவர் கிண்டல் செய்தனர். சுசிலாவிற்குப் பல் சொத்தையானதினால் பல் டாக்டரிடம் செல்வதும் வேதனையான சிகிச்சையும் அவள் அனுபவிக்க வேண்டியதாயிற்று. சுனிலுக்கு ஊட்டச்சத்துக் குறை ஏற்பட்டு வாயில் புண்கள் தோன்றின. மார்க்குகள் குறையத்துவங்கின. பிள்ளைகளை பாரமாக எண்ணி யதால் மணியும் மேரியும் எப்போதும் சண்டை போட்டுக் கொண்டனர். தலைமை ஆசிரியர் இருவரையும் கூப்பிட்டு பிள்ளைகள் முன்னேற்றம் காட்டாவிட்டால் பள்ளியிலிருந்து நீக்கப்படுவர் என்று எச்சரித்தார். சுசிலாவும் சுனிலும் அவமானம் அடைந்தனர். தாத்தா-பாட்டியின் அன்பைப் புரிந்துகொண்டனர். அது உறுதியான அன்பு!

இருவரும் தாத்தா-பாட்டியுடன் கூடுதல் நேரம் செலவழிக்க ஒத்துக்கொண்டனர். கடினமாக இருந்தாலும் ஒழுக்கம் கற்றுக் கொண்டனர். அவர்களது உடல்நிலை தேறியதுடன் மார்க்குகளும் கூடின. இருவரும் சுகதேகிகளாக வளர்ந்தனர்.

இருவரும் கெட்டிக்காரராக வளர்ந்தனர். இருவரும் திருமணம் செய்து பிள்ளைகளைப் பெற்றனர். அதன்பின் பேரப்பிள்ளைகளையும் பெற்றனர். அவர்களிடம் உறுதியான அன்பைக் காட்டினர்.

வீட்டின் ஒழுங்குகள் கொடுமையாகத் தோன்றலாம். ஆனால் அதுவே பின்நாட்களில் உங்களைக் கண்ணியமான மனிதராக வளர்க்கும்.

## 67

# ஒரு மூட்டை தங்கத்தின் விலை

பேராசை பிடித்த ஒரு மனிதன் இருந்தான். அவனது வாழக்கையின் நோக்கமே பொன்னையும் பொருளையும் ஈட்டுவதுதான். ஒரு மூட்டை நிறைய தங்கம் சேர்த்திருந்தான். ஒருநாள் திடீரென்று மரித்துப் போனவன் தன் மூட்டை தங்கத்தை எடுத்துக்கொண்டே சென்றான். பரலோகத்தின் வாசலுக்குச் சென்று கதவைத் தட்டினான். ஒரு தேவதூதன் கதவைத் திறந்து அவனை விநோதமாய்ப் பார்த்தான். "எதற்காக இவ்வளவு கற்களைத் தூக்கிக்கொண்டு வந்திருக் கிறாய்?" என்று கேட்டான். அம்மனிதன், "என்ன அப்படிக் கேட்டுவிட்டாய்? இவையெல்லாம் கற்களல்ல, தங்கக்கட்டிகள்," என்றான். "ஓகோ, அப்ப டியா? இங்கு இவற்றையெல் லாம் ரோடு போடத்தான் பயன்படுத்துவோம்," என்றான் தூதன்.



இவ்வுலகில் விலையுயர்ந் தவையாக எண்ணப்படு பவைகள் மறுவுலகில் அற் பமானவைகளாகக் கருதப் படும். ஆகவே உங்கள் இத யத்தை இவ்வுலகப் பொருட்களில் வைக்காமல் மேலோகத்திற்கு ஏற்றவைகளில் வையுங்கள்.



## 68

# ஏமாற்றாதே!



கண்ணியமான பணக்காரர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு தோட்டக்காரனை பணியமர்த்தினார். இப்பணக்காரர் தாராள மனமுள்ளவர். ஆகையால் தோட்டக்காரனுக்கு ஒரு வீடு கட்டிக்கொடுக்க நினைத்தார். ஆனால் அதை இரகசியமாக வைத்து அவனைத் திடீர் சந்தோஷத்தில் ஆழ்த்த நினைத்தார். அவர் தோட் டக்காரன் லக்குவிடம் பணம்கொடுத்து சிறந்த சிமென்டை வாங்கச் சொன்னார்.

லக்கு நேர்மையற்றவன். அவன் தரமற்ற சிமென்ட் வாங்கிக் கொடுத் துவிட்டு மீதப் பணத்தைச் சாப்பிட்டு விட்டான். தரக் குறைவான செங்கலும் ஜன்னல் கம்பிகளும் வாங்கினான். கைதேர்ந்தவர்களைப் பணியமர்த்தாமல் சோம்பேறிகளை வைத்து வீட்டைக் கட்டிமுடித்தான்.

லக்கு எஜமானனிடம் சென்று வீட்டுச் சாவியை ஒப்படைத்தான். எஜமான் லக்குவைத் தோளில் தட்டிக்கொடுத்து, "லக்கு, இந்த வீடு உனக்கும் உன் குடும்பத்துக்கும்தான். நீ கட்டின வீட்டை மகிழ்வோடு அனுபவி," என்றார். லக்குவின் முகத்தில் தோன்றிய அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் உங்களால் கற்பனை செய்யமுடிகிறதா?

சிலவேளை நாம் கடவுளை ஏமாற்றுவதாக நினைக்கிறோம். ஆனால் நம்மைத்தான் ஏமாற்றிக் கொள்ளுகிறோம். யாரையும் ஏமாற்றும்போது பாதிக்கப்படுவது நாமேதான்.

# 69

# கம்பளத்திற்கு அடியில்!

ராணி தன் தாயினால் கிறிஸ்தவ நம்பிக்கையில் வளர்க்கப்பட்டவள். அவளுடைய குடும்பம் ஏழ்மைப்பட்டிருந்ததால் ராணி ஒரு வீட்டில் வேலை செய்தாள். ராணியின் வேலை வீட்டைச் சுத்தம் செய்வது. ஒரு நாள் ராணி வீட்டைக் கூட்டிக்கொண்டிருந்தாள். வீட்டிலிருந்த ஒரு விருந்தாளி ராணி கூட்டுவதைக் கவனித்துக் கொண்டிருந்தார். கம்பளத்தைத் தூக்கி, சுத்தமாக அடியில் கூட்டிவிட்டு கம்பளத்தை ராணி மறுபடி விரித்தாள். விருந்தினர், "பாப்பா, யாரும் கம்பளத்திற்கு அடியில் பார்க்கப் போவதில்லையே. ஏன் அதற்கடியில் கூட்டுகிறாய்?" என்று கேட்டார். ராணி, "ஆமையா, யாரும் பார்க்க மாட்டார்கள்தான்; ஆனால் கடவுள் கம்பளத்திற்கு அடியிலும் பார்க்க முடியுமே" என்றாள்.



நாம் என்ன செய்தாலும் அதை மனிதர்களுக்காக அல்ல, கடவுளுக்காக செய்ய வேண்டும். மனிதரால் பார்க்க முடியாததைக் கடவுள் பார்க்கிறார்.



# 70

# காக்கும் கிருபை!

மிஷனரிகளான ஒரு கணவனும் மனைவியும் காட்டுவழியாக ஒரு கிராமத்திற்குத் தங்கள் பழைய காரில் சென்றுகொண்டிருந்தனர். காட்டு மிருகங்கள் நிறைந்த அந்தக் காட்டின் வழியாய்ச் செல்வது ஆபத்தானது. ஆனால் அவர்கள் நோய்வாய்ப்பட்ட ஒரு மனிதனுக்கு உதவி செய்யவேண்டியிருந்தபடியால் வேறு வழி இல்லை.

பாதிதூரம் சென்றிருக்கும்போது அவர்கள் போய்க்கொண்டிருந்த மண் ரோட்டில் இருளான ஒரு நிழல் தெரிந்தது. அது ஒரு பெரிய ஆண் யானை. கார் விளக்கைப் பார்த்த யானை பிளிறிக்கொண்டு காரை நோக்கி ஓடிவந்தது. பயந்துபோன மிஷனரிகள் ஜெபிக்கத் துவங்கினர். பின்னாகச் செல்லவோ திரும்பிப் போகவோ நேரம் கிடையாது. கிட்டவந்த யானை துதிக்கையைத் தூக்கி கார் விளக்கில் ஒன்றை முதலிலும் பின்பு அடுத்ததையும் அடித்து உடைத்தது. அங்கேயே பிளிறிக் கொண்டு கொஞ்ச நேரம் நின்றுவிட்டு பின்பு காட்டிற்குள் சென்று மறைந்தது. காரை ஒரு மிருகம் என்று நினைத்த யானை, விளக்குகள் அணைந்ததும் மிருகம் செத்துவிட்டது என்றெண்ணி விட்டுச் சென்றது. மிஷனரிகள் மெதுவாக காரை ஓட்டிச்சென்று கிராமத்தை அடைந்தனர்.



எந்த ஆபத்திலும் இயேசுவின் பெயரைச் சொல்லிக் கூப்பிடுங்கள். அவர் தமது தேவதூதரை அனுப்பி உங்களைப் பாதுகாப்பார்.

# 71

# கலைஞனின் தொடுதல்!

ஏலம் நடந்து கொண்டிருந்தது; ஒவ்வொன்றாக பழைய பொருட்கள் ஏலத்திற்கு வந்தன. ஏலமிடுபவர் ஒரு பழைய வயலினை எடுத்தார். வயலினின் கம்பிகள் அறுந்துபோய் ஒரே ஒரு கம்பிமட்டும் இருந்தது. ஒருவர் "ஐந்து ரூபாய்" என்றார். "பத்து ரூபாய்" என்று மற்றொரு குரல் எழுந்தது. திடீரென்று கூட்டத்திலிருந்து ஒரு மனிதன் எழும்பி மேடைக்கு வந்தார். அவர் அந்த வயலி னைத் தன் கையில் எடுத்து மீதமிருந்த அந்த ஒரே கம்பியில் திறமையாக வாசிக்க ஆரம்பித்தார். இனிமையான இசை அறை முழுவதும் அலையலை யாகக் காற்றில் மிதந்து வந்தது. குழுமியிருந்தோர் மெய்சிலிர்த்துப் போயினர்.



அம்மனிதர் வயலினை ஏலமிடுவோர் கையில் கொடுத்துவிட்டு மேடையிலிருந்து இறங்கினார். "ஆயிரம் ரூபாய்" என்று ஒரு குரல் எழும்பியது. "ஐந்தாயிரம்" என்றது இன்னொரு குரல். இறுதியாக அந்தப் பழைய வயலின் பத்தாயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டது.

நீங்கள் உங்களை "உதவாக்கரை" என்று எண்ணாதீர்கள். கலை ஞனாகிய ஆண்டவர் உங்களைத் தொடுவதற்கு ஒப்புக்கொடுத் தீர்களானால் விலையேறப்பெற்றவர் ஆவீர்கள்.



# 72

# குற்றமுள்ள மனச்சாட்சி

கோடைகால விடுமுறை வந்துவிட்டால் போதும், ஜாக்கும் ஜில்லும் பாட்டி வீட்டிற்குப் புறப்படத் துவங்கிவிடுவார்கள். இந்த ஆண்டும் அவ்விதமாகவே துடுதுடுப்புடன் பாட்டி வீட்டில் வந்து இறங்கிவிட்டனர். அவரவர் வேலை அவரவருக்குக் கொடுக்கப்பட்டது. ஜாக் வீட்டைக் கூட்ட வேண்டும், ஜில் பாத்திரங்களைத் துலக்கவேண்டும். பாட்டியம்மாவிற்குப் பெரிய தோட்டமும் ஓடி விளையாட நிறைய இடமுமிருந்தது. அதுமட்டுமல்ல, வாத்துகளும் கோழிகளும் வான்கோழிகளும் ஒரு நாயும் இருந்ததால் பிள்ளைகளின் சந்தோஷத்திற்கு அளவேயில்லை.

ஒருநாள் ஜாக்கும் ஜில்லும் விளையாடிக் கொண்டிருந்தபோது விளையாட்டாக ஜாக் ஒரு கல்லைத் தூக்கி ஒரு வாத்தின்மேல் எறிந்தான். கல் சரியாக வாத்தின் தலையில் படவே வாத்து செத்து விழுந்தது. ஜாக் மிகவும் பயந்துபோய் உடனே ஒரு குழியைத் தோண்டி வாத்தைப் புதைத்துவிட்டான். சாயங்காலத்தில் பாட்டியம்மா பறவைகளை எண்ணியபோது ஒரு வாத்து குறைந்தது. ஆனால் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. யாரோ திருடிவிட்டார்கள் என்று நினைத்தார்கள்.



மறுநாள் ஜாக் வீட்டைக் கூட்டிக்கொண்டிருந்தபோது ஜில் ஆடிக்கொண்டிருந் தாள். "என்ன ? உன் வேலை யைச் செய்யவில்லையா ?" என்று கேட்டான் ஜாக். "இன்னிக்கி சார் பாத்திரம் கழுவணும்," என்றாள் ஜில் குறும்பாக. "அட, உன் வேலை யை ஏன் என் மேல போடற ?" என்றான் ஜாக். "செய்யா

விட்டால் பாட்டிமாவிடம் வாத்துக் கதையைச் சொல்லிவிடுவேன்" என்று சிரித்தாள் ஜில். "வேணாம்மா, தாயே, நானே பாத்திரங்களைக் கழுவிவிடுகிறேன்," என்றான் ஜாக் பரிதாபமாக. பாத்திரங்களைக் கழுவிக் கவிழ்த்தினான்.

அடுத்த நாள் ஜில் அதே தந்திரத்தைக் கையாண்டாள். அவமானம் ஒருபக்கம், ஜில்லின் குத்தலான பேச்சு மறுபக்கம். ஒருவாரம் கடந்தது. ஜாக் நிலைகுலையத் துவங்கினான். "பாட்டியிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டால் என்ன ?" என்று ஒரு யோசனை வந்தது. பயந்தான், இருந்தாலும் தைரியத்தை வருவித்துக்கொண்டு பாட்டியம்மாவின் அறைக்குச் சென்றான். விம்மிக்கொண்டும் மூக்கை உறிஞ் சிக்கொண்டும் தான் வாத்தை அடித்துவிட்ட கதையையும் புதைத்துவிட்ட கதையையும் துண்டுதுண்டாகத் துப்பினான். "சாரி, பாட்டிமா, ரொம்ப சாரி, மன்னிச்சுக்கோங்க" என அழ ஆரம்பித்தான்.

பாட்டியம்மா அவனை இழுத்து அணைத்துக் கொண்டார்கள். "அந்த வாத்தை என்னிடம் கொண்டு வந்திருக்கவேண்டும். உனக்கு அதை வறுத்துக் கொடுத்திருப்பேனே; சரி, கவலைப்படாதே. ஓடிப்போய் விளையாடு," என்றார்கள். ஜில் கூப்பிட்டாள். "ஜாக் எங்கே யிருக்கிறாய் ? வா, உன் வேலையை முடி" என்றாள். "அது என் வேலையல்ல, உன் வேலை," என்றான் ஜாக் கண்ணடித்துக் கொண்டே. "என்ன ? பாட்டியிடம் போய் சொல்லட்டுமா ?" மிரட்டினாள் ஜில். "போய் சொல்லிக்கோ. யாருக்கென்ன ?" என்றான் ஜாக். ஜில்லுக்கு விஷயம் புரிந்துவிட்டது. இனி அவள் ஜாக்கை ஆட்டிப்படைக்க முடியாது.

கடவுளுக்குப் பிரியமல்லாத ஒன்றைச் செய்துவிட்டோமானால் உடனே நாம் அதைக் கடவுளிடம் அறிக்கையிட்டு இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்படவேண்டும். அப்படியானால் சாத்தான் நம்மை விரட்டமுடியாது. நமது குற்றமுள்ள மனச்சாட்சி இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்படும்.



# 73

# தாயின் அன்பு!

ஒரு சிறுவனுக்கு டிப்தீரியா நோய் வந்தது. டிப்தீரியா என்பது தொண்டையைப் பாதித்து மரணத்தை விளைவிக்கக்கூடிய கொடிய தொற்றுநோய். தாய் தன் மகனை முத்தமிடவே கூடாது என்ற கட்டாயக் கட்டளை! டிப்தீரியாவிற்கு சிகிச்சை கண்டுபிடிக்கும் முன்பாக நடந்த சம்பவம் இது. தன் மகனை முத்தமிடக் கூடாது என்று தாய் தன்னை மிகவும் கட்டுப்படுத்திப் பார்த்தாள். ஆனால் பிள்ளை வேதனையில் துடித்து மாள்வதைக் கண்ட தாயால் சகிக்க முடியவில்லை. தன் மகனைக் கையிலெடுத்து அணைத்து முத்தமிட்டாள். டிப்தீரியா வந்து மரித்துப்போனாள்.



தாயின் அன்பைக் காட்டிலும் மேலான அன்பு கடவுளுடைய அன்பு. நாம் பாவத்தில் மரிப்பதை அவரால் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. நாம் அவரோடு உறவு கொள்ளும்படியாக தன் மகனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகிற்கு அனுப்பியதே அவர் நமக்குக் கொடுத்த அன்பின் முத்தம். இயேசு நமக்காக சிலுவையில் உயிர்கொடுத்து மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். அவர்மேல் நம்பிக்கை வைப்போமானால் நிச்சயம் மோட்சம் செல்வோம்.

## 74

# எல்லாரிலும் அழகிய தாய்!

கிராமத்துப் பெண்ணொருத்தி தன் குழந்தையை மரத்தடியில் தூங்கப் போட்டுவிட்டு வயலில் வேலைசெய்யச் சென்றாள். சிறிது நேரத்தில் குழந்தை விழித்துக்கொண்டு தாயைத் தேட ஆரம்பித்தது. அது இடந்தெரியாமல் அலைந்து ரோட்டுக்கு வந்தது. அழுதுகொண்டே ஒரு பிள்ளை சுற்றித் திரிவதைக் கண்ட சிலர் அதைக் காவலரிடம் ஒப்படைத்தனர். காவலர் பிள்ளையிடம் அதின் அம்மா எப்படி இருப்பார்கள் என்று கேட்டனர். "எங்க அம்மா உலகிலேயே அழகான அம்மா" என்று பிள்ளை அழுதது.



காவலர் அண்மையிலுள்ள இடங்களுக்குப் பிள்ளையைத் தூக்கிச் சென்று பல பெண்களைக் காட்டினர். அவன், "இல்லை, என் அம்மா உலகிலேயே அழகானவள்," என்று அழுதான். கிராமத்துப் பெண் தன் பிள்ளையைக் காணாமல் தேடிக்கொண்டு காவலரிடம் வந்து சேர்ந்தாள். "அம்மா," என்று பிள்ளை தாயை அணைத்துக்கொண்டது. ஆச்சரியமென்னவென்றால் அந்தத் தாய் மிகவும் சாதாரணமான கருத்த கிராமத்துப் பெண்மணி!

உலகிலேயே மிகவும் அழகானவர்கள் தாய்மார்தான். உங்கள் தாய்க்கு ஒவ்வொரு நாளும் உங்கள் அன்பை ஏதாவதொருவிதத்தில் காட்டுங்கள்.



## 75

# மிடாஸ் அரசன்



மிடாஸ் அரசன் பேராசை கொண்டவன். அவன் மிகச் செல்வந்தனாயிருந்தாலும் கடவுளிடம் மேலும் மேலும் செல்வத்திற்காக ஜெபித்துவந்தான். ஒருநாள் ஒரு தேவதூதன் கனவில் தோன்றி அவனுக்கு என்ன வேண்டும் என்று கேட்டான். சற்றும் யோசிக்காமல் மிடாஸ், "நான் தொடுவதெல்லாம் பொன்னாகவேண்டும்" என்று வேண்டினான். தேவதூதனும் அவனுக்கு அவன் கேட்ட வரத்தைக் கொடுத்து மறைந்தான். மிடாஸுக்கு ஒரே குஷி. மேசையிலிருந்த பொருட்களையெல்லாம் தொட்டான். ஓடி ஓடி பலவற்றைத் தொட்டான். எல்லாம் பொன்னாயின. அவனுக்கு ஒரே சந்தோஷம். பலவற்றைப் பொன்னாய் மாற்றியபின் களைப்படைந்து உணவருந்த உட்கார்ந்தான். பசியோடு சாதத்தைக் கையிலெடுத்தபோது அது பளபளக்கும் பொன்னாயிற்று. அவனது வேலைக்காரன் அவனுக்கு ஊட்டிவிட வேண்டியதாயிற்று.

சாயங்காலத்தில் மகள், "அப்பா," என ஓடி வந்தாள். மிடாஸ் அவளைக் கட்டிப்பிடித்தபோது என்ன நடந்ததென்று நீங்களே யூகிக்கலாம். மிடாஸ் அழுதான். பாடத்தைப் படித்துக்கொண்டான். மனம்வருந்தி கடவுளிடம் மன்னிப்புக்கோரினான். வரத்தை எடுத்துக் கொண்டு தன் மகளைத் திருப்பித் தரும்படி கெஞ்சினான். கடவுள் இரங்கி அவனது ஜெபத்தைக் கேட்டு எல்லாவற்றையும் முன்போல் மாற்றினார்.

கடவுள் நமக்குக் கொடுத்தவற்றில் நாம் சந்தோஷமாகவும் திருப்தியாகவும் இருக்கவேண்டும். இன்னும், இன்னும் என்று பேராசைப்படக்கூடாது.

# 76

# அச்சரிபச்சா கொழுக்கட்டை!

ஒரு மனிதன் தன் மாமியார் வீட்டிற்குச் சென்றான். அவள் அவனுக்கு கொழுக்கட்டை செய்து கொடுத்தாள். அவனுக்கு அது ரொம்பப் பிடித்திருந்தது. அவன் அதின் பெயரைக் கேட்டபோது கொழுக்கட்டை என்றாள். அவன் தன் மனைவியை அதைச் செய்து கொடுக்கச் சொல்ல நினைத்தான். ஆகவே மறந்துவிடாமலிருக்க வீட்டிற்குத் திரும்பிப்போகிற வழியெல்லாம் அந்தப் பெயரை சொல்லிக்கொண்டே சென்றான்.

"கொழுக்கட்டை,கொழுக்கட்டை, கொழுக்கட்டை..." என்று சொல்லிக்கொண்டே வீட்டிற்கு நடந்தான். வழியில் வந்த ஒரு ஓடையைத் தாண்டவேண்டியிருந்தது. தன் முழு பெலத்தையும் திரட்டி ஓடி வந்து, "அச்சரிபச்சா," என்று தாண்டினான். மறுபக்கத்தில் அவன் சேர்ந்தபோது பலகாரத்தின் பெயர் மறந்துபோனது. வீட்டிற்கு, "அச்சரிபச்சா, அச்சரிபச்சா, அச்சரிபச்சா..." என்று சொல்லிக் கொண்டே போய்ச் சேர்ந்தான்.



வீட்டிற்குப் போய் சேர்ந்தவுடன் மனைவியிடம், "அச்சரிபச்சா செய்து கொடு," என்று கேட்டான். மனைவி திருதிருவென்று விழித்தாள். ஆகவே அவனுக்குக் கோபம் வந்து அவளை நன்றாக அடித்து விட்டதில் அவளுக்கு உடம்பு முகமெல்லாம் திட்டுத் திட்டாக வீங்கிப்போனது. அடுத்தநாள் பக்கத்து வீட்டுக்காரர்கள் பார்த்துவிட்டு, "அடப்பாவமே! இதென்ன, உடம்பெல்லாம் கொழுக்கட்டை மாதிரி வீங்கிப்போயிருக்கிறது" என்றார்கள். "ஆகா, இப்போது ஞாபகம் வருகிறது. கொழுக்கட்டை!" என்றான். மனைவியும் சந்தோஷமாக கொழுக்கட்டை செய்து கொடுத்தாள்.

உங்கள் தவறுக்காக ஒருபோதும் இன்னொருவரைத் தண்டிக்கக்கூடாது.



# 77

# புதிய சட்டங்கள்

ஸ்ரீலங்காவில் வாழ்ந்த டேனியல் அங்கு பிரதான சாலைகளிலேயே சைக்கிள் ஓட்டிப் பழகியவர். ஸ்ரீலங்காவில் உள்நாட்டுப் போரின் காரணமாக அவர் ஜெர்மனி சென்று அங்கு வாழலானார். ஒரு சைக்கிள் வாங்கி சாலைகளில் ஓட்டத் துவங்கினார். ஒருநாள் ஒரு வெள்ளை வேன் அவரைக் கடந்து சென்று அதிலிருந்து ஒருவர் கையாட்டினார். டேனியலும் யாரோ நமது நண்பர்போல என்று நினைத்து பதிலுக்குக் கையசைத்தார். ஆனால் அந்த வேன் நின்று அதிலிருந்து போலீஸ் இறங்கிவந்து அவரைப் பிடித்தனர்.

ஜெர்மனியில் போலீஸ் வேன்களின் நிறம் வெள்ளை என்று அவருக்குத் தெரியாது. அங்கு சாலைகளில் பல பிரிவுகள் உண்டு—பெரிய வாகனங்களுக்கு, சிறிய வாகனங்களுக்கு, இரண்டு சக்கர வண்டிகளுக்கு, சைக்கிள்களுக்கு, நடப்பவருக்கு என்று. இது தெரியாமல் அவர் சைக்கிளில் எல்லாப் பிரிவுகளிலும் சென்று கொண்டிருந்தார். அவர் ஸ்ரீலங்காவிலிருந்து வந்தவர் என்று அறிந்தவுடன் போலீசார் அவரைத் தான் வந்திருக்கும் புதிய தேசத்தின் சட்டதிட்டங்களை நன்கு படிக்கும்படி எச்சரித்து அனுப்பி வைத்தனர்.



இது ஒரு உண்மைச் சம்பவம். இதிலிருந்து ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம். நாம் இவ்வுலக அரசில் வாழ்கிறோம். இயேசு கிறிஸ்துவை நமது ஆண்டவராகவும் சொந்த இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளும்போது இறையரசின் பிள்ளைகளாகிறோம். இப்போது நாம் உலக அரசில் நடந்து கொண்டதுபோல இறையரசில் நடந்து கொள்ள முடியாது. இறையரசின் சட்ட திட்டங்களைக் கற்கவேண்டும். ஆகவே புதிய அரசின் சட்டங்களையும் கட்டளைகளையும் அறிந்து கொள்ளும்படியாக வேதப்புத்தகத்தை கரைத்துக் குடித்துப் புரிந்துகொள்ளுங்கள்.

# 78

## பால்காரி

எப்போதும் கனவுலகிலேயே சஞ்சரித்துக் கொண்டிருக்கும் பழக்கமுடைய ஒரு பால்காரப் பெண் இருந்தாள். ஒரு பாத்திரம் நிறைய பாலை சுமந்து கொண்டு போய் அக்கம்பக்கத்தில் விற்று வருவதே அவளது வேலை. அந்தப் பாலிலிருந்து வரும் வரு மானத்தை நம்பியே அக் குடும்பம் வாழ்ந்து வந்தது. ஆகவே அப்பா எப்போதும், "ஜாக்கிரதை, பத்திரம்," என்று சொல்லி அனுப்புவார்.



ஒரு நாள் மேரி என்ற அந்தப் பால்காரப் பெண் பால்பாத்திரத்தை தன் தலையில் சுமந்துகொண்டு சென்றாள். போகும் வழியில் அவளது கற்பனை சிறகடித்துப் பறந்தது. "இந்தப் பாலை விற்று நிறைய முட்டைகள் வாங்குவேன். அவை பொறிக்கும்போது எனக்கு நிறைய கோழிகள் கிடைக்கும். அந்தக் கோழிகளை விற்று ஒரு கன்றுக்குட்டி வாங்குவேன். அந்தக் கன்றுக்குட்டி வளர்ந்து பசுமாடாகும். அதை விற்று ஒரு ஸ்கூட்டர் வாங்குவேன். ஸ்கூட்டரில் வேகமாகச் செல்ல முடியுமாதலால் நிறைய வியாபாரம் செய்து நிறைய சம்பாதிப்பேன். ஒரு நவீன கார் வாங்குவேன். விலையேறப்பெற்ற சொகுசு காரில் செல்லும் என்னைப் பார்த்து ஒரு இளவரசன் திருமணம் செய்துகொள்ளக் கேட்பான். அவனைத் திருமணம் செய்துகொண்டு அவனோடு நடனமாடுவேன். இளவரசனோடு நடனமாடுவதைக் கண்டு என் சிநேகிதிகள் பொறாமைப்படுவர். சீ போங்கடி என்று நான் அவர்களை உதைப்பேன்..." இப்படியாக கற்பனை செய்துகொண்டு அவள் நடனமாடி ஒரு கல்லை உதைத்தாள். தலையிலிருந்த பால்பானை விழுந்து உடைந்து எல்லாப் பாலும் சிந்திப்போயிற்று. அவளுடைய தகப்பன் அவளைத் திட்டினார்; அன்று குடும்பமே பட்டினியாயிருந்தது.



கனவு காண்பது உங்களை அதிக தூரம் கொண்டுச் செல்லாது. கையிலிருக்கும் வேலையில் கவனத்தைச் செலுத்துங்கள். சிறிய காரியங்களில் உண்மையும் உத்தமமுமாய் இருப்பீர்களானால் கடவுள் உங்கள் கையில் பெரிய பொறுப்புகளைக் கொடுப்பார்.

# 79

## நூறு ரூபாயின் மதிப்பு

ரமேஷ் பொறுப்பற்ற பையன். பொருட்களின் மதிப்பை அவனுக்குக் கற்றுக்கொடுக்க அவனது தந்தை படாத பாடுபட்டார். அவரால் வாங்கமுடியாத பொருட்களையெல்லாம் வாங்கித் தரும்படி அடம் பிடிப்பான்.

ஒருநாள் தகப்பன் அவனைக் கூப்பிட்டு கையில் ஒரு நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்து அதைக் கிணற்றில் எறிந்துவிட்டு வரும் படியாகக் கூறினார். ரமேஷ் உடனே போய் கிணற்றில் எறிந்துவிட்டு வந்தான். அடுத்தநாள் அப்பா ரமேஷை அழைத்து, போய் வேலை செய்து நூறு ரூபாய் சம்பாதித்துக் கொண்டு வரும்படியாகக் கட்டளையிட்டார்.

ரமேஷ் ஊருக்குள் போய் வேலை தேடினான். யாரும் கொடுப் பதாயில்லை. கடைசியாக கடற்கரையில் கப்பலிலிருந்து மூட்டைகளை இறக்கும் கூலியாட்களுடன் இணைந்து கொண்டான். சாயங் காலம்வரை கனமான மூட்டைகளைச் சுமந்து களைத்துப் போனான். நூறு ரூபாய் கூலி கிடைத்தது.

ரமேஷிற்கு முதுகு வலித்தாலும் புதிய அந்த நூறு ரூபாயின் குதூகலம் அவனது இதயத்தைக் கானம்பாட வைத்தது. அவன் அதைக் கொண்டுவந்து தன் தகப்பனின் கையில் பெருமிதத்துடன் கொடுத்தான். தகப்பனோ எவ்விதப் பாராட்டுச் சொல்லுமின்றி அந்த நூறு ரூபாய் நோட்டைக் கிணற்றில் எறியும்படி சர்வ சாதாரணமாகச் சொன்னார். "பா, இது கடின உழைப்பினால் சாம்பாதித்த பணம். ஒரு



வேலை கிடைப்பது எத்தனை கடினம் என்று அறிவீர்களா? இதைச் சம்பாதிக்க நான் முதுகு வலிக்க எவ்வளவு பாடு பட்டேனென்று தெரியுமா?" என்று படபடத்தான் ரமேஷ். அந்த வார்த்தைகளைச் சொல்லும்போதே தான் எத்தனை மூடனாய் இருந்திருக்கிறான் என்பதை உணர்ந்துகொண்டான். பொறுப்புள்ள பையனாய் மாறினான்.

பணம் மதிப்புள்ளது, அதை நாம் வீணடிக்கக்கூடாது. வாங்காமல் சமாளிக்கக்கூடிய பொருட்களை வாங்காமலேயே சமாளிக்க வேண்டும். அதை வாங்குவதில் பணத்தை வாரி இறைக்கக் கூடாது. நமது தேசத்தில் பட்டினியாகப் படுக்கச் செல்லும் பல ஏழைகள் உண்டு. ஏழைகளை நினைத்துக் கொள்ளுங்கள்!

## *80*

## *தாயின் கரங்கள்!*

ஒரு மனிதன் வேலைக்காக நேர்காணலுக்குச் சென்றான். அந்த கம்பெனியின் மேலாளர் அவனைப் பல கேள்விகள் கேட்டார். ராகுல் என்ற இவனைப் படிக்கவைக்க அவனது தாய் பல வீடுகளில் வேலைசெய்து உழைத்தாள் என்று மேலாளர் புரிந்துகொண்டார். மேலாளர் ராகுலைக் கேட்டார், "உன் தாயின் கரங்களைப் பார்த்திருக்கிறாயா?" ராகுல் ஒரு கணம் விழித்தான், பின்பு, "இல்லை" என்றான். மேலாளர், "நீ வீட்டிற்குப்போய் உன் அம்மா கைகளைக்



கழுவிவிட்டு நாளை திரும்ப வா," என்றார்.

ராகுல் வீட்டிற்குச் சென்று தன் தாயை வீட்டின் பின்புறம் அழைத்துச் சென்றான். "மா, உங்கள் கைகளைக் காட்டுங்கள். நான் அவற்றைக் கழுவவேண்டும்," என்றான். தாய் ஆச்சரியமடைந்தாள். ராகுல் தாய்க்கு ஒரு நாற்காலியைப் போட்டு அவர்களை உட்காரவைத்து அவர்கள் கரங்களைப் பார்வையிட்டான். முரட்டுக் கோடுகள் குறுக்கமுறுக்கச் சென்றன. பாத்திரங்கள் தேய்ப்பதினால் உரசல்களும் கீறல்களும் இருந்தன. அவனது கைகள் பஞ்சு போலவும் அவளது கைகளோ கட்டை போலவும் இருந்தன. அவளது கரங்களை அவன் கழுவத் துவங்கியபோது உராய்வு அவளுக்கு வலியை உண்டாக்கியதால் மென்மையாகச் செய்யவேண்டியிருந்தது. ராகுலின் இதயம் நெகிழ்ந்தது. தனக்காகத் தன் தாய் எத்தனைக் கஷ்டங்களை அனுபவித்திருக்கிறாள் என்று அவன் புரிந்து கொண்டதே கிடையாது. அவனது கண்கள் குளமாகி, தாயின் கரங்களை முத்தமிட்டான்.



அடுத்தநாள் மேலாளரைச் சந்தித்து தான் கண்டதையும் அனுபவித்ததையும் நா தழதழக்கக் கூறினான். உடனடியாக வேலையில் அமர்த்தப்பட்டான்.

தியாகத்தின் உருவே தாய், அவளிடம் நன்றியுள்ளவர்களாக இருங்கள்.

## 81

# மேலே நோக்குங்கள்!

தெருவில் நடந்து சென்றான் முருகன். சூரிய ஒளிபட்டு ஏதோ



மின்னுவதைக் கண்டான். அது ஒரு ஒரு ரூபாய் நாணயம். முருகனுக்கு ஒரே சந்தோஷம். அந்த நாளிலிருந்து அவன் நடந்து செல்லும்போதெல்லாம் தரையைவிட்டுக் கண்களை எடுப்ப தில்லை. அவனுக்கு என்னென்ன கிடைத்ததென்று உங்களால் யூகிக்க முடியுமா? ஒரு பேப்பர் க்ளிப், ஒரு ஊக்கு, ஒரு ரப்பர், ஒரு பிளேடு, ஒரு கோலி, ஒரு மேல்நாட்டுத் தபால்தலை, ஒரு பேனா! ஐந்து ஆண்டுகளாக இது போன்ற பல பொருட்கள் கிடைத்தன; அதோடுகூட வேறொன்றும் கிடைத்தது— முதுகு கூன்! அதிகம் செலவழித்து அதற்கு சிகிச்சை பெற்றான்.

அவன் என்னத்தையெல்லாம் இழந்தான் தெரியுமா? அழகிய வானம், சிவந்த சூரியன், குளிர்ந்த நிலவு, வண்ண வண்ணப் பூக்கள், ரீங்காரமிடும் வண்டுகள் மற்றும் நண்பர்களின் சிரித்த முகங்கள்!

சைக்கிள்கள், கார்கள், வீடுகள், சாமான்கள், நகைகள் இவை நம்மை இளக்கரிக்கப்பண்ணும். வாழ்க்கைக்காகப் பொருட்களை சேகரிக்கப்போய் வாழ மறந்துவிடக் கூடாது. உயிரற்ற பொருட்களை விட குடும்பமும் நண்பரும் முக்கியம்.



## 82

# அருமையான ஈவு!

ரீனா தன் கணவனின் கைக்கடிகாரத்தின் பட்டையைப் பார்த்தாள். அது பழமையாகிப் பரிதாபமாயிருந்தது.



அவர்களது திருமண நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. அவளுக்கோ ஒரு புதிய பட்டை வாங்கி கணவனுக்குப் பரிசளிக்க பணமில்லை. ரீனா இதைக் குறித்து சிந்தித்துக்கொண்டே இருந் தாள். கடைசியில் தன் அழகிய நீண்ட சுருண்ட கூந்தலை விற்று, தான் கடையொன்றில் பார்த்த அழகிய பட்டையை வாங்கிப் பரிசளிக்கத் தீர்மானித்தாள். அழகு நிலையத்திற்குச் சென்று, பல்லாண்டுகளாகத் தான் போற்றி வளர்த்த கூந்தலை வெட்டக்கொடுத்துப் பணத்தைப் பெற்றுக்கொண்டாள். அடுத்து கடைக்கு ஓடி பட்டையை வாங்கி பளபளத்தாளில் பொதிந்து பொட்டலம் செய்தாள். சாயங்காலம் நாலாகிவிட்டது. ஐந்து மணிக்குத் தேனீர் வேளையில் தங்கள் திருமண நாளை கொண்டாடத் திட்டமிட்டிருந்தனர்.

வீட்டிற்குள் ஓடித் தன் அன்பளிப்பைத் தன் கணவன் ரிச்சியின் கைகளில் பதித்தாள். ரிச்சி அவளைக் கண்டு அதிர்ச்சி யடைந்தவனாய், "உன் அழகிய கூந்தல் எங்கே?" என்று தடுமா றினான். "பரவாயில்லை, நான் உங்களுக்காக என்ன வாங்கி வந்திருக்கிறேன், பாருங்கள்," என்று கொஞ்சினாள் ரீனா. அப்பொழுதுதான் ரிச்சியின் கையில் கடிகாரம் இல்லாததைக் கவனித்தாள். ரிச்சி தனது அன்பளிப்பை அமைதியாக நீட்டினான். அப்பொட்டலத்திற்குள் ஒரு அழகிய ஹேர்க்ளிப் ஜொலித்தது! ரிச்சி தன்னுடையதைத் திறந்து கடிகாரப் பட்டையை வெளியிலெடுத்தான்!

தியாகம் நல்லதுதான், ஆனால் அது அர்த்தமுள்ளதாய் இருக்கவேண்டும்.

# 83

# ஷீ

ஷீ என்று பேர்கொண்ட ஓர் அழகிய நங்கைக்குச் சாக விருப்ப மில்லை. புத்தகங்களைப் படித்தும் மருத்துவர்களையும் பெரியவர் களையும் கேட்டும் தான் எப்போதும் அழகாகவும் வாலிபமாக இருக்கவும் யுக்தி ஏதாவது உண்டா என ஆராய்ச்சி செய்வாள். இப்படியாக ஆப்பிரிக்கக் காடுகளுக்குள்ளே ஓர் அக்கினி அருவி இருப்பதைக் கேள்விப்பட்டாள். அதில் நீராடிய எவரும் மரிப்பதில்லை; ஆனால் அதில் நீராட யாருக்கும் தைரியம் வரவில்லை. ஷீக்கு அக்கறையில்லை. இளமையாகவும் அழகாகவும் என்றென்றும் வாழமுடியாத சூழ்நிலையில் சாவதே மேல் என்று நினைத்தாள்.

இரண்டு நெருங்கிய நண்பர்களுடனும், பெட்டிகளைத் தூக்க ஆப்பிரிக்கர்களுடனும் ஆபத்தான அந்தப் பயணத்தை மேற்கொண் டாள். ஆறுகளையும் மலைகளையும் பலவிதமான காட்டுமிருகங் களையும் தாண்டி, மலைமேலிருந்து இளகிய அக்கினிக்குழம்பாய் ஒரு இடுக்கில் கொட்டிய அக்கினி அருவிக்கு வந்து சேர்ந்தனர். யாவரும் மூச்சைப் பிடித்துக்கொண்டு நிற்க ஷீ நடந்துசென்று அருவிக்குள் மறைந்தாள். தகிக்கும் அந்த உஷ்ணத்தில் யாவரும் அசந்து நிற்கும் போது ஷீ அருவியிலிருந்து ஜொலிக்கும் முகத்துடன் எப்போதும் போல் அழகியாக வெளிவந்தாள். யாவரையும் போகும்படி ஊக்குவித்து அது குளுமையாகத்தான் இருக்கிறது என்றாள். ஆனால் யாருக்கும் தைரியம் வரவில்லை.

குழு திரும்பியது. விளைவுகள் தெரிய காத்திருக்க வேண்டுமே. வருடங்கள் நகர்ந்தன. ஷீயின் நண்பர்கள் வயதாகி மரித்துப்போயினர். ஆனால் ஷீ மட்டும் இளமையாகவும் அழகாகவும் இருந்தாள். இப்போது ஒரு துடிப்புள்ள நங்கையுடன் சிநேகமானாள். இருவரும் நெருங்கிய நண்பராயினர். தான் நூறு வருடங்களுக்கு முன்பாக தீக்குளித்த காட்சி ஷீயின் மனத்திரையில் ஓடியது. தன் சிநேகிதி ரோனாவை தீக்குளியலுக்கு அழைத்துச் சென்றால் என்ன? இருவரும் என்றென்றும் சிநேகிதிகளாக இருக்கலாமே!





ரோனாவிடம் அக்கினி அருவியைக் குறித்த பேச்சை மெல்லவே துவங்கினாள். ஒரு வருடத்திற்குப் பிறகு ரோனா சம்மதித்தாள். ஒரு குழு ஒழுங்கு செய்யப்பட்டு பயணம் துவங்கியது. பல தடங்கல்களையும் தாண்டி ஜொலிக்கும் அக்கினி அருவியை அடைந்தனர். இனிய நினைவுகள் ஷீயின் இதயத்தில் வெள்ளமாய் ஓட ஏறிட்டு அந்த மின்னும் அருவியை கண்ணோக்கினாள். ரோனா அருவியைக் கண்டு நடுங்கினாள். அருவியிலிருந்து வீசின உஷ்ண அலைகள் யாவரையும் வியர்க்கச் செய்தன. ரோனாவை போ போ வென்று ஷீ தள்ளி விட்டாலும் ரோனாவிற்குத் தைரியம் வரவில்லை.

சிறிது நேரத்திற்குப் பிறகு ஷீ, "வா,வா, நான் எப்படி என்று காட்டித் தருகிறேன் வா. நான் முதலாவது செல்கிறேன். உள்ளே குளுமை யாகத்தான் இருக்கும். நீ என் பின்னே வரலாம்," என்று சொல்லிக் கொண்டே ஆற்றில் இறங்கி அருவிக்கு நேரே நடந்தாள். அருவியி லிருந்து கையசைத்து ரோனாவைக் கூப்பிட்டாள்.

எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கும்போது ஒரு பயங்கரம் நடந்தது. ஷீ சுருங்க ஆரம்பித்தாள். ஷீ சுருங்கி, சுருங்கி 120 வயது கிழவியாகி மரித்துப் பொசுங்கி சாம்பலானாள். அந்த அக்கினியில் ஒருவர் ஒருதரம் மட்டுமே குளிக்கலாம் என்பதை அவள் அறியவில்லை. தன் சிநேகிதி தன் கண்ணெதிரே கருகிச் சாம்பலாவதைக் கண்டு ரோனா அலறினாள். குழு வீடு திரும்பியது என்று சொல்லவும் வேண்டுமோ?

நாம் ஒரே முறை சாவோம், பின்பு நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நிற்போம் என்று வேதம் கூறுகிறது. நாம் மரணத்திற்குத் தப்பமுடியாது . நீங்கள் மரணத்திற்கோ நியாயத்தீர்ப்புக்கோ அஞ்சாத படிக்கு பரிசுத்த வாழ்க்கை வாழுங்கள்!

# 84

## காகமும் முத்துச் சரமும்

திருவாளர் காக்காவும் திருமதி காக்காவும் காட்டில் ஓர் உயர்ந்த மரத்தின்மேல் அழகிய கூடு கட்டினார்கள். அதில் கவர்ச்சிகரமான நீல நிறத்தில் மூன்று முட்டைகளை இட்டு காக்கா அதின்மேல் உட்கார்ந்து அடைகாத்தாள். அழகிய பிள்ளைகளுக்காக ஜெபித்து வந்தார்கள். துக்ககரமாக மரத்தினருகே இருந்த ஒரு புற்றில் வாழ்ந்த பொல்லாத பாம்பு மேலேறி வந்து முட்டைகளைச் சாப்பிட்டுவிட்டது. காகங்கள் துக்கமடைந்தன. அவை ஆண்டவரை நோக்கி, "தெய்வமே, நாங்கள் பெலவீனர். இந்தப் பொல்லாத பாம்பு எங்களைவிட பலசாலி. நீரோ எல்லாரிலும் வல்லவர். இந்தப் பாம்பைக் கொல்ல எங்களுக்கு ஞானம் தாரும்," என்று ஜெபித்தன. தேவன் அவைகளின் ஜெபத்தைக் கேட்டு அவைகளுக்கு ஞானம் கொடுத்தார்.

ராணி அவ்வப்போது காட்டிலிருந்த குளத்திற்கு வந்து தன் சிநேகிதிகளோடு விளையாடிவிட்டு நீராடிச் செல்வது வழக்கம். அன்று ராணி வந்து குளத்தில் இறங்குமுன் தன் முத்துச்சரத்தைக் கழற்றி கரையில் வைத்தாள். தன் சிநேகிதிகளோடு குளத்தில் இறங்கினாள். மின்னல் போல திரு. காக்கா முத்துச் சரத்தைக் கொத்திக்கொண்டுபோய் பாம்பிருந்த புற்றில் போட்டது. ராணியின் சிநேகிதிகள் கூச்சலிட்டு சேவகரைக் கூப்பிட்டுச் சொல்லவும் அவர்கள் காகத்தின் பின்னே சென்று புற்றை தகர்த்தனர். சீறிக்கொண்டு வெளியே வந்த பாம்பை சேவகர் அடித்துக் கொன்றனர். முத்துச் சரத்தை எடுத்துச் சென்றனர். திரு. காக்காவும் திருமதி காக்கையும் முட்டையிட்டு குஞ்சு பொறித்து சந்தோஷமாக வாழ்ந்தனர்.



நமது தேவன் கேட்கும் யாருக்கும் ஞானத்தை அருளுகிறார். நீங்கள் பெலவீனராயிருந்தாலும் உங்களுக்குப் பாதகம் விளைவிக்க நினைக்கும் பலசாலிகளை நீங்கள் மேற்கொள்ளலாம். ஆகவே தினந்தோறும் ஞானத்திற்காய் ஜெபிக்க மறவாதீர்கள்.



# 85

## குருடன் யார்?

ஒருமுறை ஓர் அரசன் தனது தலைநகரில் எத்தனை குருடர் வாழ்கின்றனர் என்று கணக்கெடுக்க நினைத்தான். தன் மந்திரியைக் கூப்பிட்டு ஒரு வாரத்தில் பட்டியலைத் தயார் செய்து தன்னிடம் கொண்டு வரும்படிக் கூறினான். இது முடியாத காரியம் என்று அறிந்தும் மந்திரி அமரிக்கையாக இருந்தார். அவர் ஒன்றுமே முயற்சி எடுக்கவில்லை என்று அறிந்த அரசனும் மற்றவர்களும் ஆச்சரியப்பட்டனர்.




தன் அறிக்கையை மந்திரி கொடுக்கவேண்டிய நாள் வந்தது. மந்திரி ஒரு ஜோடி செருப்பைத் தைத்துக்கொண்டு சந்தையில் உட்கார்ந்தார். பக்கத்தில் பேப்பரும் பேனாவும் வைத்துக்கொண்டார். அவரைப் பார்த்த நண்பர்கள், "இங்கு என்ன செய்கிறீர்கள் ?" என்று கேட்டனர். உடனே மந்திரி பேப்பரை எடுத்து அவர்கள் பெயரை எழுதிக் கொண்டார். அவருக்கு அநேக நண்பர்கள் இருந்தபடியால் பட்டியல் நீண்டுகொண்டே போயிற்று. சாயங்காலம் அரசர் குதிரை மேலேறி வந்தார். தன்னுடைய மந்திரி சந்தையில் உட்கார்ந்து செருப்புத் தைத்துக்கொண்டிருப்பதைக் கண்டுத் திடுக்கிட்டார். "இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர் ?" என்று கேட்டார். மந்திரி வேகமாக அரசனின் பெயரை எழுதிக்கொண்டார்.

சாயங்காலம் அரசனிடம் பட்டியல் கொடுக்கப்பட்டது. தன்னுடைய பெயரை அந்தகரின் பட்டியலில் கண்ட அரசன் தன் மடமையை உணர்ந்தான். அவன் விழுந்து விழுந்து சிரித்து மந்திரிக்குத் தகுந்த வெகுமானங்களை அளித்தான்.


நாமும் கண்ணிருந்தும் கபோதிகள் போலத்தான் வாசிக்கிறோம். வேதத்தை பார்க்கிறோம், வாசிக்கிறோம், ஆனால் புரிந்து

கொள்வதில்லை. நாம் புரிந்துகொள்ளாவிட்டால் தேவன் தமது வார்த்தையின் மூலமாக நம்மிடம் பேசமுடியாது. ஆகவே வாசிப்பதைப் புரிந்துகொள்ள முழுமுயற்சி எடுங்கள்.

## 86

## திருட்டுக் காக்கா

ஒரு பாட்டி மரத்தடியில் உட்கார்ந்து வடை சுட்டு, சுட்டு அருகிலிருந்த பாத்திரத்தில் போட்டுக் கொண்டிருந்தாள். மரத்தின் மேலிருந்த திருட்டுக் காக்கா ஒன்று கீழே பறந்து வந்து ஒரு வடையைத் தூக்கிக் கொண்டு வந்தது. அது பறந்துபோய் வனத்தில் ஒரு மரத்தில் உட்கார்ந்து சாப்பிடப் போனது. வடை வாசனை கண்ட நரி ஒன்று அங்கு வந்தது. தந்திரக்கார நரி வடையைப் பறிக்க ஒரு யுக்தி செய்தது. "தங்கச்சி காக்கா, உன் முகம் அழகு சொட்டுகிறது. உன் குரலும் இனிமையாகத்தான் இருக்கும். ஒரு பாட்டுப் பாடேன்" என்றது. பெருமித மடைந்த காக்கா பாட தன் வாயைத் திறந்தது. வடை கீழே விழுந்தது. நரி அதைத் தூக்கிக் கொண்டு ஓடி விட்டது.




திருடுவது பாவம் என்று உங்க ளுக்குத் தெரியுமா ? திருடுவது கடவுளுக்குப் பிடிக்காத காரியம். மற்றொருவருக்குச் சொந்தமான எதையும் நாம் எடுத்துக்கொள்ளவே கூடாது.



## 87

## பொன் முட்டையிடும் வாத்து

ஒவ்வொரு நாளும் ஒரு பொன்முட்டையிடும் வாத்து ஒரு குடியானவனிடம் இருந்தது. தினமும் அந்த முட்டையை விற்று பைநிறையப் பணத்தோடு வீடு வருவான். ஒரு நாள், “இந்த வாத்து நாளுக்கொரு முட்டை இட்டால், இதன் வயிற்றுக்குள் எத்தனை முட்டைகள் இருக்கும்! நான் ஒரே நாளில் மிகப்பெரிய பணக்காரனாகிவிடுவேனே," என்று எண் ணினான் குடியானவன். ஆகவே வாத்தின் வயிற்றை அறுத்தான். உள்ளே என்னத் தைக் கண்டான் ? ஒரே ஒரு முட்டை! வாத்தும் செத்தது, குடியானவனுக்குத் தங்க முட்டையும் நின்றுபோயிற்று.



மனிதரால் நமக்குக் கிடைக்கும் ஆதா யத்தைவிட அம்மனிதர் அதிக முக்கியம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

## 88

## ஒருவருக்கொருவர் பராமரிப்பு!

ஒருநாள் தேவதூதர்களும் பிசாசுகளும் சந்தித்தனர். இருவரில் யார் நல்லவர்கள் என்று விவாதிக்கத் துவங்கி எந்தவொரு முடிவுக்கும் வராதிருந்தனர். காபிரியேல் தூதன் இதைக் கேள்விப்பட்டபோது ஒரு போட்டியை அறிவித்தான். தான் ஒரு நீண்ட இரும்புக் கரண்டியை

அவர்களது தோளிலிருந்து மணிக்கட்டுவரை கட்டிவிடப் போவதாகவும் ஆளுக்கு ஒரு பாத்திரம் சாதம் கொடுக்கப்போவதாகவும் கூறினான். எந்தக் குழு முதலில் சாப்பிட்டு முடிக்கிறார்களோ அவர்களே நல்லவர்கள். இரு கட்சியினரும் இதை ஒத்துக் கொண்டதால் காபிரியேல் ஒவ்வொருவருக்கும் ஒரு நீண்ட இரும்புக் கரண்டியை கட்டிவிட்டான். இடது கையை முதுகுக்குப் பின் வைத்துக் கொண்டு சாப்பிடவேண்டும் என்றான்.



போட்டி துவங்கியது. ஒவ்வொருவரும் சாப்பிட முயற்சித்தனர். ஆனால் முழங்கையை மடக்கமுடியாததால் சாதம் சிந்தியது. தேவதூதர் தம் முயற்சியை மாற்றிக் கொண்டனர். ஒவ்வொருவரும் தங்கள் சாதத்தை எடுத்து அடுத்தவருக்கு ஊட்டத்துவங்கினர். சீக்கிரமாக சாதம் காலியானது. போட்டியில் வென்றனர்.

பிறருக்கு நாம் கரிசனை காட்டினால் நமக்கு கரிசனை காட்டப்படும்.

# 89

# சிலுவைகள்

ருஷித்தா என்ற குட்டிப்பெண் ஆண்டவர் மேல் அயராத பற்று கொண்டவள். அவள் தன் நம்பிக்கையை சிநேகிதிகளோடு பகிர்ந்துகொண்டு அவர்களும் இயேசுவைத் தங்கள் கடவுளாக்கிக்கொள்ளும்படியாக வேண்டுவாள். அவளுடைய வகுப்புப் பிள்ளைகள் அவளைக் கிண்டல் செய்வர். ஒருநாள் அவளது விசுவாசத்தை அவமதிக்கத் தீர்மானித்தனர். வகுப்பறை வாசல்படி






குறுக்கே சிலுவை சிலுவையாக வரைந்து வைத்தனர். ருஷித்தா சிலுவைகளை மிதித்து நடக்கும் போது அவளை கேலி செய்யலாமென்று ஆவலுடன் காத்திருந்தனர். ருஷித்தா வந்து வேகமாகச் சிலுவைகளின் மேல் நடந்து வகுப்பறைக்குள் வந்தாள். எல்லோரும் கைதட்டி, "நீ சிலுவையை மிதித்துவிட்டாயே," என்றனர். ருஷித்தா புன் முறுவலுடன், "ஆகா, இந்த சிலுவைகளெல்லாம் கள்ளர்கள் அறையப்பட்ட சிலுவைகள், இயேசு அறையப்பட்ட சிலுவை அல்ல," என்றாள். அவளுடைய சிநேகிதிகள் செய்வதறியாது விழித்தனர்.

நாம் சிலுவையை வணங்குகிறவர்களல்ல, தேவனையும் இயேசுவையும் வணங்குகிறவர்கள்.

# 90

# கபடற்ற சிறுவன்



கதவு தட்டும் சப்தம் கேட்டது. தான் பெரிய அளவு பணம் கடன் வாங்கின மனிதன் பணத்தைத் திரும்பக் கேட்க வந்திருக்கிறான் என்று சீனு புரிந்து கொண்டான். அவன் குதிலுக்குள் உட்கார்ந்துகொண்டு தன் மகனை அழைத்து, "அப்பா இங்கே இல்லை என்று போய்ச் சொல்லு," என்றான். கபடற்ற அந்தப் பையன் அவரிடம் போய், "எங்க அப்பா குதிலுக்குள் இல்லை," என்றான்.

மற்றவர்கள் உங்களைத் தீய காரியங்களைச் செய்யவைக்க இடங்கொடாதீர்கள்.

# 91

## தேவை ஆறடி மட்டுமே!

பேராசை பிடித்த ஒரு மனிதன் இருந்தான். அவனுக்கு இன்னும் நிலங்களும் இன்னும் வீடுகளும் இன்னும் தங்கமும் வேண்டுமென்று எண்ணினான். தனக்கு இன்னும் செல்வங்களும் இன்னும் சொத்தும் வேண்டுமென்று ஜெபித்து வந்தான். ஒருநாள் ஒரு தேவதூதன் தோன்றி: "உன் ஜெபம் கேட்கப்பட்டது. நீ ஓடத் துவங்கு. நீ ஓடும் தூரம்வரை உனக்குக் கொடுப்பேன்," என்றான். அம்மனிதன் ஓடினான், ஓடினான், ஓடிக்கொண்டே இருந்தான். அவன் களைப்படைந்தபோது நினைத்தான், "பரவாயில்லை, இன்னும் கொஞ்சம் ஓடினால் இன்னும் கொஞ்சம் கிடைக்குமே." அவனுக்குத் தாகமெடுத்தபோது, "இருக்கட்டும், இப்ப வேண்டாம். இன்னும் கொஞ்சம் ஓடிவிட்டுப் பிறகு பார்க்கலாம்," என்று ஓடினான். திடீரென்று நெஞ்சு வலித்தது. மாரடைப்பினால் அங்கேயே விழுந்து செத்துப்போனான். தேவதூதன் 6 அடி நீளமான குழி தோண்டி அவனை உள்ளே போட்டு மூடிவிட்டுச் சொன்னான், "உனக்கு வேண்டியதெல்லாம் 6 அடிதான்."



நாம் இந்த உலகத்தில் என்றென்றுமாய் வாழப் போவதில்லை. ஆகவே சொத்து குவிக்காமல் எளிமையான வாழ்க்கை வாழுங்கள். உங்கள் பழைய துணிகளை ஏழைகளுக்கும் பாக்கெட் பணத்தில் ஒரு பகுதியைப் பிச்சைக்காரருக்கும் கொடுங்கள்.



# 92

## மிங்க்

மிங்க் என்பது முயல் போன்ற சிறியதொரு பிராணி. அது பொந்துகளில் வாழும். அதன் தோல் சுத்தமான அழகிய வெள்ளை முடியினால் மூடப்பட்டிருக்கும். என்ன வந்தாலும் அது தன் ரோமத்தை அழுக்காக்கிக் கொள்ளாது. எப்பொழுதும் அது தன் ரோமத்தைச் சுத்தமாகவும் வெள்ளையாகவும் காத்துக்கொள்ளும். விலையுயர்ந்த இத்தோலுக்காக வேட்டைக்காரர் இப்பிராணியை வேட்டையாடுவர். மிகவும் பணக்காரர் மட்டுமே வாங்கக்கூடிய மிங்க் கோட்டினுடைய காலர் செய்ய இது பயன்படுத்தப்படுகிறது.

வேட்டைக்காரர் இதைத் துப்பாக்கியால் சுட்டோ அம்பெய்தோ பிடித்தால் அதன் தோல் பழுதடைந்து விடும். ஆகவே இவர்கள் மிங்கினுடைய பொந்துகளுக்கு அருகே பதுங்கியிருப்பர். இப் பிராணிகள் இரை தேட தம் பொந்துகளை விட்டு வெளியேறிச் சென்றவுடன் வேடர் மிகவும் அசுத்தமானவைகளைப் பொந்துகளின் வாயிலைச் சுற்றிப் போட்டு விடுவர். அதன்பின் இவை திரும்பிவரக் காத்திருப்பர்.




மிங்க்குகள் திரும்பி தம் பொந்துக்கு வரும்போது வாயி லைச் சுற்றியுள்ள அசுத்தத்தைக் கண்டு பின்வாங்கும். வேடர் வெளி வட்டத்திலிருந்து நெருங் குவர். வேடரைக் கண்டதும் இவை பொந்துக்கு ஓடிவரும். பின்பு அசுத்தத்தைப் பார்த்து வேடர் பக்கமாய் ஓடும். இவ் விதமாக இவை முன்னும் பின்னு மாக ஓடி இறுதியில் தம் போர்வையை அழுக்காக்க மனமின்றி வேடர் கையில் விழும்.

நமக்கு இவை புகட்டும் பாடம் எத்தனை அருமையானது! நாம் கெட்டவை செய்து நம்மைக் கறைபடுத்திக் கொள்வதைவிட உயிரை விடுவதே மேல்.

# 93

## சத்தியத்தைப் பறைசாற்றுங்கள்!

கொலைக் குற்றத்திற்காக ரெஜி ஓர் இங்கிலாந்து சிறையில் அடைக்கப்பட்டான். அடுத்தநாள் தூக்குமேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். அவனுக்கு முன்பாக போதகர் ஒருவர் வேதத் திலிருந்து மோட்சத்தின் அருமையைப் பற்றியும் நரகத்தின் பயங்கரத்தைப் பற்றியும் வாசித்துக்கொண்டே சென்றார். திடீரென்று ரெஜி போதகரைப் பார்த்து, "நிறுத்துங்கள்," என்று கத்தினான். போதகர் நின்றார். ரெஜி கேட்டான், "ஐயா, நீங்கள் வாசிக்கிறதை நம்புகிறீர்களா ?" "ஆம், நான் நிச்சயமாய் நம்புகிறேன்," என்றார் போதகர். ரெஜி சொன்னான், "நீங்கள் இப்போது வாசித்ததை நான் நம்பினால் நான் இங்கிலாந்து முழுவதும் ஓடி ஓடி வீடு வீடாகக் கதவைத் தட்டி ஒவ்வொருவருக்கும் பரலோகத்தைப்பற்றியும் நரகத்தைப்பற்றியும் கூறுவேன். களைப்பாகி ஓடமுடியாமல் மூச்சுவாங்க ஆரம்பித்தால் நடந்து நடந்து ஒவ்வொரு வரையும் எச்சரிப்பேன். நடக்க முடியாமல் தடுமாறி விழுந்து விடுவேனானால் கைகள் கால் களில் ஊர்ந்து ஊர்ந்து சென்று ஒவ்வொருவரிடமும் நாம் தவிர்க்க ஒரு நரகமுண்டு நாம் தழுவ ஒரு பரலோகம் உண் டென்பேன். இங்கிலாந்தின் தெருக்களெல்லாம் முழுவதும் கண்ணாடித் துகள்களால் மூடப் பட்டிருந்தாலும் என் முழங் கால்களிலும் கைகளிலும் இரத் தம் சொட்டச் சொட்ட ஊர்ந்து சென்று கடைசி நபருக்கும் மோட்சத்தையும் நரகத்தையும் குறித்துச் சொல்லுவேன்."






நரகம் என்பது பிசாசுகளின் பயங்கரமான இடம். ஒருவரும் அங்கு சென்றுவிடக் கூடாது. பரலோகம் தேவனது மிக அழகிய வீடு. ஒவ்வொருவரும் அங்கு செல்ல முயற்சிக்க வேண்டும். நரகத்தைக் குறித்து நம்முடைய நண்பர்களை எச்சரித்து அவர்களும் சொர்க்கத்தை அடையும்படியாக இயேசு கிறிஸ்துவைத் தம் இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்படி அழைக்க வேண்டும். வேதாகமக் கதைகளையும் வேறு நல்ல கதைகளையும் உங்கள் நண்பர்களுக்குக் கூறி இயேசுவை நம்பும்படி அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

# 94

## பாவத்தினாலல்ல!

இஸ்ரவேல் மக்கள் வனாந்திர வழியாய்ப் பயணித்தனர். அவர்கள் பாவம் செய்தபோது கடவுள் அவர்களுக்குள் விஷப் பாம்புகளை அனுப்பினபடியால் அவை கடித்துப் பலர் மாண்டார்கள். மோசே தேவனிடம் கதறியபோது அவர், "ஒரு வெண்கலப் பாம்பைச் செய்து அதைத் தூக்கிவை. பாம்பு கடித்தவன் எவனும் இந்த வெண்கலப் பாம்பை ஏறிட்டுப் பார்த்தால் பிழைப்பான். விஷம் அதன் வலுவை இழந்துவிடும்" என்றார். அப்படியே மோசே ஒரு வெண்கலப் பாம்பைச் செய்து அதை உயர்த்தி நிறுத்தினார்.

பலர் அந்தப் பாம்பை ஏறிட்டுப் பார்த்து உயிர் பிழைத்தனர். ஆனால் பலர் நரகத்திற்குச் சென்றனர். நரகத்தில் ஒருவன் மற்றொருவனைப் பார்த்துக் கேட்டான், "நீ ஏன் நரகத்திற்கு வந்தாய் ? பாவம் செய்தாயா ?" அடுத்தவன் பதில் சொன்னான், "இல்லை, நான் நரகத்தில் வந்து சேர்ந்தது நான் பாவம் செய்ததினாலல்ல; வெண்கலப் பாம்பை ஏறிட்டுப் பார்க்காததினாலேயே இங்கு வந்து சேர்ந்தேன்."



நாம் பாவம் செய்ததற்காக அல்ல, நாம் இயேசுவை நோக்கிப் பார்க்காத காரணத்திற்காகவே நரகம் செல்கிறோம். இயேசு சிலுவையில் அறையப்பட்டுத் தூக்கி நிறுத்திவைக்கப்பட்டார். உன்னுடைய பாவத்திற்காக இயேசு சிலுவையில் மரித்து கல்லறையிலிருந்து உயிரோடே எழும்பி வந்தார் என்று நீ நம்புவாயானால் நீ அவரது பிள்ளையாவாய். அப்படியானால் நீ மோட்சத்திற்குப் போவாய். நீ நரகம் செல்லத் தேவையில்லை.

## *95*

## *வேதத்திற்குள்ளே ...*

ரான் தேவபக்தியுள்ள ஒரு மனிதர். தன் மகன் பின்னிக்கு வேதத்தைக் கற்பித்தார். பின்னி வளர்ந்து வாலிபனானான். கெட்ட நண்பரோடு சேர்ந்து தேவனையும் வேதத்தை வாசிப்பதையும் விட்டுவிட்டான். தகப்பனின் புத்திமதிகள் செவிட்டுக் காதுகளில் விழுந்தன. பில்லி பள்ளி முடித்து கல்லூரிக்குச் சென்றான். கல்லூரிப் படிப்பிற்காக அவன் நரகத்திற்குச் சென்று விடுதியில் தங்கவேண்டியதாயிற்று. தகப்பன் அவனை ஆசீர்வதித்து அவனுக்கு ஒரு பெரிய வேதாகமத்தைப் பரிசளித்து அதைத் தினந்தோறும் வாசிக்கச் சொல்லி அனுப்பிவைத்தார்.

ரான் எல்லா கல்லூரி செலவுகளுக்கும் பணம் அனுப்பி வைப்பார். ஆனால் பின்னிக்குக் கைச்செலவிற்குப் பணம் தேவைப்பட்டது. தகப்பனுக்கு அதைக்குறித்து எழுதும்போதெல்லாம் அவர் பொதுவாக



கடிதமெழுதி, "உன் வேதத்தை வாசி," என்று முடித்துவிடுவார். பணத்தைக் குறித்து கடிதத்தில் ஒன்றும் இருக்காது. ஒரு வருடமாயிற்று. ஒரு நண்பன் பின்னியை நற்செய்திக் கூட்டமொன்றிற்கு அழைத்துச் சென்றான். பின்னி தன் பழைய வாழ்க்கையை நினைத்து அழுது தன் வாழ்வை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தான். ஹாஸ்டலுக்குத் திரும்பிவந்ததும் தன் தகப்பன் கொடுத்த வேதபுத்தகத்தைத் தேடினான். அது ஷெல்பில் தூசியடைந்து இருந்தது.

அவன் வேதத்தைத் திறந்தபோது ஒரு நூறு ரூபாய் நோட்டு கீழே விழுந்தது. அடுத்தப்பக்கத்தில் மற்றொன்று ... மற்றொன்று... மற்றொன்று! பின்னி வேதத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கண்ணீர்விட்டான். அவனுக்குத் தேவையானதெல்லாம் அங்கேயே இருந்திருக்கிறது. அவனோ அதை அறியவில்லை!



வேதம் ஒரு பொக்கிஷம். உங்களுக்குத் தேவையானதெல்லாம் அங்கே இருக்கிறது. வேதத்தை வாசிக்கத் துவங்குங்கள். துவக்கத்தில் புரிவது கடினமாகத் தெரியலாம். ஆனால் புரிந்துகொள்ள ஆண்டவர் உதவி செய்யும்படியாக ஜெபித்துக்கொண்டே விடாமல் தொடருங்கள். வர வர அதன் ஆசீர்வாதத்தை உணருவீர்கள். புதிய ஏற்பாட்டில் துவங்குங்கள். முதல் அத்தியாயம் வாசித்ததும் அங்கே அன்றையத் தேதியை பென்சிலால் எழுதுங்கள். தினமும் தேதியைக் குறியுங்கள். எப்போது புதிய ஏற்பாட்டை முடிக்கிறீர்கள் என்று பார்க்கலாம்!

# 96

## கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

எப்போதும் கடைசி பெஞ்சில் உட்காரும் ஒரு ஏழைப் பெண்மணி ஓர் ஆலயத்தில் இருந்தாள். ஆயர் பிரசங்கிக்கும்போது ஒரு நல்ல குறிப்பு சொல்லும் போதெல்லாம் அவள், "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!" என்று சத்தம் போடுவாள். போதகர் அடுத்த குறிப்பை மறந்து விடுவார், சபையாரும் சலசலப் படைவர். போதகரும் மூப்பரும் இவள், "கர்த்தருக்கு ஸ்தோத் திரம்" சொல்லுவதை நிறுத்த வகை அறியாது திகைத்தனர்.



இறுதியாக அதற்கு ஒரு பரிகாரத்தை யோசித்தனர். அவளுடைய வீட்டைச் சந்தித்து அவளது தேவை என்னவென்று விசாரித்தனர். தனக்கு ஒன்றும் தேவை யில்லை என்றாள். அவர்கள் வற்புறுத்திக் கேட்ட பிறகு தன்னுடைய காலணிகள் பழமையாகிவிட்டதாகவும், இரண்டிலும் கீழே ஓட்டை விழுந்துவிட்டதாகவும் ஒரு புது காலணி இருந்தால் நல்லதெனவும் கூறினாள். ஆகவே அவர்கள் அவளுக்கு ஒரு நல்ல ஜோடி காலணி களை வாங்கிக் கொடுத்தனர். "ஒரே ஒரு காரியம் கேட்டுக் கொள்ளுகிறோம். தயவு செய்து ஆராதனையின்போது 'கர்த்தருக்கு ஸ்தோத்திரம்' என்று சத்தம் போடாதீர்கள்" என்றனர். அரைமனதாய் ஒத்துக்கொண்டாள்.

அடுத்தவாரம், எந்தக் குறுக்கீடும் இருக்காது என்ற நம்பிக் கையோடு போதகர் உற்சாகமாகத் தன் பிரசங்கத்தைத் துவக்கினார். நல்ல நல்ல குறிப்புகள் சொல்லிக்கொண்டே போனார். அந்த அம்மாள் தன்னைக் கட்டுப்படுத்த மிகவும் பாடுபட்டார்கள். இறுதியாக, அவர்



ஒரு சிறந்த குறிப்பைச் சொல்லும்போது அவளால் தன்னை அடக்கிக்கொள்ளவே முடியவில்லை. தன்னுடைய இடத்தில் எழுந்து நின்று தன் காலணிகளை இரண்டு கைகளிலும் உயர்த்திப் பிடித்து, "காலணிகள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!" என்று சத்தமிட்டார்கள்.

வாழ்க்கையில் என்ன சூழ்நிலையானாலும் சரி தேவனுக்கு ஸ்தோத்திரம் சொல்லிக்கொண்டே இருங்கள்.

# 97

## காக்காவா சாக்லேட்டா?

இரண்டு சிறுமிகள் இருந்தனர். அவர்கள் கருப்பாக இருந்தனர். அவர்கள் டெல்லியிலேயே வளர்ந்தார்கள். அவர்களது தாய் அவர்களைப் பூங்காவிற்கு விளையாட அழைத்துச் செல்வாள். வட இந்தியப் பிள்ளைகள் சிகப்பாக இருப்பதால் அவர்கள் இப் பிள்ளைகளைப் பார்த்து "காக்கா, காக்கா" என்று கேலி செய்வர். சிறுமிகள் மனம் நொந்துபோவர்.



சிறுமிகள் இவ்விஷயத்தை ஒரு மிஷனரி அம்மாளிடம் கூறினார்கள். அவர்கள், "ஆகா, நீங்கள் காக்கா அல்ல, சாக்லேட்" என்று சொன்னார்கள். இது பிள்ளைகளின் மனநிலையை முற்றிலும் மாற்றிவிட்டது. அவர்கள் எவ்வித மனப் பாதிப்புமின்றி அருமையானப் பெண் களாக வளர்ந்தனர்.

நம்மை ஒரு நோக்கத்தோடுதான் ஆண்டவர் நாம் இருக்கும் வண்ணமாகப் படைத்திருக்கிறார்.

கலலைப்படாதீர்கள். உங்களை நேசிக்கப் பழகுங்கள். அது தேவனுக்குப் பிரியமாய் இருக்கும். நீங்கள் உங்களைக் காக்கா என்று நினைத்தால் காக்காவாக வளருவீர்கள். நீங்கள் உங்களைச் சாக்லேட் என்று நினைத்தால் சாக்லேட்டாக வளருவீர்கள். எல்லாம் மனநிலையில்தான் இருக்கிறது.

# 98

# பயிற்சி

ஒரு காட்டில் மூன்று காட்டுக் குதிரைகள் வசித்தன. ஒரு நாள் ஒருவன் வந்து அவைகளைப் பிடித்து ஒரு பணக்காரரிடத்தில் விற்றுவிட்டான். எஜமான் அவர்களை லாயத்தில் அடைத்து வைத்தார். அவற்றை மூட்டை தூக்கவும் மக்களைச் சுமக்கவும் வண்டி இழுக்கவும் பழக்கினார். இது வேதனையளித்தபடியால் அவை தம் விதியை நினைத்து அழுதன.

ஒருநாள் லாயத்தின் கதவு திறந்துகிடந்தபடியால் இரண்டு குதிரைகள் ஓடிவிட்டன. சாம்பியன் என்ற மூன்றாம் குதிரை தங்கியிருக்கத் தீர்மானித்தது. மற்ற இரண்டும் சாம்பியனைக் கூப்பிட்டன. ஆனால் சாம்பியன் தன் எஜமானோடு இருக்க உத்தேசிப்பதாகக் கூறியது. ஒரு வருடம் கடந்தது. தேசத்தில் பஞ்சம் வந்தது. காட்டுக்குதிரைகளுக்குத் தண்ணீரோ புல்லோ கிடைக்கவில்லை. அவை மெலிந்து பெலவீனமாயின.





ஒருநாள் அவை சாலையில் குதிரையால் இழுத்துச் செல்லப் பட்டதொரு வண்டியைக் கண்டன. எஜமான் வண்டியை நிறுத்திவிட்டு வேலையாக சற்று தூரம் சென்றுவிட்டார். இரண்டு குதிரைகளும் அருகே சென்று வண்டி இழுப்பது சாம்பியன் என்று கண்டன. அவன் கொழு கொழுவென்று பழபழப்பாக மகிழ்ச்சியாகக் காணப்பட்டான். பஞ்ச காலத்திலும் அவன் எப்படி செழிப்பாக இருக்கிறான் என்று குதிரைகள் கேட்டன. சாம்பியன் சொன்னான், "என் எஜமான் என்னை நேசிக்கிறார், எனக்கு உணவளிக்கிறார், என்னை அருமையாகப் பராமரிக்கிறார். பயிற்சி வேதனையாகவும் கடுமையாகவும் இருந்தது உண்மைதான். ஆனால் இப்போது எவ்வளவு கெம்பீரமாகவும் பயனுள்ளவனாகவும் இருக்கிறேன் பாருங்கள். நீங்கள் ஏன் ஓடிப்போனீர்கள்?" அப்போது எஜமான் வந்து சாம்பியனைத் தட்டிக்கொடுத்து வண்டியை ஓட்டிச் சென்றார். இரண்டு குதிரைகளும் ஓடிப்போய்விடத் தாங்கள் எடுத்த மதியீனமான தீர்மானத்தை நினைத்துக் கலங்கின.

கடவுள் நம்மைப் பயிற்றுவிக்கிறார். அது கடினம்தான், கண்ணீர்தான். ஆனால் அவர் நம்மை நேசிப்பதால்தான் நம்மைத் தண்டித்துத் திருத்துகிறார். பயிற்சி எத்தனை கடினமாயிருந்தாலும் நாம் ஒருபோதும் கடவுளை விட்டு ஓடிப்போகக் கூடாது. அவரது ஒழுங்கிற்கு நாம் அடங்கி இருப்போமானால் பிறருக்கும் இறையரசிற்கும் பயனுள்ளவர்களாவோம்.

# 99

# நரி நண்பர்கள்

ஒரு நரியும் ஓர் ஒட்டகமும் சிநேகிதராயிருந்தனர். ஒருநாள் “இருவரும் ஆற்றைக் கடந்து அப்புறம் போய்ச் சாப்பிடலாமே," என்றது நரி. கரும்புத் தோட்டம் அந்தப்புறம் இருந்தபடியால் ஒட்டகமும் ஒத்துக்கொண்டது. நரிக்கு நீந்தமுடியாததால் ஒட்டகத்தின் முதுகில்

அது ஏறிக்கொண்டு இருவரும் அக்கரை சேர்ந்தனர். நரி ஆற்றங் கரையில் நண்டுகளைப் பிடித்து சாப்பிட்டபோது ஒட்டகம் கரும் பை ரசித்துச் சுவைத்தது.



மத்தியானமானபோது நரிக்கு வயிறு நிறைந்துவிட்டதால் அதற்குப் போகலாம் என்று தோன்றியது. ஆனால் ஒட்டகமோ, "பொறு, எனக்கு இன்னும் வயிறு நிரம்பவில்லை," என்றது. நரி பொறுமையிழந்து தந்திரமாக ஊளையிடத் துவங்கியது. சத்தத்தைக் கேட்ட காவல்காரன் ஓடி வந்தான். ஒட்டகத்தைப் பார்த்த அவன் தன் கம்பால் அதை நையப் புடைத்து விட்டான். பாவம், ஒட்டகம் ஓடோடி நதியைக் கடக்கத் துவங்கியது. நரி சந்தோஷமாகத் தாவி ஒட்டகத்தின் முதுகில் ஏறி உட்கார்ந்துகொண்டது.

ஒட்டகம் கேட்டது, "தம்பி, ஏன் அப்படி என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டாய்?" நரி, "அண்ணா, என்னை மன்னித்துக்கொள். என் வயிறு நிறைந்துவிட்டால் அப்புறம் என்னால் ஊளையிடாமல் இருக்கவே முடியாது. என்னால் அடக்கிக்கொள்ளவே முடியாது," என்றது. ஒட்டகம், "அப்படியா," என்று கேட்டுக்கொண்டது. ஆற்றின் நடுவிற்கு அவர்கள் வந்தவுடன் ஒட்டகம் வேகமாக தன் முதுகைத் குலுக்கத் துவங்கியது. "அண்ணா, அண்ணா, முதுகைக் குலுக்காதே. நான் நீரில் வீழ்ந்து மூழ்கிவிடுவேன்" என்று அலறியது நரி. "மன்னித்துக்கொள் தம்பி. என் வயிறு நிறைந்துவிட்டால் முதுகைக் குலுக்காமல் எனக்கு இருக்க முடியாது" என்றது ஒட்டகம். நரி கீழே விழுந்து செத்துப்போனது.

கெட்ட நண்பர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.




# 100

# WWJD?

விடுமுறை வேதாகமப் பள்ளியில் வாட்சன் தனது இருதயத்தை இயேசுவுக்குக் கொடுத்தான். தனது நண்பர்களில் ஒன்பது பேரை ஆண்டவரிடம் நடத்தினான். தனது நண்பர்களைக் கூட்டி வார மொருமுறை ஜெபிக்கவும் வேதத்தை வாசிக்கவும் உந்தப்பட்டான். புதிய ஏற்பாட்டில் துவங்கினர். இயேசுவின் வாழ்க்கையால் கவரப்பட்டப் பையன்கள் இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்கத் தீர்மானித்தனர். “What Would Jesus Do?” அல்லது “இயேசுவாயிருந்தால் என்ன செய்திருப்பார் **?**” என்ற கேள்வியைக் கேட்க உறுதியான தீர்மானம் எடுத்தனர். கடினமான எந்தச் சூழ்நிலையைச் சந்தித்தாலும் இந்தக் கேள்வியைக் கேட்டு கிடைக்கும் பதிலின்படியே நடக்கத் துவங்கினர். ஒவ்வொரு வாரமும் தங்கள் சாட்சிகளைப் பகிர்ந்துகொள்வர்.

“எனது புதிய ரப்பரை ராகேஷ் எடுத்துக் கொண்டான். எனக்கு வந்த கோபத்தில் அவனது மூக்கைக் குத்தி உடைத்துவிடலாமா என்று எண்ணினேன். பின்பு, “இயேசுவாயிருந்தால் என்ன செய்திருப்பார்?” என்று என்னையே கேட்டுப் பார்த்தேன். நிச்சயமாய் இயேசு ராகேஷை மன்னித்திருப்பார் என்று நினைத்தேன். ஆகவே: பரவாயில்லை ராகேஷ், ரப்பரை நீயே வைத்துக்கொள் என்று சொல்லிவிட்டேன். அதிலிருந்து ராகேஷ் என்னிடம் சிநேகமாயிருக்கிறான். இப்போது இயேசுவைப்பற்றி அவனிடம் சொல்லுகிறேன்” என்றான் குமார்.




“பள்ளிக்குப் போகும் வழி யில் ஒரு ஏழைப் பெண் மணியும் அவளது குழந் தையும் பசியாயிருப்பதைக் கண்டேன். இதயத்தில் WWJD ஒலித்தது. என்னு டைய சாப்பாட்டுப் பொட்ட லத்தை அவளிடம் கொடுத்துவிட்டு அவளுக்கு இயேசுவைப்பற்றிச்

சொன்னேன்," என்றாள் ராதிகா.

சாட்சிகள் பல வந்தன. வாட்சனது தகப்பனாரின் உதவியோடு WWJD என்ற சட்டையில் குத்திக்கொள்ளக் கூடிய பட்டனைச் செய்து அதை சட்டையில் யாவரும் குத்திக்கொண்டனர். அது என்ன? என்று கேட்பவருக்கெல்லாம் சாட்சி பகர்ந்தனர். பலர் இந்தக் குழுவைச் சேர்ந்து கொண்டனர். "இயேசுவாயிருந்தால் என்ன செய்வார் ?" என்ற கைப்பிரதி அச்சடித்து விநியோகித்தனர். அவர்கள் யாவரும் இயேசுவின் திடகாத்திர சீடராக வளர்ந்தனர்.

தலையே போனாலும் இயேசுவின் அடிச்சுவடுகளில் நடந்து அவரது திடகாத்திரமான சீடராக ஆசையுண்டோ ? WWJDஐ நினைத்துக் கொள்ளுங்கள்!



**ஆசிரியரது பிற நூல்கள்—**

- *அவள் தீர்மானங்கள்*
- *இயேசுவின் பின்னே...*
- *உலகில் உத்தமி*
- *குடும்பமே குடும்பம்!*
- *குதூகலக் கிறிஸ்தவம்*
- *சாத்தானுக்கு டாடா*
- *தெபொராளே, விழித்தெழு !*
- *தேவனே, நான் உமதண்டையில்...*
- *பசங்க...பொண்ணுங்க ...*
- *பயனுள்ள பாத்திரம்*
- *பறக்கும் பாவையர்*
- *பகலில் வந்த கனா!*
- *12 பொன் மாதங்கள்*
- *மண்ணிலே வெண்ணிலா*
- *முன்னேறும் கிறிஸ்தவன்*
- *வயது பதினாறிருக்கும்!*
- *வாலிப உலகம்*
- *கண்ணீர் துடைப்போர் யார்?*

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.
இப்புத்தகங்கள் ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் உண்டு.

**Blessing Literature Centre**
**21/11 West Coovam Road**
**Chintadripet**
**Chennai 600 002, India**

*Tel: 00 91 44 28450411*

*<blc@bym-india.org>*

***கிறிஸ்தவ வாழ்வில் மறுமலர்ச்சி பெற***
***இன்றே வாசியுங்கள்...***

ஆசீர்வாதம்

எழுப்புதலுக்கும் நற்செய்திப் பணிக்கும்
அர்ப்பணிக்கப்பட்ட பத்திரிகை!

உங்களை ஆசீர்வதித்து,
உங்களை உங்கள் குடும்பத்திற்கும், சபைக்கும்,
நண்பருக்கும் ஆசீர்வாதமாக்கும் பத்திரிகை!

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒடியா, கன்னடம், குஜராத்தி,
தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா ரூ.100/–
ஆயுள் சந்தா ரூ. 1000/–

நீங்கள் ஆயுள் சந்தாதாரரானால், பணம் பெற்றுக்கொண்ட நாள் முதல் நாங்கள் வெளியிடும் பத்திரிகையையும், புத்தகங்கள் யாவற்றையும் பதினைந்து ஆண்டுகட்கு இலவசமாக அனுப்பிவைப்போம்.

*சந்தா அனுப்பவேண்டிய முகவரி:*

Blessing Youth Mission
Church Colony
Vellore 632 006, India



# ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

எழுப்புதலுக்கும் நற்செய்தி அறிவிப்பிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு
1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத,
ஒரு திருப்பணி

❒

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாடங்கள்,
பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

❒

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு
ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்.

❒

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின்
குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள்,
மருத்துவமனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.

❒

300க்கும் மேற்பட்ட முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம்,
ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒடிசா,
கர்நாடகம், குஜராத், கேரளம், சத்தீஸ்கார், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம்,
மேற்கு வங்கம், தமிழகம் மற்றும் ஜார்கண்ட்
ஆகிய மாநிலங்களிலுள்ள கவனிப்பாரற்ற கிராமங்களிலும்
ஆதிவாசிப் பகுதிகளிலும் சபைகள் நிறுவுதல்.

❒

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒடியா, கன்னடம்,
குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம் ஆகிய
மொழிகளில் *“ஆசீர்வாதம்”* எனும் பத்திரிகை, புத்தகங்கள் மற்றும்
ஒலி-ஒளித்தட்டுகள் வெளியிடுதல்.

❒

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும்
எழுத்தறிவு கற்பித்தல் மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்! ஆதரியுங்கள்!*

BLESSING

**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
**சர்ச் காலனி, வேலூர் 632 006**
**தொலைபேசி: 00 91 416 2242943,2248943**
<hq@bym-india.org>
www.bym-india.org